


கல்கி
நெல்லையில் மின்னலடிக்கும்
அம்மா வாசகங்கள்!
ALKI
.1.98
4.00
நியூ இயர் ஸ்பெஷல் சந்திப்பு:
இனிமைக்கு ஓர் உமா!

அமரர் **கல்கி**யின்

பொன்னியின் செல்வன்

அமோக வரவேற்புடன் அடுத்த இதழில் ஆரம்பம்



● பொன்னியின் செல்வன் – கூடவே அமரர் கல்கியின் நகைச்சுவை, சினிமா, கலை, இலக்கியம், அரசியல் கட்டுரைகள், சொல் ஓவியங்களிலிருந்து ஒரு சுவாரஸ்யமான தொகுப்பு வாரந்தோறும் வரப் போவது அறிந்து மிக்க மகிழ்ச்சி. இன்றைய தலைமுறையினருக்கு இது ஒரு நல்ல வாய்ப்பு.

கோயமுத்தூர் – 6, ஏ.ஜி. கல்யாணசுந்தரம்

● தைத்திருவிழா நன்னாளில் விருந்து கல்கியில் மீண்டும் 'பொன்னியின் செல்வன்' வருகை புரிகிறாரா?! லட்சக்கணக்கான வாசகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்து, மன நிறைவு செய்த கல்கி தலைமைக்கு வாசகர்கள் சார்பாகப் பாராட்டுவதில் பெருமை கொள்கிறேன்.

கும்பகோணம். ஆர். ஷண்முகம்

● பொன்னியின் செல்வன் மீண்டும் ஆரம்பமா! ஆஹா, கல்கி வாசகர்களுக்கு இனிப்பான புத்தாண்டு, பொங்கல் பரிசு! 'வாம் வெல்கம்!'

தூத்துக்குடி. எஸ். ராமசுப்பிரமணியன்

● "பொன்னியின் செல்வன்" மீண்டும் கல்கியில் தொடராக வருவதை அறிந்து மிக மகிழ்ச்சியடைந்தேன். எனது நெருங்கிய உறவினர் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருப்பது போல் இருக்கிறேன். நண்பா! வந்தியத்தேவா விரைந்து வருக!

புதுடெல்லி, கோ. ஸ்ரீதரன்

கடைசி பக்கம் வாருங்கள்...

மழலை இனிமைதான். ஆனாலும் அது எத்தனை வயது வரை குழந்தைகளுக்கு இருக்கலாம்? டாக்டர் அன்னபூரணி பாலனிடம் கேட்டோம்.

குழந்தையின் மழலையே

மனிதன் தனது உணர்வுகளை வாய் மொழியாகவோ, செயல் மூலமோ, ஏன் ஒரு கண்ணசைப்பின் மூலமோ கூட காட்டி விட முடியும். பிறந்த குழந்தை மற்ற எல்லா விதமான திறமைகளையும் நாளாக நாளாக கற்றுத் தெளிந்து, தேர்ச்சியடைவதைப் போலவே மொழியையும் மெள்ள மெள்ளப் பயில்கிறது.

பொதுவாக ஓர் ஆறு மாதக் குழந்தை 'ஆ, ஈ,ஊ' போன்ற ஒலிகளை எழுப்புகிறது. இதைக் கேட்கிற பெற்றோரும், உறவினர்களும் தாமும் அதே போல குழந்தையுடன் பேசி, தம்மை அறியாமலேயே குழந்தையின் பேச்சுத் திறனை வளர்க்கின்றனர். குழந்தையும், சந்தோஷத்துடன் அந்த ஒலிகளை மறுபடியும் மறுபடியும் எழுப்புவதுடன் மேலும் சில பொருள் இல்லாத ஒலிகளையும் "பேச" ஆரம்பிக்கிறது. இது சிறிது சிறிதாய் அதிகரித்து ஒன்று அல்லது ஒன்னரை வயது ஆகும் போது ஈரெழுத்துச் சொற்களைப் பொருளுடன் பேச ஆரம்பிக்கிறது. உதாரணம் தா(த்)தா, ம்மா, ப்பா, பா(ப்)பா...

ஆரம்பத்தில் குழந்தைக்கு ம, ப, ந, க, முதலிய எழுத்துக்கள் சுலபமாகப் பேச வரும். காரணம், இவற்றை உச்சரிக்க, நாக்கை அதிகம் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை.

சொற்களையும், ஒலி வடிவத்தையும் குழந்தை நன்றாகப் புரிந்து கொண்டாலும், சில எழுத்துக்களை, அதனால் பேச முடிவதில்லை. தசைகள், நரம்புகளின் ஒருங்கிணைந்த செயல்பாடு, முழுமையாக வளராத நிலையில் குழந்தை மழலையாய்ப் பேசுகிறது. உதாரணமாக, 'ர' என்று சொல்லிப் பாருங்கள். இதற்கு நுனி நாக்கு மட்டும் லேசாக வளைந்து கொடுக்க வேண்டும். இது முடியாத போது, குழந்தை 'ரயில்' என்பதை 'தயில்' என்று சொல்லும். இதைத்தான் நாம் 'மழலை' என்கிறோம். அதாவது நாக்கைச் சுருட்டி, மடக்கி அல்லது குவித்து எழுப்ப வேண்டிய ஒலிகளின் இடத்தில் அதற்குப் பதிலாக, குழந்தை, தனக்கு வசதியாக, சுலபமாகப் பேசக்கூடிய சில ஒலிகளை மாற்றாகப் பயன்படுத்துகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் இது வேறுபடக்கூடும். சில குழந்தைகளுக்கு 'ச', வேறு சில குழந்தைகளுக்கு 'ட'.

மழலை என்பது இயற்கையான ஒன்று. வளரும் குழந்தை எப்படி தத்தித் தவழ்ந்து, தட்டுத் தடுமாறி, விழுந்து, எழுந்து நிற்பதற்குக் கற்றுக் கொள்ளுகிறதோ, அது போலத்தான் மழலையும், நல்ல பேச்சும்.

பேச்சு என்பது மனிதஇனம் பெற்றுள்ள பெரும் பாக்கியம். மனித இனத்தின் பரிணாம வளர்ச்சியில் மிகக் கடைசியாக வந்த ஒன்று தான் இது. எனவேதான் பேச்சு என்பது முழுமையடைவதற்குக் கொஞ்சம் அதிகமான அவகாசம் தேவைப்படுகிறது. இதிலே ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், ஒரு வயதில் பேச ஆரம்பிக்கிற குழந்தை மூன்று வயதை அடைகிற சமயம், எத்தனை எத்தனை வார்த்தைகளைக் கற்றுக் கொண்டு, வாக்கியங்களாய், இலக்கண சுத்தமாகக் கூட பேசுகிறது என்பதுதான்.

எத்தனை வயது வரை மழலை நார்மல்? இது அடுத்து எழும் கேள்வி. இதை இத்தனை வயது, மாதம் என்று ஒட்டுமொத்த விதியாக வரையறுப்பது கடினம். சில குழந்தைகளுக்கு, மழலையற்ற, தெளிவான பேச்சு சீக்கிரமே வந்துவிடும். மூன்று வயது முடியுமுன்பே முத்து முத்தாய்ப் பேசும் குழந்தைகளும் இருக்கிறார்கள். பொதுவாக நாலு வயதில் மழலை குறைய ஆரம்பித்து விடும். ஐந்து வயதுக்கு மேல் மழலை இருக்காது.

அந்தக் காலகட்டத்தில், குழந்தைகளிடம் கோபம் காட்டாமல், சரியான உச்சரிப்பு முறையைப் பொறுமையாகப் பயிற்றுவிக்க வேண்டும். ஐந்து வயதுக்கு மேலும் மழலை நீடித்தால், பேச்சுப் பயிற்சியாளர் (ஸ்பீச் தெரபிஸ்ட்) உதவியை நாடலாம்.

மழலையின் காலம் கடந்த நீடிப்பிற்கு,

குடும்ப மரபும் ஒரு காரணமாய் இருக்கக்கூடும். சில குடும்பங்களில் மூன்று வயது வரை மழலையாய், ஓரிரு வார்த்தைகளே பேசுகிற குழந்தைகள், நாலு வயதாகும் போது, ரொம்ப அழகாக, விரைவாகப் பேச ஆரம்பித்து விடும். இதை உணராமல், குழந்தைகளைச் சோம்பேறி, மக்கு என்று திட்டக் கூடாது. அப்புறம் குழந்தைகள் வாய் திறந்து பேசவே பயப்படும். அதோடு மட்டுமின்றி, பெற்றோரின் அன்பும், அரவணைப்பும், கிடைக்கப் பெறாத குழந்தைகளுக்குக் கூட மழலை நீடிக்க வாய்ப்பு உண்டு.

இவை எல்லாமே நல்ல மூளை வளர்ச்சி கொண்ட குழந்தைகள் மழலை பேசுவது தொடர்பானவைதான். அதே சமயம் மூளை வளர்ச்சிக் குறைபாடு கொண்ட குழந்தையின் பேச்சுத்திறன் குறைபாட்டுடன் மழலையை ஒப்பிட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

அதை எப்படித் தெரிந்து கொள்ளுவது?

மழலையாக ஒரு குழந்தை பேசினாலும் கூட, அது நாம்



பிரச்னையானால்?

சொல்வதை சரியாகப் புரிந்து கொள்ளும். அது பேசுவது வேண்டுமானால் மற்றவர்களுக்குப் புரியாமல் இருக்கும். அதுபோன்ற சமயங்களில் தன் செயல், சைகை மூலமாக, தான் சொல்ல வந்ததைக் குழந்தை புரியவைக்க முயற்சி செய்யும். உதாரணமாக, கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போதல், பாட்டிலைக் காண்பிப்பது, செருப்பை மாட்டிக் கொண்டு, கதவை நோக்கிக் கைகாட்டுவது... போன்ற சைகைகள் மூலம் புரிய வைக்கும். குழந்தையின் மொழியில் எழுத்துக்களின் ஒலி வடிவம் நமக்குப் புரியாமல் போகலாமேயொழிய, எண்ணத்தை, உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒலியின் ஏற்ற இறக்கங்கள் சரியாகவே இருக்கும்.

அறிவுத்திறன், நினைவாற்றல் ஆகியவை நார்மலாக இருந்து, ஆனாலும் பள்ளி செல்லும் வயதிலும் மழலை நீடித்தால், பார்த்து எழுதுதல், பார்த்துப் படித்தல், கேட்டு எழுதுதல், எண்கள் பற்றிய அறிவு போன்றவற்றில் தனித்தனியே குழந்தைக்கு உள்ள திறமையைச் சோதித்துக் குறைபாட்டைக் கண்டறிய முடியும்.

மூளை வளர்ச்சிக் குறைபாடு காரணமாக மழலை பேசும் குழந்தைக்கு அதற்குரிய ஸ்பெஷலிஸ்டுகள், பள்ளிகள் மூலமாகச் சிகிச்சையும் பயிற்சியும் அளிப்பது அவசியம். ●

சந்திப்பு : **கௌதம்**

"எக்ஸ்கியூஸ் மி. நீங்க எந்த காலேஜ்?"– என்று சில டீன் ஏஜ் பெண்கள் கேட்க–

"காலேஜா... நானா...?" என்று நமுட்டுச் சிரிப்புடன் அந்தப் பெண் பதில் சொல்லும்போது, "மம்மீ..." என்று ஏழெட்டு வயதுப் பெண் குழந்தையொன்று வந்து கட்டிக் கொள்ளுகிற விளம்பரத்தை நீங்கள் பார்த்திருக்காமல் இருக்க முடியாது.

அதே கதைதான் சன் டீ.வி. நிகழ்ச்சித் தொகுப்பாளர் உமா பத்மநாபன் விஷயத்திலும்! இவர் திருமதி என்பதும் எட்டாம் வகுப்புப் படிக்கும் சரண்யாவுக்குத் தாய் என்பதும் பலராலும் நம்ப முடியாத ஒரு விஷயம்தான்.

இதை விடவும் நம்ப முடியாத இன்னொரு விஷயம், தமிழை இத்தனை தெளிவாக உச்சரிக்கும் இவரை நிகழ்ச்சித் தொகுப்பாளராகத் தேர்ந்தெடுத்திருப்பது! எப்படி என்று கேட்டபோது, "சன் டீ.வி.யிலெல்லாம் தெளிவான உச்சரிப்பாளர்களைத்தானே தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். நீங்கள் கிண்டலடிப்பதுபோல் எங்கள் 'சன்'னில் தமிழை மழலையாகக் கொலை செய்யும் ஒரு தொகுப்பாளரையாவது காட்ட முடியுமா, என்ன?" என்று கோபப்படாமல் கேட்கிறார் உமா.

"எந்தவொரு விஷயத்தையும் குறிப்பாக நெகடிவ் விஷயங்களைக் கூட அதெப்படி உங்களால் ரொம்பவும் 'சாப்ட்'ஆகச் சொல்ல முடிகிறது?"

"கடுமையான முக பாவங்களுடன் எதற்காகச் சொல்ல வேண்டும்?" என்று நம்மைத் திருப்பிக் கேட்கிற உமா, "முன்பு நான் சினிமா விமர்சனங்களைப் படிக்கிறபோது கூட ஜாக்கிரதையாகத்தான் படிப்பேன். கடைசியில் நச்சென்று விமர்சனத்தை முடிக்க வேண்டும் என்பதற்காக 'இது சரி, அது சரி என்றாலும் இது சரியில்லை' என்று எழுதிக் கொடுத்திருப்பார்கள். படிக்கிறபோது நான் அதை 'இது சரியில்லை. அது சரியில்லை என்றாலும் இது சரி' என்று நெகடிவ் விஷயங்களை முன்னால் படித்துவிட்டு, பாசிடிவ் விஷயத்தைக் கடைசியில் சொல்லி முடிப்பேன். இந்த பாசிடிவ் அப்ரோச் அதாவது இனிமையான அணுகுமுறை எனக்குள் இயல்பாகவே இருக்கிற விஷயமே தவிர, வலிந்து திணித்துக் கொண்ட விஷயம் அல்ல! என் குடும்பத்திலுள்ள அனைவரும் என்னைப் போலவே இருப்பதால் எனது இயல்பு பாதிக்கப்படாமலும் இருக்கிறது. என் மகள் கூட 'இந்தப் புடைவை உனக்கு நல்லாத்தான் இருக்கு. ஆனாலும் அது மாதிரி இல்லை!' என்பது போல் பாசிடிவ்வாகத் தான் விமர்சனம் செய்வாள். இது மாதிரியான விஷயங்களுக்கெல்லாம் எங்கள் எம்.டி. (கலாநிதி மாறன்)



முழு சுதந்தரம் கொடுத்திருக்கிறார். அதனால்தான் என் இயல்பு மாறாமல் செய்ய முடிகிறது!''என்கிறார் இயல்பான சிரிப்புடன்.

உமாவின் நிகழ்ச்சித் தொகுப்பு மற்றவர்களுக்கு இனிமை என்பது ஒரு புறமிருக்கட்டும்; இவர் இனிமையாக நினைக்கும் நிகழ்ச்சியோ, நபரோ உண்டா?

''சோ அவர்கள்தான்!'' என்கிறார் சடக்கென்று. ''அவர் ஓர் அரசியல் விமர்சகர். என்றா



மகள் சரண்யாவுடன்...

இனிமைதான் எனது இயல்பு!

லும் எங்களது 'வணக்கம் தமிழகம்' நிகழ்ச்சிக்கு அவரை விருந்தினராக அழைத்து, அரசியல் என்பது துளியும் இல்லாமல், அவருடன் நாற்பது நிமிடங்கள் உரையாடியது கடந்த ஆண்டில் ஓர் இனிமையான அனுபவம். நேயர்களிடமும் எக்கச்சக்க வரவேற்பு!'' என்ற உமாவை "சமயம் கிடைக்கிறபோதெல்லாம் பெண்களை மட்டம் தட்டிக்கொண்டே இருப்பவராயிற்றே சோ! அப்படியிருந்துமா நீங்கள் அவரைப் புகழ்கிறீர்கள்?'' என்று சீண்டிப் பார்த்தும் பயனில்லை.

''பெண்களைப் பற்றிய மோசமான கருத்துக்களை மனதுக்குள் வைத்துக் கொண்டு வெளியில் புகழ்வதைக் காட்டிலும் மனத்தில் இருப்பதை ஒளிவு மறைவில்லாமல் சொல்கிறாரே, சோ! அது பாராட்டுக்குரிய விஷயம் தானே!'' என்று அமைதியாகச் சொல்கிறார்.

உமாவின் சன் டி.வி. அரங்கேற்றம் நடந்தது 1994 மே முதல் தேதியில். ''அதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்புதான் எனக்கு டெஸ்ட் நடத்தினார்கள். உடனடியாக ஓ.கே. சொல்லிவிட்டார்கள். டெஸ்டுக்காக நான் செய்த நிகழ்ச்சி அறிவிப்பையே மே முதல் தேதியன்று ஒளிபரப்பினார்கள். அநேகமாக டெஸ்டின் போது ரெகார்ட் செய்த நிகழ்ச்சி அறிவிப்பே ஒளிபரப்புச் செய்யப்பட்டது என்னுடையதாகத்தான் இருக்கும்!'' என்கிறார் சந்தோஷத்துடன்.

நேயர்கள் டெலிபோனில் விரும்பிக் கேட்கிற சினிமா பாடல்களை, முதன் முதலில் மணிலாவிலிருந்து நேரடியாக சன் டி.வி. ஒளிபரப்பியபோது, நிகழ்ச்சித் தொகுப்பாளராக இருந்தவர் இந்த உமாதான். ''நேரடி ஒளிபரப்பில் இருக்கிற பலவிதமான சிக்கல்களை அப்போதுதான் நான் உணர்ந்தேன். அது சரஸ்வதி பூஜை சமயம். துபாயிலிருந்து ஒரு

நேயர் 'லைவ்'வாக என்னிடம் பேசினார்.'என்ன உங்க வீட்டுல சரஸ்வதி பூஜையெல்லாம் ஆச்சா?' என்று கேட்டேன். அவர் அப்போதுதான் அவரது பெயரைச் சொன்னார். அவர் ஒரு முஸ்லிம்! உடனடியாக, 'நீங்கள் கொண்டாடாவிட்டால் என்ன? பக்கத்திலுள்ள இந்து நண்பர்கள் வீடுகளுக்குச் சென்றிருப்பீர்களே, அங்கெல்லாம் நன்றாகக் கொண்டாடினார்களா?' என்று நான் சமயோசிதமாகச் சமாளிக்க, அவரும் 'ஆமாம். நாங்களெல்லாம் நல்ல நண்பர்கள் தான். நன்றாகக் கொண்டாடினார்கள்!' என்று சொல்ல, நிகழ்ச்சி நல்லபடியாக முடிந்தது!" என்கிறார்.

இதே மாதிரி, சன் டீ.வியின் முதல் செய்தி வாசிப்பாளர் என்கிற பெருமையும் உமாவுக்கு உண்டு. "செய்தி வாசிப்பது தவிர, மற்ற எல்லா நிகழ்ச்சித் தொகுப்புக்கான 'ஸ்கிரிப்ட்'டையும் மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டுதான் சொல்ல வேண்டும். இதன் காரணமாகவே, நிகழ்ச்சி அறிவிப்பாளர்களுக்கான வாய்ப்புக் கேட்டு வரும் பல பெண்கள், 'அடேயப்பா! இதில் இத்தனை கஷ்டங்கள் இருக்கா?' என்று மறுபடியும் வராமலேயே திரும்பிப் போய்விடுகிறார்கள். கொஞ்சம் கூடக் கஷ்டமே இல்லாமல் இவர்களுக்கு என்ன வேலை கிடைக்குமோ தெரியவில்லை!" என்று ஆச்சரியப்படும் இவர், எஸ்.ஐ.இ.டி.யில் பி.காம் படித்தவர். கூடவே கர்நாடக சங்கீதமும்.

"படிப்பு முடிந்த கையோடு எனக்குத் திருமணமாகிவிட்டது. கணவரின் வேலை காரணமாக டெல்லி, திருச்சி என்று சுற்றிய லைந்துவிட்டு, மறுபடியும் சென்னைக்கு வரப் பத்தாண்டுகள் ஆகிவிட்டன. குழந்தைகளுக்குத் தாயின் அண்மையும் கவனிப்பும் அவசியம் தேவை என்று நான் கருதுவதால், திருமணமான பத்தாண்டுகளுக்குப் பிறகுதான் சன் டீ.வி.க்கே விண்ணப்பித்தேன். பேப்பரில் வந்திருந்த சன் டீ.வி.யின் விளம்பரத்தை என்னிடம் காட்டி விண்ணப்பிக்கச் செய்ததே என் கணவர்தான் என்பதால் நானும் உற்சாகத்தோடு விண்ணப்பித்தேன்!" என்று சொல்லும் உமா, பக்திப் பாடல்களைப் பாடி அதை கேசட்டாகவும் வெளியிட்டிருக்கிறார்.

"நான் பாடுவேன் என்பதையறிந்த இசையமைப்பாளர் தேவா, சினிமாவில் பாட அழைத்துக் கொண்டிருக்கிறார்!"

"பாடுவீர்களா?"

"ம்..." ●

— பிரின்ஸ்

அட்டை வண்ணப்படம், படங்கள்: யோகா

காதில் விழுந்தவை:

● அஇஅதிமுக. தலைமை நிலையத்தில் தினசரி கோலாகலம்தான். கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் வருவதும் போவதும் தவிர, 'மறுபடியும் மனம் திருந்திய மைந்தர்களாக' பழைய பிரமுகர்கள் மீண்டும் கட்சியில் சேர்வதுமாக, ஒரே உற்சாகம்தான். எப்படியும் இரண்டு நாட்களுக்கொருமுறை ஜெ. தலைமை நிலையத்துக்கு விசிட் அடித்து விடுகிறார். "ரேஸின் துவக்கத்திலேயே எங்கள் தலைவிதான் முன்னணியில் இருக்கிறார்!" என்றார் தலைமை நிலையச் செயலாளர் ஒருவர்.

அதே சமயம் அறிவாலயத்திலும் சத்தியமூர்த்தி பவனிலும், டல்லடிப்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. கூட்டணி தொடரும் என்று அறிவித்தது மட்டுமல்லாமல், பேச்சு வார்த்தைக்கு மூன்று பேர் கொண்ட குழுவையும் கலைஞர் அமைத்த பின்பும் மூப்பனார் தரப்பிலிருந்து, காட்டப்படும் மௌனத்தால் எந்த முன்னேற்றமும் இல்லை. "சென்ற 1996 சட்டமன்றத் தேர்தலின் போது அறிவாலயத்தில் தொண்டர்கள் உற்சாகமாகக் கூடினர். ஆனால் இந்த முறை, "மூப்பனாரின் மௌனத்தால் ஆரம்ப நிலையிலேயே தடுமாறிக் கொண்டிருக்கிறோம். இன்னமும் சொல்லப் போனால், பா.ஜ.க. – அதிமுக. கூட்டு காரணமாக, இந்தத் தேர்தலில்தான் அதிக உழைப்பையும், ஒற்றுமையையும் காட்டிச் செயல்பட வேண்டியிருக்கிறது. மூப்பனார் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்வது நாட்டுக்கு நல்லது. விருப்பமில்லாவிட்டால், உடனடியாக அறிக்கை விட்டு விட்டு விலகி விடட்டும். நாங்கள் எங்களால் முடிந்த அளவு பார்த்துக் கொள்கிறோம். கடைசி நேரம் வரை காக்கச் செய்து விட்டு கழுத்தையறுக்க வேண்டாம்!" என்று நம்மிடம் மனம் விட்டுப் புலம்பினார் சென்னைக்கு வந்திருந்த தென் மாவட்டத் தலைவர் ஒருவர்.

நெல்லை மாநாட்டு விளம்பரங்களுக்காக அதிமுக. சுவர்களைப் பிடித்துள்ளது. அதே சுவர்களில் தேர்தல் விளம்பரங்களும் எழுதப்படும் ஆதலால் தங்களுக்கு விளம்பரம் எழுத சுவர் கூடக் கிடைக்காது என்பது திமுக.வினரின் கவலை. மூப்பனாரின் மௌனம் நீடிக்கும் பட்சத்தில் திமுக. தரப்பிலிருந்து அதிர்ச்சி வைத்தியம்

செய்யப்படலாம் என்றும் உடன்பிறப்புகள் கிசுகிசுத்துக் கொள்கிறார்கள்.



● அம்மா பிரசாரம் செய்ய ஆறு ஸீட்டுகள் கொண்ட ஹெலிகாப்டரை ஏற்பாடு செய்து தர பா.ஜ.க. ஒப்புக் கொண்டிருக்கிறதாம். தாலுக்கா தலைநகர்களை ஒரு மாதத்துக்குள் மூன்று முறை டச் செய்து பிரசாரம் செய்யக்கூடிய அளவுக்குப் பயணத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதாம். இது தவிர வீடியோ வேன்கள், ஜீப்புகள் ஆகியனவும் வடக்கேயிருந்து வர இருக்கின்றன. கோர்ட், கேஸ் விவகாரத்தில் சொத்துக்களும், வங்கிக் கணக்குகளும் முடக்கப்பட்ட நிலையில் பா.ஜ.க.வின் நெருக்கத்தால் நிதி பற்றி எந்தக் கவலையுமின்றி இருக்கிறாராம் ஜெ. எனவே அவர்களுக்கு ஒதுக்கப்படும் ஸீட்டுகள் விஷயத்தில் தாராளமாகவே இருப்பாராம்.

அம்மாவுக்கு வரும் ஹெலிகாப்டர்!

● கூட்டணிக் கட்சிகளுடன பேச்சு வார்த்தை நடத்த அ.தி.மு.க. தரப்பில் நாவலர், சேடப்பட்டி என ஐந்து பேர் கொண்ட கமிட்டி போடப்பட்டிருக்கிறதல்லவா. ம.தி.மு.க. - பா.ஜ.க. ஆகிய கட்சிகளின் குழுக்கள் வரும்போது தங்களுக்கு எத்தனை தொகுதிகள் ஒதுக்க வேண்டும் என்பதைப் புள்ளி விவரங்களுடனும் தகுந்த ஆதாரங்களுடனும் எடுத்து வைக்கின்றனராம். ஆனால் அ.தி.மு.க. தரப்பிலிருந்து எந்தப் பேச்சும் பதிலும் வருவதில்லையாம். கடைசியாக, ''நீங்க சொன்னதை அம்மாவிடம் சொல்லுகிறோம். அம்மா 'பார்த்து'ச் செய்வாங்க!'' என்று மட்டும் சொல்லப்படுகிறதாம். ''இதுக்கு எதுக்கு ஒரு குழு? பேசாம அந்த அம்மாகிட்டேயே சொல்லிடலாமே!'' என்கிறார் வாய் வலிக்கப் பேசிய கூட்டணிக் கட்சியின் பிரமுகர் ஒருவர்.''

● தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, செயற்குழு முடிந்த பிறகு நிருபர்களைச் சந்தித்தார். எடுத்தவுடன் ''2001-ல் தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி பீடம் ஏறும்'' என்றவுடன் நிருபர்கள் அடக்க முடியாமல் சிரித்து விட்டனர்.

● மீண்டும் அம்மாவிடம் சரண்டரான முத்துசாமியும் கண்ணப்பனும் தினசரி புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். தங்களுக்கு வேண்டிய தொண்டர்களைத் தலைமை நிலையத்துக்கு அனுப்பி, அங்கே யார் வருகிறார்கள். என்ன நடக்கிறது, என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்கிறார்கள். 'நெல்லை மாநாட்டுப் பணிகள் சிலவற்றை நம்மிடம் ஒப்படைப்பார் அம்மா' என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் போயஸ் தோட்டத்திலிருந்து எந்தத் தகவலும் வருவதில்லையாம். 'ஒரே ஒருநாள் மட்டும் மாநாட்டில் தலை காட்டி விட்டு வந்து விடலாம்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களாம்.

– தில்லப்பா

‘ஜகஜ்ஜால ஜக்கி..’ ‘ஜக்கி கொலைகாரரா இறைதூதரா...?’ – என்றெல்லாம் சமீபத்தில் பத்திரிகைகளில் சர்ச்சைக்குட்படுத்தப்பட்டு, ‘தம் மனைவியைக் கொலை செய்து எரித்த ஜக்கி அமெரிக்காவிற்குத் தப்பி ஓட்டம் என கட்டம் கட்டிப் பிரசுரிக்கப்பட்ட கோவை பூண்டி ஆசிரம குருஜி ஜக்கி வாசுதேவ் நம் கல்கிக்கெனவே பிரத்யேகப் பேட்டி தந்தார். நமது எல்லாக் கேள்விகளுக்கும் சாந்தமான புன்னகையுடன் பதில் சொன்னார்...

கல்கி : தங்களைப் பற்றின சர்ச்சைகள் கிளம்பிய சமயம்...

ஜக்கி வாசுதேவ் : சர்ச்சையா..? கிளப்பியது இந்த பத்திரிகைகள்தானே..? ‘இன்வெஷ்டிகேஷன்’ என்கிற பெயரில் பொய்களையே எழுதின. நிஜத்தை நம்பவே மறுக்கிறார்கள். கெட்டதையே போதித்து ஜனங்களை கெட்டது விரும்பிகளாக ஆக்கி விட்டன. இதில் கல்கியும் வதந்திகளை நம்பி எழுதும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

கல்கி : நாங்கள் எப்படியெதுவும் எழுதவில்லையே! பொது மக்களின் கருத்துக்களைக் கேட்டு, உங்கள் ஆசிரமத்திலுள்ளவர்களின் கருத்துக்களையும் கேட்க வந்த போது அனுமதி மறுக்கப்பட்டது. ஆசிரமவாசிகளும் மௌனம் காத்தனர். இந்நிலையில் உள்ளதை உள்ளபடி காட்டும் கடமை எங்களுக்கு உண்டே... அப்படியும் உங்கள் தரப்பில் இருவரை பேட்டி கண்டு நடு நிலையோடுதானே எழுதியிருந்தோம்...!

ஜக்கி : இங்கே கொடுக்கும் தீர்த்தம் சாப்பிட்டதும் போதை வந்து விடுவதாகவும், மயக்க நிலையில் 13 நாட்கள் ஆடிப்பாடுவதாகவும் எழுதியிருந்தீர்களே... இங்கே தீர்த்தம், பிரசாதம் ஏதும் இல்லை. மாறாக, ஏராளமானவர்கள் பெரிய பெரிய மருத்துவமனைகளால் கூட தீர்க்க முடியாத நோயை இங்கு வந்து யோகா மூலம் தீர்த்துப்போயிருக்கின்றனர்.

“பத்திரிகைகள் என்னை வேதனைப் படுத்துகின்றன!”



• மகளுடன் ஜக்கி

கல்கி : 13 நாள் (பல்வேறு மையங்களில்) கிளாஸிற்குப் பிறகு இங்கு வந்து மூன்று நாள் தங்கிப் பயிற்சி பெற பெண்களை வற்புறுத்துகிறீர்களாமே...?

ஜக்கி : யாரையுமே நாங்கள் வற்புறுத்துவதில்லை. அது அவர





• ஆசிரமத்தில்...

வர் இஷ்டம். ஆண்-பெண்களுக்கு இங்கு தனித்தனியாகத்தான் வகுப்பு. இரவில் பிரம்மச்சாரிகளே தனித்தனியாகத்தான் தங்குகின்றனர். 50 ஆயிரம் பேருக்கு மேல் யோகா கற்றுக் கொண்ட மையம் இது. அப்படியேதும் அசம்பாவிதம் நடந்திருந்தால் அதில் ஒருவர் கூடவா இந்தப் பத்திரிகைகளுக்கு (சாட்சிக்குக்) கிடைக்காமல் இருந்திருப்பர்? இங்கிருக்கும் பிரம்மச் சாரிகள் (23 பேரில் 6 பேர் பெண்கள்) கூட, விருப்பப்பட்டு வந்த ஆயிரக்கணக்கானோரில் மிக நுணுக்கமாகத் தேர்வு செய்யப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே. அதிலும் எல்லாம் மெத்தப் படித்த (முதுகலை) இளைஞர்களே...

கல்கி : விசாரித்த அளவில் எல்லாமே 25-30 வயதினர்தாம்... அவர்களை மயக்கி, வசப்படுத்தி, அவர்தம் பெற்றோர்களின் கனவுகளையும் எதிர்பார்ப்புகளையும் பொசுக்கியுள்ளீர்களே?

ஜக்கி : ஒரு விவேகானந்தரைப் பற்றி பெருமை கொள்கிறீர்கள். உங்கள் வீட்டில் ஒரு விவேகானந்தர் உருவானால் மட்டும் ஏன் இந்த எதிர்ப்பு...? காசுதான் பிரதானம் என்று நினைக்கிற இந்த உலகில் இங்கே ஒரு பத்துப் பேராவது 'நான்' என்று நினைக்காமல் ஜனங்களுக்கு ஏதும் செய்யலாம் இல்லியா? விழிப்புணர்ச்சி ஏற்படுத்தலாம் இல்லியா? நூறு இளைஞர்களைக் கேட்டார் விவேகானந்தர். அது மாதிரி சில இளைஞர்களையாவது இங்கு உருவாக்கியுள்ளோம் என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். அதே சமயம் 'ஜக்கியினால் இப்படி ஆகி விட்டது' என்று எங்களுக்கு எதிராய் இங்கிருந்து சென்றவர் வந்து ஆதாரத்தோடு குற்றம்சாட்டினால், இந்த ஆசிரமத்தையே மூடி விடவும் தயாராயுள்ளேன்.

கல்கி : சமூக விழிப்புணர்வுக்கு யோகா உதவும் என்கிறீர்களா?

ஜக்கி : நிச்சயமாக. சமூக ஒழுங்குக்கு அன்பும் அமைதியும்தான் மூலம். இதை யோகா தருகிறது. இதனால் எத்தனையோ குடும்பங்கள் சிறப்பாயிருக்கின்றன. பல பத்திரிகையாளர்கள், தொழிலதிபர்கள், அறிஞர்கள்.. ஏன் ஜாதி, மதம் கடந்து பல முஸ்லீம் சகோதரர்கள் கூட இங்கு பயிற்சி பெற்றுச் சென்றிருக்கின்றனர்.

கல்கி : இந்தப் பகுதியில் உள்ள ஒருவர்தான் உங்களுக்கு எதிராக...?

ஜக்கி : ஆசிரம ஓட்டி தாங்காமல் தோட்டத்தை விற்று விட்டுப் போனதாகக் குறிப்பிட்டிருந்தீர்களே... அவர்தானே? அவர் நிலத்தை விற்றது அவர் பணத்தேவைக்காக. இது வனத்துறைக்கு உட்பட்ட பகுதி. இதில் மான் வேட்டையாடுவது மரங்களை வெட்டுவதும் (சந்தன மரம்) யானைகளைக் கொல்வதும் அவர்களுடைய செயல், இயல்பு. குடிப்

பதும், ஆடுவதும்... இந்த வழியில் பாருங்கள்... தெரு விளக்குகள் எல்லாம் துப்பாக்கி 'புல்லட்'டுகளால் உடைபட்டிருக்கும். எல்லாம் இவர்கள் வேலை. வெளிச்சம் ஆகாது இவர்களுக்கு. நானும் 'World wild life member' தான். வனத்துறை அதிகாரிகளிடமே இவர்கள் செயல் குறித்துப் பேசப் போக விளைந்த பகை. இந்த ஆசிரமத்தையே இங்கிருந்து காலி செய்ய என்னென்னவோ செய்து பார்த்தார் அவர். கடைசியாகக் கையாண்டதுதான் இந்த அவதூறு கிளப்பும் முயற்சி என நினைக்கிறேன். பல பத்திரிக்கைகளுக்கும் இவரேதான் தகவல் கொடுத்தார் என்றும் தகவல்...

கல்கி : சரி ஒருவர் கூறுவதை விடுங்கள்... பலருமா இப்படிக் கூறுவார்கள்..?

ஜக்கி : அவரிடம் வாங்கிச் சாப்பிடுபவர்கள், மான்கறி வேட்டையாடிப் பங்கு போட்டுக் கொள்பவர்களெல்லாம் வேறெப்படிச் சொல்வார்கள்...?

கல்கி : கூடு விட்டுக் கூடு பாய்தல், மெஸ்மெரிசம், ஹிப்னாடிசம்... பூர்வ ஜென்மத்தைக் காட்டுவது என்பதெல்லாம்..?

ஜக்கி : நான் கற்றதும், இங்கு கற்றுக் கொடுப்பதும் அதுவல்ல. சாமியார் என்பது கூட எனக்குப் பொருந்தாது. இங்கு என் மகள் (13 வயது ராதா-ஊட்டியில் படிக்கிறாள்) உட்பட எல்லோரும் என்னை 'ஜஹி' என்றுதான் அழைக்கின்றனர். நாங்கள் நடத்துவது (22 இடங்கள்) யோகா மட்டுமே. இந்த ஆசிரமம் கூட யோகா மையமேயொழிய சாமியார் குடில் அல்ல.

கல்கி : ஆசிரமத்தில் கொண்டாடப்படும் விசேஷ தினங்களில் நாய், நரி, புலி, கரடி கத்துகிற மாதிரியெல்லாம் சத்தம் வருவதாக-அக்கம் பக்கம் கூறுகின்றனரே..?

ஜக்கி : உங்களுக்குள் ஒரு மிருகம் இல்லையா...? நாய் புத்தி, குரங்கு புத்தி மாதிரி ஏதாவது... தியானத்தின் போது அது எப்படி வெளிப்படும் என்பதெல்லாம் அவரவர் உணர முடியாது. ஆழ்நிலையில் உள்ளூர இருக்கும் குணாதிசயம் எப்படி வேண்டுமானாலும் வெளியேறலாம். அப்படி அது வெளியேறும் கணத்தில் அதோடு மிருகத்தன்மையும் வெளியேறி விடுகிறது. ரமணர், வேதாத்ரி போன்ற மகரிஷிகளின் கூற்றுக்களை இதற்கு மேற்கோள் கொண்டு பாருங்கள் புரியும்.

கல்கி : உங்கள் மனைவி சாவின் மர்மம்..?

ஜக்கி : அவள் சமாதியடைந்தது மகோன்னதம். யோகாவின் மூலம் எல்லாம் மறந்து என்னோடு ஐக்கியமானவள். கணவன் என்பதை விட என்னைக் குருவாகக் கொண்டிருந்தாள். ஆசிரமத்தில் அனைவருக்கும் தாய். சமாதியடைவதற்கு ஆறுமாதம் முன்பிருந்தே 'நான் தியானலிங்கம் பிரதிஷ்டை செய்ததும் சமாதியாவேன்' என்று எல்லோரிடமும் சொல்லி வந்திருக்கிறாள். (தியானலிங்கம் பிப்ரவரி 1997ல் பிரதிஷ்டை என ஏற்பாடாகியிருந்ததாம்). இது எனக்குத் தெரிய வந்தபோது, அவள் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, குழந்தை நிமித்தம் இன்னும் இரண்டு வருஷம் தள்ளி வைத்துக் கொள்ளக் கூடாதா என்று கேட்டேன். அவள் மறுத்து, 'உடல், பொருள், உள்ளம்.. எல்லாம் இப்போதுதான் சரியாக உள்ளது' என்றாள். பிப்ரவரி 22-ல் போவது என்று சொல்லி வந்தவள், அதற்கு முன்னரே ஜனவரி - 23 மாலை ஆறு மணிக்கு பக்தியில் சமாதியானாள். சமாதியாவதில் யோகா, மனோசாந்தி, பக்தி என மூன்று நிலைகள் உள்ளன. இதில் பக்தியில் கரைவதுதான் அதிகம். இது ஒரு பிரமாதமான விஷயம். பெரிய மகான்களுக்கெல்லாம் கிடைத்த பாக்கியம் இவளுக்குக் கிடைத்திருக்கிறது. இதைப் போய் அசிங்கப்படுத்தி விட்டனர்.

கல்கி : மாமனார் ரிப்போர்ட்... போலீஸ் இன்வெஸ்டிகேஷன் எல்லாம்..?

ஜக்கி : அதுதான் எனக்கும் புரியவில்லை. அவர் என்னை மருமகன் மாதிரி நடத்தவில்லை. எப்பவும் வயது வித்தியாசம் பார்க்காமல் என்னிடம் ஆசீர்வாதம் வாங்கற மனுஷன். விஜி சமாதியானவுடனே ட்ரை பண்ணி, எஸ்.டி.டி.யில் முக்கால் மணி நேரம் கழித்துக் கிடைத்தார். அதிகாலை மூன்றே முக்காலுக்கு அடக்கம்; வாங்கன்னு சொன்னோம். பெங்களூர் தாண்டியெல்லாம் பலரும் வந்து விட இவர்களைக் காணோம். வேறு வழியில்லாது 2000 பேர் முன்னிலையில் காலை ஆறு மணிக்குத் தகனம் செய்தோம். அடுத்த நாள் பதினொரு மணிக்கு வந்தவர் அசிங்கமாய்ப் பேசினார். பெற்றவர்களுக்குள்ள இயல்பான ஆக்ரோஷம்னு

எடுத்துக்கிட்டோம். போகும் போது சமாதானமாத்தான் போனார். இடையில் எங்களுக்குள் நல் உறவுதான் இருந்தது. சுமார் எட்டு மாதம் கழித்து, என் மீது மாமனார் புகார் கொடுத்திருப்பதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டிருப்பதாக நண்பர் சொன்னார். அப்போதே மாமனாருக்கு போன் செய்து கேட்க அவர் 'இல்லை' என மறுத்தார். திரும்பவும் செய்தி. மறுபடி ஃபோன். 'கையெழுத்து என்னுடையதல்ல' என்றார். இது விபரீதம் ஆகக் கூடாது என்ற நோக்கில் பல நண்பர்கள் அவரை அணுக 'ஏதோ செட்டில்மெண்ட்' பேசினார் என தகவல் வந்தது. இதற்கிடையே எனக்கு அமெரிக்கா ட்ரிப் (பிப்ரவரியிலே போக வேண்டியது) கட்டாயமானதால் போய் விட்டேன். பிறகுதான் தெரிந்தது, யாரோ ஒருவர் முதலில் முன்பு விஜி வேலை செய்த வங்கியிலிருந்து அவள் அப்பா முகவரி வாங்கி, அவர் மனதை மாற்றி எனக்கு அவப் பெயரையும், அசிங்கத்தையும் உருவாக்கச் சதி செய்திருக்கிறார்கள் என்று.

ஏதோ ஒரு கம்ப்ளெய்ண்ட். இதை பத்திரிகைகள்தான் பெரிதுபடுத்தி விட்டன. நல்லதை விட்டுவிட்டு 'ரேப் பண்ணிட்டான் கொலை செஞ்சிட்டான்'னு கற்பனை கூட்டி எழுதுவதில் என்ன திறமை இருக்கிறது..? 12 மணி நேரம் பாடி இருந்திருக்கிறது. தகனத்தின் போது 2000க்கும் மேற்பட்டவர் இருந்திருக்கின்றனர். இதற்கு மேல் என்ன வேண்டும்? அதிலும் ஒரு பாசமுள்ள தகப்பனார் எட்டு மாதம் கழித்தா தம் பெண் சாவில் மர்மம் என்று கேஸ் போடுவார்...?


கல்கி : ஆசிரமத்தின் ஆடம்பரமான வசதிகளுக்குக் காரணம்...?

ஜக்கி : பிரான்ஸ், அமெரிக்கா, ஜெர்மன் என இந்த யோகா வகுப்புகளுக்கு ஏக டிமாண்ட். என்றாலும் நான் ஏதும் டாலர் கொண்டு வரவில்லை. எல்லாமே இங்கு வரும் பொது ஜனங்கள் கொடுப்பதுதான்.

கல்கி : நீங்கள் இந்தத் துறைக்கு வரக் காரணம்...?

ஜக்கி : என்னை இயக்கிய சக்திதான். 13 வயதில் யோகாவை சாப்பாடு மாதிரி உட்கொண்டேன். மலாடிஹள்ளி சுவாமிகளிடம் பயற்சி. ஆங்கில இலக்கியம் முடித்து, சிவில் கன்ஸ்ட்ரக்ஷன், கோழிப்பண்ணைகள் என பிஸினஸில் ஓகோவென்றிருந்த காலம். ஒரு நாள் சாமுண்டி மலையில் கண் திறந்தபடியே நான்கரை மணி நேரம் தன்னிலை மறந்திருந்தேன். அதில் கிடைத்த ஆனந்தம்... அடுத்தடுத்த நாட்களிலும் இது தொடர, இதைப் பார்த்த பலரும் சமாதி நிலை என்றார்கள். இதைப் பலருக்கும் பகிர்ந்து கொள்ள ஏற்பட்ட ஆர்வமே, தொழில் துறந்து, இந்த ஆசிரமம் வரை வளர்ந்தது...

கல்கி : நீங்கள் என்னதான் சொல்ல விரும்புகிறீர்கள்?




''நான் ஒரு விளையாட்டு பொம்மையா.. உந்தனுக்கு''
''ஆஹா என்னமா அனுபவிச்சுப் பாடறார்.''
''முதல் வரிசையில் அவர் மனைவி உட்கார்ந்திருக்காங்களே.''
– குல்லூர்

பதில் : இன்றைக்கு மகாத்மா காந்தி என்றாலே எல்லோருக்கும் ஒரு ஜோக்காகப் போச்சு. நாங்கள் பத்து ஆண்டுகளாக யோகாவை எந்த வித விளம்பரமும் இல்லாமல் நடத்திட்டோம். என்னை அசிங்கப்படுத்த, அவமானப்படுத்த ஏதெல்லாமோ நடந்து முடிந்து விட்டது. எனக்கு அசிங்கம், அவமானம், அகங்காரம் எதுவுமேயில்லை. ஆனால் என்னை நம்பி வரும் குடும்பம், பெண்கள், குழந்தைகள் இந்த ஆசிரமம் பற்றி என்ன நினைப்பார்கள்...? இங்கே பயிற்றுனராய் வந்த பிரம்மச்சாரி இளைஞர்களெல்லாம் ஒரு ராமகிருஷ்ணர், ஒரு விவேகானந்தர் என்கிற கனவில் வந்தவர்கள். அவர்களெல்லாம் இப்போது 'வக்கீலைப் பார்த்தேன்.. பெட்டிஷன் போட்டேன்... ஸ்டேஷனுக்குப் போனேன்!' என்று சொல்லும் போது நான் எப்படியெல்லாம் அவஸ்தைக்குள்ளாகிறேன் தெரியுமா...? இதிலெல்லாம் இந்தப் பத்திரிகைகளுக்கு அக்கறையேயில்லை பாருங்க... அதுதான்... அதுதான் வேதனையாயிருக்கிறது.

பேட்டி, படங்கள்:
கா.சு. வேலாயுதன்

குழந்தை பிறந்த உடனே அதோட நாக்கில தேனைத் தொட்டு வப்பாங்களாம். அதோட வாழ்க்கையே ஸ்வீட்டா இருக்கணும்ன்னு சொன்னாக் கூட வேறு ஒரு விஷயம் இருக்கு. குழந்தை எட்டு வகைச் சுவைகளை உணர்ந்துக்கிடத்தான்! கமி சொல்றாளேன்னு குழந்தைக்குத் தேனை அதிகமா கொடுத்திடாதீங்க. அப்புறம் தாய்ப்பால் அதுக்குப் பிடிக்காம போயிடும்! எப்பப் பார்த்தாலும் சேலையைப் பிடிச்சு இழுத்துக்கிட்டு அன்னாந்து பார்த்து நாக்க நீட்டி ம்ம்ன்னு கேக்க ஆரம்பிச்சிடும். மருந்து மாத்திரை தரும்போது மட்டும் கலந்து கொடுங்க.





இருமலுக்குத் தேன் சாப்பிடுங்கன்னு கமி சொல்லத் தேவையில்லை!

தண்டால் எடுத்தும் உடம்பு குறைய மாட்டேங்கிறதேன்னு கவலையா இருக்கா? தேனை தினமும் காலையில வெறும் வயித்தில கொஞ்சம் சாப்பிடுங்க! உடம்பு கம்மா ரம்பா, சிம்ரன், ரீவா கணக்கா ஸ்லிம்மாயிடும். மாவுப் பொருளில இருக்கிற கார்போஹைட்ரேட் ஜீரணமான பின்தான் உடம்புக்கு எனர்ஜியா மாறும். தேன் அப்படியல்ல! குடிக்கும்போதே தெம்பு ஊட்டிக்கிட்டேதான் போகுது. சர்க்கரை வியாதிக்காரங்க மாத்திரம் தேனைத் தொடவே கூடாது. ஓரிஜினல் தேன் சார்ன்னு கடையில வித்தாலும் அது ஓரிஜினலா இருக்குமான்னுதான் தெரியலை! பார்த்து வாங்குங்க.

அவளப் பாரு, டங்குடங்குன்னு மிதிச்சிட்டு போறத! ஆம்பளைகளே ஓடி ஒளியிற மாதிரி நிமிர்ந்த நடைன்னு பொறணி பேசிப்போமில்லையா? அதுக்கு அவங்க நான்வெஜ் சாப்பிடுறதுதான் காரணம். வெஜ் சாப்பிடுறவங்களும் அப்படி நடக்கணுமா? அதுக்கு ஒரு வழி இருக்கு. காளான் சாப்பிடுங்க. நான்வெஜ்ஜில இருக்கிற அளவுக்கு இல்லைன்னாலும் இரும்புச் சத்து, ஏ, டி, விட்டமின் எல்லாம் காளான்லயும் இருக்கு. புரோட்டீன் நான்வெஜ்ஜுக்கு சமமா இருக்கு. இதுல இன்னொரு விசேஷம் இருக்கு. நான் வெஜ்ஜுன்னா எல்லா ஏஜ் குரூப்புக்கும்

3D தெரியும்; 4D தெரியுமா?

அள்ளிப் போட்டுட முடியாது. அதுக்கு அளவு முக்கியம். காளான்னா எல்லா வயதினரும் சாப்பிடலாம்! ஒரு முக்கியமான விஷயம் காளான் ஃப்ரெஷ்ஷா கெடச்சா நாளைக்கு வச்சிக்கலாமேன்னு பொத்தி வைக்க வேணாம்! உடனே வதக்கிச் சாப்பிடுங்க. லேட் டானா அழுகிடும்! அப்புறம் காளான் வாங்கு றப்பவும் நல்ல காளானா வாங்குங்க.

3-D படம் போல, பால்ல 4-D சத்து இருக்கு. பசும்பால ஏன் பச்சையா சாப்பிடக் கூடாதுன்னு அடிக்கடி தோணியிருக்கும். பச்சையா சாப்பிடலாம். ஆனா பால் கறந்ததும் உடனே சாப்பிடணும். முடியுமா? கறந்த உடனே பால் 'வாமா' இருக்கும் குடிச்சுப் பாத் திருக்கீங்களா? நமக்குக் கறந்த பால் மறுநாள் தானே வந்து சேருது? காற்றுல இருக்கிற கிருமி பாலுல வந்திடுறதால காய்ச்சுறோம்.

சிலர் பால் ஏட்டைப் பார்த்தாலே ஓடிடு வாங்க. சிலருக்குக் கடையில போயி தின்ன வுடன் 'ஏடு போடப்பா'ம்பாங்க. அதுல கொழுப்பு இருக்கு. பாலைக் காய்ச்சிக்கிட்டே இருந்தா தண்ணியெல்லாம் ஆவியாகி; கெட் டியா ஆயிடும். அதில ஜீனிய தூவுனா பால்கோவா.

உறை ஊத்தினா தயிராயிடுது. பாலை நல்லா கடஞ்சு வெண்ணெய் எடுத்திட்டா மோர். இதென்ன எங்களுக்குத் தெரியாதான்னு இடிக்க வராதீங்க. மோரில் கொழுப்புப் போயிடுறதால ஹார்ட் பேஷண்ட்களுக்கு நல்ல ஆகாரம். ஆனா கடையில மோர்ங்கிற பேருல ஊத்தறதெல்லாம் வெறும் நீர்தான்!

பால் திரிஞ்சு போச்சுன்னா கெட்டுப் போச்சுன்னு வெளிய கொட்டிடுறீங்க. அந்த ஸ்மெல், வேதிமாற்றத்தில வேறொன்னா மாறியிருக்கு. திரிஞ்ச பாலை நல்ல மெல்லிசான துணியில வடிகட்டுங்க. உடை நீரெல்லாம் வந்த பின்னாடி வெள்ளை அல்வா மாதிரி இருக் கில்ல? அத அந்த துணியால மடிச்சு வையுங்க.

வடிகட்டுன நீரை டைபாய்டுகாரர் இருந்தா கொடுங்க. வேகத்தில காய்ச்சல் விடும். அப்புறம் துணியில கட்டி வச்சிங்கில்லயா வெள்ளை அல்வா! அது மேல தேங்கா பூ, ஜீனி போட்டு கலக்கி மறுபடி கெட்டிக்க விடுங்க. பின்ன பீஸ் பீஸா வெட்டித்தின்னுங்கன்னு சொல்லிக் கிட்டா இருக்க முடியும்? இனிமே பால் கெட்டு போச்சுன்னு சொல்ல மாட்டீங்கள்ல?

தேங்காயில கொழுப்பு இருக்கு. ஆனா இளநீர்ல 'எலக்ட்ரோலைட்'ங்கிற சத்து இருக்கு. இது ஜீரணத்துக்கு நல்லா பயன்படும். நம்ம உடம்பில பொட்டாசியம் சோடியம் ரெண் டையும் பேலன்சா வக்கிறதுக்கு இளநீருல இருக்கிற அந்த எலக்ரோலைட்தான் உதவுது. அதே மாதிரி வயிற்றுப்போக்கானவங்களுக்கு இளநீர் கொடுத்தா தெம்பாயிடுவாங்க.

– சுமி

அன்பு நிறைந்த வாசகர்களே!

பொன்னியின் செல்வன் அறிவிப்பைப் பார்த்துவிட்டு, அடங்காத குதூகலத்துடன் கடிதங் கள் எழுதிக் குவித்து வருகிறீர்கள்...

நன்றி! நன்றி!

உங்களில் பலர், பத்மவாசன் படங்களுடன் பொன்னியின் செல்வனை 'பைண்ட்' செய்து வைத்துக் கொள்ள விரும்புவதால், அதை வாரந் தோறும் கல்கியில் நடுப்பகுதியில் வெளியிட வேண்டும் என்றும் கேட்டு வருகிறீர்கள்.

உங்கள் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கும் வகை யில், பொன்னியின் செல்வனுடன் அமரர் கல்கி யின் வேறு சில படைப்புகளையும் தொகுத்து, பதினாறு பக்க தனிப் பகுதியாக– 'கல்கி கலெக் ஷன்' என்ற பெயரில், நடுப் பகுதியில் வழங்க விருக்கிறோம்.

ஆகவே, 11.1.98 முதல் கல்கியில் பதினாறு பக்கங்கள் அதிகரித்து – 96 பக்கங்களாக வழங்கு கிறோம்.

இதன் காரணமாக உங்கள் கல்கியின் விலை யையும் பிரதிக்கு ஐம்பது காசு ஏற்ற வேண்டி யிருக்கிறது. இதனால் நீங்கள் மனம் சோர்ந்து விடக் கூடாது.

வாரந்தோறும் ஐம்பது பைசா கூடுதலாகக் கொடுப்பதால் ஆண்டொன்றுக்கு உங்களுக்கு ஆகக் கூடிய கூடுதல் செலவு ரூ.26 மட்டுமே... இந்த இருபத்தாறு ரூபாய்க்கு 16×52– அதாவது 832 பக்கங்கள்– கிடைக்கும்! அவை சாதாரண பக்கங்கள் அல்ல... அமரர் கல்கியின் அற்புதமான எழுத்துக்கள் அடங்கிய வண்ணமும் வனப்பும் மிகுந்த பக்கங்கள். எனவே கூடுதல் செலவைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து கல்கியை வாங்கு வீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அமரர் கல்கியின் நூற்றாண்டு விழா (9.9.1998–முதல் 9.9.1999வரை) கொண்டாட் டங்களின் தொடக்கமாக வாசகர்களுக்கு இந்த விருந்து. மேலும் பல திட்டங்களும் அறிவிப்பு களும் வெளியாகும்.

11.1.98 இதழில் வேறு பல புதிய தொடர் களும் ஆரம்பமாகின்றன. டாக்டர் எம்.எஸ். உதய மூர்த்தி, பட்டுக் கோட்டை பிரபாகர், பத்மா ரவிசங்கர் என்று இன்றைய முன்னணி எழுத்தாளர் களும் முத்திரை பதிக்கிறார்கள்...

ஒவ்வொரு வாரமும் உங்கள் மேன்மைக்காக கல்கி தொடர்ந்து உருவாகும் என்று உறுதியளித்து, உங்களுடைய நீடித்த நல்லாதரவைக் கோரு கிறோம்.

– ஆர்


கண் சிமிட்டும் நேரத்தில் உங்கள் குழந்தை வளர்ந்து விடுவாள்



அதே வேகத்தில் உங்கள் பணம் வளர்ந்திட

KVB

திருமகள் திருமணத் திட்டம்



காலங்கள் மாறினாலும் சில கடமைகள் மாறுவதில்லை. உங்கள் செல்ல மகளின் திருமணம்–உங்கள் தலையாய கடமைகளில் ஒன்று. அதற்கு கரூர் வைஸ்யா வங்கியின் திருமகள் திருமண திட்டத்தில் முதலீடு செய்வதே நன்று.

இந்திய தனியார் வங்கிகளுள் முதலாவதாகத் தேறியுள்ள கரூர் வைஸ்யா வங்கியின் நூறு சதவீத பாதுகாப்புடன்!

இன்றே திருமகள் திருமண திட்டத்தில் முதலீடு செய்யுங்கள். உங்கள் மகளின் திருமணத்தை நிறைவாக நடத்துங்கள்.

KVB

Since 1916

கரூர் வைஸ்யா பாங்க் லிட்.

கரூர் – 639 002

A.D.நவநீதன்
சேர்மன்

நாளும் நம்பிக்கை வளர்க்கும் வங்கி

Anugrah 2484/97 Tam

புதுவருஷ சிற(றி)ப்பு!



நள்ளிரவில் கணவன் மனைவியை எழுப்பி ஆசையாக...: ஹாப்பி நியூ இயர் விமலா!

மனைவி: வழக்கம்போல் ஏழரை நிமிஷம் லேட்!

"சீசனுக்கேத்த டிரெஸ்னா இப் படியா...?"






"இந்த வருஷத்துலேருந்து என் மறதியை விட்டொழிச்சாச்சு கமலா..."





"நேயர்களே இப்போ பரிசுக்குரிய கேள்வி...1997க்குப் பிறகு எந்த ஆண்டு பிறக்கிறது...? உங்கள் விடை எங்களுக்கு வந்து சேர வேண்டிய..."

— ஜெஜுப்ஸ்





1998 ஜனவரி 4
ஈசுவர மார்கழி 20
மலர் : 56
இதழ் : 23

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ரோட் ரோலர் பி.ஜே.பி; புல்டோஸர் ஜெயலலிதா!


'ஸ்திரமான ஆட்சி; திறமுள்ள பிரதமர்' என்ற புதிய கோஷத்தைப் பரப்பி வருகிறது பி.ஜே.பி. நேற்றுவரை 'அடிப்படைவாதக் கட்சி', 'மத வெறியர்கள்' என்று பி.ஜே.பியையும் அதன் தலைவர்களையும் விமர்சித்தவர்கள் இன்று அதன் தேர்தல் கூட்டாளிகளாகி விட்டார்கள். 'ஜெயிக்கிற குதிரை மீது பணத்தைக் கட்டு' என்ற ரீதியில் பதவி மோகம் இவர்களைச் செயல்பட வைக்கிறது.

பாரதிய ஜனதா கட்சியோ, மத்தியில் ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதை மட்டுமே குறிக்கோளாக்கி, அதற்காகக் கொள்கைகளை விட்டுக் கொடுக்கவும் தன்னை மாநிலங்களில் எடுப்பார் கைப்பிள்ளையாக்கிக் கொள்ளவும் தயங்கவில்லை!

தமிழகத்தில் ஜெயலலிதா ஆதரவும் வங்கத்தில் மமதா பானர்ஜியின் கூட்டும் இந்த மாநிலங்களில் பி.ஜே.பியின் கரங்களை நிச்சயமாகப் பலப்படுத்தும்.

பி.ஜே.பி.யில் போய்ச் சேர்ந்திருக்கும் பி.ஆர். குமாரமங்கலம், அஸ்லாம் ஷெர்கான் ஆகியோரை 'வெறும் கண்டைக்காய்கள்!' என்று காங்கிரஸ் வட்டாரங்கள் வேண்டுமானால் அலட்சியப்படுத்தலாம். ஆனால் பி.ஜே.பிக்கு அவர்களுடைய வருகை மிகப் பெரிய ஆதாயமாக அமையும்.

அனேகமாக எல்லா மாநிலங்களிலுமே காங்கிரஸ் பிளவுபட்டிருக்கிற சமயத்தில், அக் கட்சியின் முக்கிய தலைவர்கள் இருவர் - முன்னாள் அமைச்சர்களாக இருந்தவர்கள் - பி.ஜே.பியில் பகிரங்கமாய்ப் போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். இதன் விளைவாக, மக்களுக்கு காங்கிரஸிடமிருந்த கொஞ்ச நஞ்சம்



நம்பிக்கையும் அடியோடு போய்விடும்.

ஐக்கிய முன்னணி போன்ற கூட்டணி ஆட்சியால் நாட்டை நிர்வகிக்க முடியாது என்பதையும் மக்கள் பலத்த அடிபட்டுக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே, வாக்காளர்களின் ஆதரவு, மனவியல் ரீதியாகவும் சரி, சிந்தனை அடிப்படையிலும் சரி, பி.ஜே.பி. பக்கம் திரும்புவதற்கான வாய்ப்புகள் வசமாக இருக்கின்றன.


காங்கிரஸின் அஸ்லாம் ஷெர்கான் மட்டுமின்றி, காஷ்மீரத்து நேஷனல் கான்ஃபரன்ஸ் கட்சியிலிருந்து பிளவுபட்டு தனிக் கட்சி தொடங்கிய தீன் மொஹமது சீடா என்பவரும் பி.ஜே.பியில் சேர்ந்திருக்கிறார். மேற்கு வங்கத்தில் சமாஜ்வாதி கட்சியின் தலைவராயிருந்த சையத் நவாப் ஜானி மிர்ஜாவும் செயலராயிருந்த ஷான்ஷா ஜெஹாங்கீரும் கூட 150 உறுப்பினர்களுடன் பி.ஜே.பிக்கு வந்து சேர்ந்து விட்டார்கள்! இந்த முஸ்லிம்களின் வருகை பி.ஜே.பி. பேரிலுள்ள முஸ்லிம் விரோத முத்திரையை அழிக்கப் பெரிதும் உதவப் போகிறது.

'தேர்தலை உத்தேசித்து, அயோத்தி விஷயத்தில் பிடிவாதத்தைத் தளர்த்த வேண்டும்; மதுரா, காசி பிரச்னைகளை மூட்டை கட்டியே வைத்து விடலாம்...' என்று பால்தாக்கரே கூட பி.ஜே.பிக்கு அறிவுரை கூறுகிறார்!

பி.ஜே.பியும் அடிப்படைவாதத்துக்குத் தாற்காலிகமாகவேனும் விடைகொடுத்து தேர்தல் பிரசாரத்துக்கென்று தனி வியூகம் அமைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஏற்கெனவே லோக் சபாவில் அதிகபட்ச இடங்கள் பெற்ற தனிக் கட்சியாகத்தான் பி.ஜே.பி. விளங்கியது. வருகிற தேர்தலில் மேலும் பல இடங்களைப் பெற்று, பி.ஜே.பி. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கக்கூடிய வாய்ப்புகள் பெருகியிருக்கின்றன.

பி.ஜே.பியின் இந்த வெற்றி வாய்ப்பை நம்பித்தான் ஜெயலலிதாவும் அதனுடன் கூட்டுச் சேர இசைந்திருக்கிறார்.




'மத்தியில் ஸ்திரமான ஆட்சி அமைவதற்காக, கொள்கை விரோதமுள்ள இந்திரா காந்தியுடன் திராவிடத் தலைவர்கள் கூட்டணி வைத்துக் கொள்ளவில்லையா? ஜனதா அமைச்சரவையில் மாறன் இடம்பெறவில்லையா?...' என்றெல்லாம் தமது செய்கையை ஜெயலலிதா நியாயப்படுத்துகிறார். என்றாலும் அவருடைய முடிவுக்கு நிச்சயமாக உள்நோக்கம் இருக்கிறது.

மத்தியில் பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்துவிட்டால், எப்படியேனும் தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்குக் கல்தா கொடுத்துவிடலாம் என்கிற உள்நோக்கம். அதன் மூலம் ஜெ பேரிலுள்ள ஊழல் புகார்களுக்கும் வழக்குகளுக்கும் சமாதி கட்டப்பட்டுவிடும்!

தி.மு.க. - த.மா.கா. கூட்டணி நாடாளுமன்றத்தில் கணிசமான இடங்களைக் கைப்பற்றத் தவறி விட்டால், ஜெயலலிதாவின் காரமும் குரலும் ஓங்கிப் போகும். இதை மனத்தில் கொண்டு, கருணாநிதியும் மூப்பனாரும் மிக விரைவில் இணைந்தமர்ந்து தங்கள் தேர்தல் வியூகத்தை வகுத்து, சேர்ந்து பிரசாரம் செய்யத் தொடங்க வேண்டும்.

பி.ஜே.பியுடன் கைகுலுக்குவதும், பா.ம.க.வை வரவேற்பதும், வாழப்பாடிக்குப் பொன்னாடை போர்த்திப் பூச்செண்டு தருவதுமாக ஜெயலலிதா புல்டோஸர் போல் முன்னேறிக் கொண்டிருக்கிறார். எம்.ஜி.ஆர். நினைவு நாளில் பிரசாரத்தைத் தொடங்கியிருக்கிறார்! நெல்லையில் நடக்கவிருக்கும் அ.தி.மு.க. மாநாடு வேறு அவரது பலத்தைப் பறைசாற்றுகிற வகையில் அமையும்! அத்வானி, கன்யாகுமரியில் தொடங்கவிருந்த தமது பிரசார பயணத் திட்டத்தை மாற்றிக் கொண்டு இந்த மாநாட்டில் பங்கேற்க வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஜெ. தம்மை பலப்படுத்திக் கொள்ள தினம் தினம் பாடுபடுகிற சூழ்நிலையில், மூப்பனாரும் கருணாநிதியும் காட்டி வரும் நிதானமும் சரி, காத்து வரும் மௌனமும் சரி, அச்சத்தையே ஏற்படுத்துகின்றன! மக்கள் பகட்டுக்கும் பொய்ப் பிரசாரத்துக்கும் மயங்கி விடாமல் தடுக்கும் பொறுப்பு தி.மு.க. - த.மா.காவுக்கு இருக்கிறது.



• புகைப்படக் கண்காட்சி நடக்குமிடம்...

மின்னலடிக்கும் அம்மா வாசகங்கள்!

— ஒரு முன்னோட்ட ரிப்போர்ட்!

நடப்பது இன்னமும் ஜெ. ஆட்சிதானோ என்கிற பிரமை நமக்கு. திருநெல்வேலியை ஒரு கனவு நகரமாக மாற்ற செட் போட்டுக் கொண்டிருக்கிறது அ.தி.மு.க.! வெள்ளி விழா மாநாட்டில் தங்கள் முழு பலத்தையும் மக்கள் வெள்ளமாகத் திரட்டிக் காட்ட பணத்தைத் தண்ணீராய்க் கரைக்கின்றனர். ஜங்ஷனி லிருந்து மாநாட்டுப் பந்தல் வரை சுமார் எட்டுக் கிலோ மீட்டர் தொலைவுக்கு ஜகஜ் ஜோதியாய்த் தோரணங்கள் தொங்குகின்றன. வழிநெடுக கட்-அவுட்டுகளும் அலங்காரக் கோபுரங்களும் அண்ணாந்து பார்க்க வைக்கின்றன. பதி னைந்தடிக்கு ஒரு டியூப் லைட் வீதம் பொருத்தப் பட்டுள்ளன.

இதுவரை எந்தக் கட்சி யும் தங்கள் மாநாட்டிற்கு வடிவமைத்திராத விதத்தில் மூன்று பிரம்மாண்டமான கோட் டைகள் எழுந்து நிற்கின்றன. சென்னையி லிருந்து செல்வம் தலைமையில் 150 ஆர்ட் டிஸ்டுகள் வந்து இறங்கி 'ஒரு மாதமாக கட்-அவுட் தலைவர்களை உருவாக்கிக் கொண்டி ருக்கின்றனர். பத்து லாரிகள் இரண்டு மாதம் மணல் அடித்தும் தீர்ந்தபாடில்லை. மாநாட் டுப் பந்தல் 25 ஏக்கர் பரப்பில் இருப்பதால் ஆட்டோவில் போனால்தான் முழுசாகச் சுற்றிப் பார்க்க முடியும். "சார், சுதாகரன்


• பிரகாஷ்




• வேலுக் கோனார்



• மாநாட்டுப் பந்தல்...





• மாநாட்டுப் பந்தலின் வரவேற்பு வாயில்




• கருப்பசாமிப் பாண்டியன்


கல்யாணத்தை விட இது அட்டகாசமா இருக்கும் பாருங்க!" - குமார் என்ற அதி.மு.க. தொண்டர் உற்சாகமாகச் சொன்னார்.

கழக வெள்ளி விழா மாநாட்டு ஏற்பாடுகள் காரணமாகப் பதினைந்தாயிரம் தொழிலாளர்களுக்கு இரண்டு மாத காலம் வேலை வாய்ப்புத் தந்திருக்கிறதென்றால் நெல்லையில் உருவாகும் சொர்க்கபுரியை நினைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள். சுவரெங்கும் "சமூகநீதி காத்த வீராங்கனையே", "இந்தியத் திருநாட்டின் தவப்புதல்வியே" "கழக மாநாடு கண்ட காவல் தெய்வமே" "அண்ணா தி.மு.கவின் ஆலமரமே"... என்பன போன்ற மின்னலடிக்கும் 'அம்மா' வாசகங்கள்தான்.

தொலைதூரங்களில் இருந்து வந்து குவியும் தொண்டர்கள் நான்கு நாட்கள் தங்க 45 திருமண மண்டபங்கள், சில தனியார் அரங்குகள், கட்டடங்கள் வளைத்துப் போடப்பட்டுள்ளன. இதற்கு மட்டும் ஆகும் செலவு ஒரு கோடியை எட்டுகிறதாம். திருநெல்வேலியில் முக்கிய கட்சிப் பிரமுகர்களுக்கு அறுநூறு ரூம்கள் முன்பதிவு செய்யப்பட்டு விட்டன. தோழமைக் கட்சியைச் சார்ந்த தலைவர்களுக்கும், அவரது வலது - இடது கரங்களுக்கும் சகல வசதிகளோடும் 150 ரூம்கள் திறந்து கிடக்கின்றன.



• வழியெங்கும் தயாராகும் மூங்கில் கோபுரங்கள்



• பேரணியைப் பார்வையிட ஜெவுக்குத் தயாராகும் மேடை

தொண்டர்கள் படு உற்சாகத்தில் இருக்கின்றனர். வாழப்பாடியார், வை.கோ., சுப்ரமணியசாமி, ராமதாஸ்

நகரமெங்கும் தட்டிகளில் வண்ணமயமாய் இணைந்து மிரட்டுவதை ஆர்வமாய்ப் பார்க்கின்றனர். இந்தத் தலைவர்கள் அம்மா மீது மாநாட்டுப் பந்தலிலேயே புகழ்ப் பரணி பாட முன்வடிவம் தந்துள்ளனராம். தனியொரு கட்சியின் மாநாட்டிற்கு வேறுபட்ட கொள்கையுடைய உதிரிக் கட்சிகளின் தலைவர்கள் வருவதும் குழைவதும் வரலாற்றில் இதுவே முதல் முறை. இதை ஜெயலலிதா சாதித்திருக்கிறார்.

மாவட்ட வாரியாக 36 வண்ண ஊர்திகள் தயாராகி வருகின்றன. கலைஞரின் மக்கள் விரோத செய்கைகளைத் தாங்கிய வாசகங்களும் அதே வண்டியில் அம்மாவின் சாதனைகளை விளக்கும், விதமான காட்சிகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. (உதாரணமாக பஸ் கட்டணம், அரிசி விலையை சித்திரிக்கும் வேஷங்கள்) இப்படி எதிரும்புதிருமாக - நேருக்கு நேர் கேலி சித்திரங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

இப்போதே மக்கள் குழந்தை குட்டிகளோடு வந்து மூக்கின் மீது விரல் வைத்து வியக்கின்றனர். மாநாட்டுத் திடல் வழியாகப் போகும் பஸ்களில் "பத்து நாட்களாக செம கலெக்ஷன்" என்கின்றனர் கண்டக்டர்கள்.

முத்துவிநாயகர், சீதாலட்சுமி திருமண மண்டபங்களில் அரிசி மூட்டைகளை அடுக்க முடியாமல் நடைபாதையெல்லாம் மலையாகக் குவிந்து கிடக்கின்றன.

மாநாட்டை முன்னிட்டு போக்குவரத்துகளை எப்படி ஒழுங்குபடுத்துவது என்று போலீஸ் திணறிக் கொண்டிருக்கிறது. மாநாடு ஆரம்பித்ததும் நாலா திசைகளிலிருந்தும் நெல்லைக்கு வரும் பஸ்கள் உள்ளேயே நுழைய முடியாது. கோவில்பட்டி, சங்கரன்கோவில், சாத்தூர் என்று நெல்லைக்கு வெளியிலேயே நிறுத்தப்பட்டுவிடும் என்கின்றனர். திருநெல்வேலியை மக்கள் வெள்ளத்தால் மூழ்கி எடுப்பதே கட்சியின் லட்சியமாகக் கொண்டு செயலாளர்கள் களத்தில் குதித்திருக்கின்றனர்.

சுமார் பன்னிரண்டு லட்சம் மக்களைத் திரட்ட, மாவட்டவாரியாக இத்தனை வேன், இத்தனை பஸ் வர வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. வரும் தொண்டர்களுக்கு இரண்டு ரூபாயில் உணவுப் பொட்டலங்கள் கிடைக்க அ.தி.மு.க. மாநாட்டு அமைப்புக் குழுவே தாற்காலிகமாக ஐந்து ஹோட்டல்களை ஆங்காங்கு புதிதாக உருவாக்கியிருக்கிறார்கள். அமுதசுரபியில் அள்ளக் குறைந்தாலும் அ.தி.மு.க. மாநாட்டில் பொட்டலங்கள் குறையாது என்று அடித்துச் சொல்கின்றனர். இதற்கு செங்கோட்டையன் தலைமையேற்றிருக்கிறார்.

பிரசாரப் பாடலை எப்படிப் பாடினார்கள்?

அ.இ.அ.தி.மு.க.வின் பிரசாரக் கேஸட்டுக்கான பாடல்களை, கட்சி சார்பில்லாத பாடகர்கள் பாடியபோது அவர்களின் மனோநிலை எப்படியிருந்தது? சாம்பிளுக்கு இருவரைக் கேட்டோம்:

அனுராதா ஸ்ரீராம்: 'ஓர் உதவி செய்கிறாயா?' என்று கேட்டார், இசையமைப்பாளர் ஆதித்யன். 'என்ன?' என்றேன். 'அ.தி.மு.க.வின் பிரசாரப் பாடலான 'சின்னச் சின்னக் கோலமிட்டு...' பாடலைப் பாட வேண்டும்' என்றார். அவருடைய இசையமைப்பில் நான் எத்தனையோ சினிமா பாடல்களைப் பாடவில்லையா! அதுபோலத் தான் இந்தப் பாடலையும் பாடினேன்.

இவ்வளவு பெரிய தடபுடல் ஏற்பாட்டை முன்னின்று கவனிப்பவர் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் கருப்பசாமிப் பாண்டியன்தான். அவரைக் கட்சி அலுவலகத்தில் சந்தித்தோம். "1500 கலை நிகழ்ச்சிகள் மூணு நாளுமா நடக்குது. ஒரு மாவட்டத்துக்கு ஐம்பது கலை நிகழ்ச்சின்னு பிரிச்சிருக்கோம். புரட்சித் தலைவர், அம்மா அவர்களின் சாதனைகளை விளக்குற மாதிரி 10,000 புகைப்படங்கள் அடங்கிய கண்காட்சி வைக்க தனி அரங்கமே அமைச்சிருக்கோம். பி.ஜே.பி. தலைவர் அத்வானி கன்னியாகுமரி வர்ற புரோகிராமையே கேன்சல் பண்ணிட்டு, விழாவில கலந்துக்கிடுறாரு. மாநாட்டுப் பந்தலுக்குள்ள 250 உள்ளிணைப்பு டீவியை வைக்கிறோம். அம்மா சொல்லியிருக்காங்க, இது மக்கள் விழாவா அமையணும்னு. அதனால ராணுவக் கட்டுப்பாட்டோட செயல்படுறோம். முன் ஜாக்கிரதையா 25 மருத்துவக் குழுக்களை அமைச்சிருக்கோம். 1700 தொண்டர்கள் மாநாட்டுப் பந்தலைச் சுற்றி பாதுகாப்புக்கு நிப்பாங்க!" என்றார்.

பொதுமக்கள் என்னதான் பேசிக் கொள்கிறார்கள் என்று அறிய சிலரை மடக்கிப் பிடித்தோம். "நம்ம ஊர்ல மாநாடு நடத்துறாங்க. அதனால எப்படி இருக்குன்னு

அ.தி.மு.க.வின் பிரசாரப் பாடலாயிற்றே என்று நான் எந்தவிதமான சங்கடமும் படவில்லை. சொல்லப் போனால் எனக்கு அதைப் பாடும் போது குஷியாகவே இருந்தது. ஆனாலும் அது கேஸட்டாக வெளி வந்த பிறகு, இன்னும் நான் அதைக் கேட்டுப் பார்க்கவில்லை என்பதுதான் குறை!



• அனுராதா ஸ்ரீராம்



• உன்னி கிருஷ்ணன்

உன்னி கிருஷ்ணன்: கல்யாணி ராகத்தை அடிப்படையா வச்சுட்டு ஆதித்யன் ட்யூன் பண்ணின பாட்டுத்தான் 'அன்னை...' லைட் கிளாசிகல் டைப்னு சொல்லலாம். It was like any other devotional song. பாட்டும் நல்லாவே இருந்தது.

அவர்களே கமிட்டி போட்டு, இன்ன இன்ன பாட்டை இன்னார்தான் பாடணும்னு டிசைட் பண்ணியிருந்தாங்க. அதும்படி என்னைப் பாடச் சொன்னதுதான் 'அன்னை...'

ஜெயலலிதாவை மனசுல வச்சுட்டு எழுதியிருந்தாக்கூட, பாட்டுன்னு பார்த்தா நல்லாத்தான் இருந்துது. அதுனால, பாடறதுக்கு நான் தயங்கல்லை...

ரெக்கார்டிங் முடிஞ்ச உடனே ஒரு தடவை நான் கேட்டுப் பார்த்தேன். மிக்ஸிங் ஆனப்புறம் கேக்கலே. ஆனா, நல்லா வந்திருக்குன்னு எல்லாரும் சொன்னாங்க. திருப்தியாய் இருந்துது.

– எஸ்.வி.என்

வேடிக்கை பார்க்கப் போவேன். ஜெயலலிதாவை கிட்ட இருந்து பார்த்துக்கிடலாம். மத்தபடி ஓட்டெல்லாம் போட மாட்டேன். இந்தத் தடவை ஏதாவது சுயேச்சை சின்னத்துக்குத்தான் போடணும். எனக்கு எந்தக் கட்சியும் பிடிக்கல'' என்றார் கல்லூரி மாணவர் பிரகாஷ்.

ஆடு மேய்த்துக் கொண்டிருந்த வேலுக் கோனாரை ஊடுவரப்பில் விழுந்து ஓடிப் போய் மறித்தோம். ''என்னமோ மாநாடு நடக்குது. அன்றவன் அள்ளிட்டுப் போகப் போறான். வேறென்ன நடக்கப் போகுது? இல்ல, மாநாடு நடந்து எனக்கென்ன ஆகப் போகுது. ஜெயலலிதா வர்றதாலதான் இந்த வருஷம் மழை விழுதின்னு கட்சிக்காரங்க சொல்லுதாக. என்னமோ புளூடங்கு நோயி வந்து எங்க ஆடெல்லாம் சாகுது. எங்கிருந்து இம்புட்டுப் பணம் இந்தம்மாவுக்கு வருது?'' – படுகேகவலாக எங்களிடமே கேள்வி கேட்டு விட்டுப் போனார் அவர்.

பொதுவாக எல்லோரும், ''மாநாடுதானே, நடத்தட்டும்'' என்று சொல்லிவிட்டு, ஆதங்கத்தைக் கொட்டி விடுகின்றனர். நாங்கள் விசாரித்த அளவில் கடைகளில் கட்டாய வசூல் வேட்டை நடக்கவில்லை. செந்தில் மருந்துக் கடை முதலாளி சங்கரபாண்டித் தேவரைச் சந்தித்தோம்.


''அவங்க கட்சி மாநாடு நடத்துறாங்க. நல்லா நடத்தட்டும். அதனால யாரும் குறை சொல்ல முடியாது. ஆனா இந்த தர்பார்தான் வேணாம்ன்னு சொல்லுதேன். பத்தாயிரமென்ன 20 ஆயிரம் மக்களைக் கூட தெரட்டி மாநாடு நடத்தட்டும். தப்பில்ல. இவ்வளவு செலவழிக்க ஏது பணம்? சுதாகரன் கல்யாணத்தில கூத்தடிச்சு என்னாச்சு? அத ஏன் இந்தம்மா யோசிக்கிறதே இல்ல. வாரீசும் இல்ல ஒண்ணுமில்ல. இவ்வளவு கொள்ளையடிக்க என்ன அவசியம்? இந்த மாநாட்டுக்கு 60 கோடி ரூபா செலவாயிருக்கும்ன்னு அவங்க கட்சிக்காரங்களே சொல்லுதாக. அரிசி மூட்ட எவ்வளவு? தெரு நெடுக்கத் தோரணம் எவ்வளவு? இதெல்லாம் கொண்டு வர எப்படி முடிஞ்சது? இவ்வளவு செலவழிக்க ஏது பணம்? நம்ம அரசு நிறுவனத்திலேயே இரண்டு கோடி சுருட்டுனதா பேப்பருல வந்ததும், நீதிபதி சொன்னதும் பொய்யில்லன்னு காட்டுது. பணம் ஊத்தா வருதின்னா எப்படி? போய்ப் பாக்குறப்போ 'ஆகா பிரம்மாண்டம்ன்னு' சொல்லுதான். திரும்பிப் போறப்ப 'இன்னும் ஆடம்பரம் போகலையா'ன்னு வய்யுதான். இதெல்லாம் அது காதில போட்டுக்கிறதே இல்ல. ஆனாலும் இந்தவாட்டி இந்த கூட்டணி 15 சீட்டு பிடிக்கும். அப்படித் தோணுது எனக்கு!'' என்றார் சங்கரபாண்டித்தேவர். ●

– வேணுஜி

படங்கள் : ஸ்ரீஹரி

தரத்தை நாடுபவர்களுக்கு

காண்டோர்



கிரைண்டர் மோட்டார்

CONDOR



IS : 996

CONDOR

MOTORS

இப்பொழுது ISI உத்திரவாதத்துடன் கிடைக்கிறது.



கடவுள்

நாத்திகவாதத்தை முன்நிறுத்தி இதுவரை தமிழில் குறிப்பிடும்படியாகப் படம் ஏதும் வெளிவந்ததாகத் தெரியவில்லை. அந்த வகையில், 'கடவுள் மறுப்பு என்கிற ஒரு விஷயத்தை மட்டும் தூக்கிப் பிடித்து வந்திருக்கும் 'கடவுள்' ஒரு முதல் முயற்சி. ஆனால், முழு முயற்சி இல்லை.

தனிப்பட்ட முறையிலும் படத்திலும் தம்மை ஒரு நாத்திகவாதி என்று கூறிக்கொள்ளும் டைரக்டர் வேலு பிரபாகரன், தம்மையறியாமல் படத்தின் மூலம் கூறி இருக்கிற விஷயம் - கடவுள் நிஜம்!

ஒரு கிராமத்துக்கு நாத்திகப் பிரசாரகராக (அரசாங்கம் இதற்கெல்லாம் அனுமதி லெட்டர் கொடுக்கிறதா என்ன!) வரும் வே. பிரபாகரன் அங்கே ஒரு சாதி மோதல், சாமியாடல், எம்.எல்.ஏ. அராஜகம், போதாக்குறைக்கு ஒரு நல்லது செய்யும் தீவிரவாதி. கோவில் பிரச்னை. நடுவே ஒரு காதல் ஜோடியின் உல்லாசம் என்று சகட்டுமேனிக்கு கிளைக் கால்வாய்கள் ஓடிக் கொண்டே இருக்கின்றன. (சலிப்பில் மக்கள் தியேட்டரை விட்டு ஓடுவது இன்னொரு கிளை.)

இதற்கெல்லாம் சிகரமாக இடைவேளையின்போது, கடவுளே மணிவண்ணன் ரூபத்தில் அவதரித்து விடுகிறார். பிறகு பிரசித்தி பெற்ற புதுமைப்பித்தனின் கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் சிறுகதையின் தயவில் சில காட்சிகள்.

இறுதியில் வில்லன்கள் மடிய, காதல் ஜோடியைக் கடவுளே ஒன்று சேர்த்து வைத்து, அரிவாள் வெட்டுப்பட்டு இறப்பதுடன் (!) படம் முடிகிறது.

சொல்லவரும் விஷயம் இதுதான் என்று டைரக்டருக்கு ஒரு தெளிவில்லாததால்தான் கடவுள் மறுப்புப் படத்தில் கடவுள் வந்திருக்கிறார். கமர்ஷியல் தேவைகளுக்காகக் குளியல் காட்சிகளும் குலாவல் உற்சவங்களும் இடம் பெற்றிருக்கின்றன. ரோஜாவின் வீட்டுக்குப் பின்னால் ஒரு புற்று முளைக்க, சம்பந்தமில்லாமல் சாமியாட்டங்கள் நடக்கின்றன.

சாதி, கடவுள் போன்ற விஷயங்கள் மக்களின் நுண் உணர்வுகளோடு சம்பந்தப்பட்டவை. இதை மிக மேலோட்டமாக அணுகுவது, கொச்சையாக்குவதோடு கூடக் கொஞ்சம் 'பச்சை'யும் சேர்ப்பதென்பது, நீலப் படங்களைக் காட்டிலும் அபாயம் விளைவிக்கக்கூடியது.

இந்தப் படம் பார்த்து யாராவது நாத்திகர் ஆவார் என்று வேலுபிரபாகரன் ஆசைப்பட்டால் - ஸாரி! ரோஜா ஆடும் அந்த வேப்பிலைப் பாடலின் போது தியேட்டரில் பலர் கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்கள்!

படத்தில் ஒரே ஒரு சிறப்பம்சம் உண்டு. இளையராஜாவின் பின்னணி இசை. கண்ணை மூடிக் கொண்டு கேட்டால், பரம சுகானுபவம்!

வேலு பிரபாகரனையும் மக்களையும் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். ●

— யுகாந்தன்

தூங்குகிறதா தபால் துறை?...

'சர்வதேசத் தபால் ஆணையம்' ஸ்விட்சர்லாந்தில் உள்ளது. இதன் சார்பாக இந்தியத் தபால் துறை நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கவர்ச்சிகரமான விளம்பரத்தை வெளியிட்டது. 1994 - 1996 வரை மூன்றாண்டுகளுக்கு ``The Post - The Best Choice'' - தபால் மூலம் தொடர்பு கொள்வது சிறந்த தேர்வு) என்ற தலைப்பில் ஒரு போட்டியை அறிவித்தது. இதற்கான போஸ்டரை வடிவமைக்க இந்தியா உட்பட ஏறத்தாழ 39 நாடுகளிலுள்ள கிராபிக் ஆர்ட்டிஸ்டுகள் கலந்து கொண்டனர். பரிசு ரூ. 1000 கவிஸ் பிராங்! சற்றேரக் குறைய ஒரு லட்சம் ரூபாய்.

இந்தியாவில் இருந்து மட்டும் 700 கிராபிக் ஆர்ட்டிஸ்டுகள் போஸ்டர் டிசைன் செய்ய மூழ்கிவிட்டனர். ஓவியம் தேர்ந்தெடுக்கப்பட்டால் உலகளாவிய அங்கீகாரம் மட்டுமல்ல. சர்வதேசத் தபால் நிலைய நுழைவாயிலில் அந்த வாசகம் மூன்றாண்டுகளுக்கு வரைந்தவர் பெயரோடு ஜொலிக்கும்!

இந்தப் போட்டி முடிந்து சில வருடங்கள் ஆகியும் இன்னும் முடிவு வரவில்லை!


தமிழ் நாட்டிலிருந்து கலந்து கொண்ட கோபாலகிருஷ்ணனை (தியாகராஜன் பொறியியல் கல்லூரி விரிவுரையாளர்) வத்தலகுண்டில் தேடிக் கண்டு பிடித்தோம்.

இப்போட்டிக்காக இவர் ஒன்பது விதமான போஸ்டர்களை வடிமைத்து அனுப்பியுள்ளதாகச் சொன்னார். 'The Post - The Best Choice' வாசகத்திற்கு, தாய் சேய் ஓவியம் தத்துவார்த்தமாக இருக்கிறது. அம்மாவுக்குப் பிள்ளை வேண்டுமானால் 'சாய்ஸ்'சாக இருக்கலாம். அதாவது அம்மா நினைத்தால் பிள்ளை பெற்றுக் கொள்ளலாம். தவிர்க்க நினைத்தால் அதுவும் சாத்தியமே! ஆனால் குழந்தையைப் பொறுத்தவரை அது அம்மாவைத் தீர்மானிக்க முடியாது. இந்தியாவின் ஒரு மூலையில் இருக்கும் ஒருவருடன் தொடர்பு கொள்ள எல்லா தொடர்பு சாதனங் களும் ஒரு ஏழைக்கு எளிதாக உதவி விடாது. அதை போஸ்ட்கார்டு தான் தீர்மானிக்கிறது. இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விளக்கத்தை ஓவியத்தில் வைத்து அசத்தியிருக்கிறார்.

இந்தியாவிலிருந்து தேர்வு செய்யப்பட்டு ஸ்விட்சர்லாந்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட 700 டிசைன்களில் இவருடைய ஒன்பது டிசைன்களும் அடங்கும். 1993ம் ஆண்டிலிருந்து கடந்த








• போட்டிக்கு அனுப்பிய டிசைன்கள்...!

யாருக்கும் இல்லாது போன ஆயிரம் சுவிஸ் ஃபிராங்க்!




• கோபாலகிருஷ்ணன்

1997 அக்டோபர் 9 உலக தபால் தினம் கொண்டாடப்பட்ட வரை போட்டிக்கான அறிவிப்பின்படி, போஸ்டர் வெளியிடப்பட வில்லை. நான்கு ஆண்டுகள் ஆகியும் இதுவரை எந்தத் தகவலும் இல்லை. 'For a great Inter- national Service' என்ற பதாகையின் கீழ் விளம்பரம் வெளியிட்ட அஞ்சல் துறை, சம்பந்தப்பட்ட ஆர்ட்டிஸ்ட்களுக்கு இதுவரை எந்தத் தகவலும் அளிக்கவில்லை.

"ஆர்ட்டிஸ்ட்களிடம் எழுந்துள்ள சந்தேகம் இதுதான்! எங்கள் ஓவியங்கள் உலகச் சந்தைக்கு இலவசமாகத் தாரை வார்க்கப்பட்டதா? அல்லது இடையில் வந்த யாராவது இவற்றை யெல்லாம் பணமாக்கி விட்டார்களா?" என்று குமுறுகிறார் கோபாலகிருஷ்ணன்.

"இது குறித்து அஞ்சல் துறையுடன் தொடர்பு கொண்டு விசாரித்தீர்களா?"

"பலமுறை தொழில் ரீதியான காரணங்களுக்காக தில்லி சென்றபோது, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை 'டாக் பவனில்' சந்தித்தேன். தலைமை தபால் துறை அலுவலகத்துக்கு பேர்தான் Dak Bavan. நிஜத்தில் அது Dark Bavan ஆகத்தான் இருக்கிறது! டெபுடி டைரக்டர் ஜெனரல் அபர்ணா மொகில் அவர்களையே இருமுறை சந்தித்தேன். 'சர்வதேச ஆணையம் கேட்டுக் கொண்டதால் விளம்பரம் கொடுத்தோம். போட்டிக்கு வந்த போஸ்டர்களுள் சிறந்தவற்றைத் தேர்வு செய்து சுவிட்சர்லாந்துக்கு அனுப்பி விட்டோம். எங்கள் பணி முடிந்துவிட்டது. இதற்கு மேல் எங்களிடம் எது



வும் கேட்க வேண்டாம்' என்றார்!"

'சுவிட்சர்லாந்து அதிகாரிகளுக்கு எழுதிக் கேட்டிருக்கலாமே..."

"விடுவேனா? மூணு தடவ போன் போட்டுப் பேசியிருக்கேன். சரியான பதில் சொல்ல மாட்டேங்கிறாங்க. பேக்ஸ் கொடுத்தேன்! பதில் காணோம். இதுக்கு மட்டும் மூவாயிரம் ரூபா செலவழிச்சிருப்பேன். அரசு விளம்பரத்த நம்பி சொந்தப் பணத்தை விரயம் பண்ணின ஆர்ட்டிஸ்டுகளை நெனச்சுப் பாருங்க! இந்திய தபால் துறை அவங்க கனவுகளைப் பாழடிச்சிடுச்சி!

"பணத்துக்காகத்தானே கலந்துக்கிட்டிருப்பாங்க?"

"அப்படி சட்டென்று சொல்லிட முடியாது. சர்வதேசத் தரத்தில் நான் எந்த இடத்தில் இருக்கேங்கிறது தெரியறதுக்கு இது ஒரு வாய்ப்பு. ஏதோ இந்தியா மட்டுந்தான் கலந்துக்கிட்டதா, இல்லையே. இந்தியா மாதிரி வளரும் நாடுகளிலுள்ள ஆர்ட்டிஸ்டுகள்தான் இதை நம்பி மோசம் போறாங்க. நீங்க தேர்வு செஞ்ச தரமான டிசைன் எதுன்னு கேட்டா, பதிலைக் காணோமே?


"இது வரைக்கும் எங்க வீட்டுக்கே தெரியாத ஒண்ணைச் சொல்றேனே. 1993ல் என் 'தீஸிஸ்' சமர்ப்பிக்கிற சமயம்தான் இந்த விளம்பரம் வந்தது. எம்.ஏ. புராஜக்ட் ஒர்க்கையே ஒதுக்கி வச்சிட்டு, இதுக்காக மூணு மாசம் உக்காந்தேன்! வீட்டில நான் பெயிலாயிட்டதா சந்தேகப்பட்டாங்க. ஆறு மாசம் கழிச்சு தீசிஸை சமர்ப்பிச்சேன்! ப்ச்... எத்தனை வேஸ்ட் பாருங்க!"

வருத்தத்தோடு புலம்புகிறார்.

கோபாலகிருஷ்ணனின் இக்குற்றச் சாட்டை சென்னையிலுள்ள தலைமைத் தபால் நிலைய மேலதிகாரிகளிடம் முன் வைத்தோம். "போட்டி நடந்தது உண்மைதான். இன்னும் முடிவு வராதன் காரணம் எங்களுக்கே தெரியவில்லை. இதற்குள் அடுத்தப் போட்டிக்கான அறிவிப்பு மட்டும் வந்து விட்டது!" என்றார்கள்.

சந்திப்பு : **சு. வேணுகோபால்**

சோகம் அல்லது துக்கம் என்பது என்ன? அந்தக் காரியம் நடக்குமா, நடக்காதா என்பது கவலை. அந்தக் காரியம் நடந்து விட்டால் உடனடியாகக் கவலை பறந்து விடுகிறது. ஒருவேளை நடக்காமல் போய் விட்டாலும்கூட சரி, அடுத்த முறை பார்த்துக் கொள்ளலாம் என்று அடுத்த முயற்சியைத் துவங்குகிறபோது உடனடியாகக்





கவலை மறைந்து விடுகிறது.

ஆனால் சோகம் அப்படிப்பட்டதல்ல. இது

உணர்வுகள்: உறவுகள்

துக்கத்தைத் தூக்கியெறியுங்கள்!

இழப்பால் வருவது. இதுதான் நமக்குச் சகலமும் என்று ஒன்றை நாம் சார்ந்திருக்கிற போது, அதை இழந்து விடுகிறோமே, அப்போது வருவதுதான் சோகம்.

ஓய்வு பெற்ற ஒருவர், தமது சேமிப்பை யெல்லாம் ஒரு நிதி நிறுவனத்தில் போட்டிருந்தார். அந்தச் சேமிப்பின் மீதுதான் தமது ஓய்வுக்கால வாழ்க்கையையும் பையனின் கல்லூரிப் படிப்பையும் பெண்ணின் கல்யாணத்தையும் கோட்டை கட்டி வைத்திருந்தார்.

ஆனால், திடீரென்று அந்த நிதி நிறுவனம் மோசடி செய்து விட்டது. அவர் கட்டியிருந்த கோட்டையெல்லாம் சரிந்து தூள்தூளாகி விட்டது. இனி என்ன செய்வது என்று தெரியாத நிலை. இங்குதான் சோகம் வருகிறது. ஏனெனில் அவர் இதுவரை சேமித்திருந்த பணத்தை இனிமேல் சம்பாதிக்க முடியாது என்கிற நிலை. அதாவது அவரால் இனி அந்த இழப்பை ஈடு செய்யவே முடியாது என்று மனம் முடிவு கட்டுகிற போது வருவதுதான் சோகம்.

இந்த நிலையில், அவரால் எப்படி சோகத்திலிருந்து விடுபட முடியும்? இது சாத்தியம்தானா? சாத்தியம்தான்! அனைவருமே வாழ்க்கையின் யதார்த்தத்தை எதிர் கொண்டுதான் ஆக வேண்டும். வேறு வழியில்லை.

பணத்தைச் சேமிக்க எத்தனையோ பாதுகாப்பான வழிகள் இருந்தும் தான் ஏன் இப்படிச் செய்தோம் என்பதை அவர் சிந்திக்க வேண்டும். அதிக வட்டியின் கவர்ச்சி விளம்பரம் அவரது கண்ணை மறைத்து விட்டது. ஒரு நிதி நிறுவனத்தால் இப்படியெல்லாம் தர முடியுமா என்று அவர் சிந்திக்கவேயில்லை. எப்படியோ தனக்கு அதிகப் பணம் கிடைக்கப் போகிறது என்கிற சுயநலம்தான் அவரை இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டது. இதற்கு அவர் விலை தந்துதான் ஆக வேண்டும். வேறு வழியே இல்லை.

இந்த யதார்த்தத்தையும் தனது சுயநலத்தையும் அவர் உணர்ந்து கொண்டால், தன்னைத் தானேதான் அவர் ஏமாற்றிக் கொண்டார் என்பது விளங்கிவிடும். ஆரம்பத்திலேயே தனது நியாயமான சேமிப்புக்கு நியாயமான வட்டி வந்தாலே போதும் என்று நினைத்திருந்தால் இந்த சோகம் வந்திருக்காது. நியாயமான சேமிப்புக்கு ஏன் அநியாய வட்டியை எதிர் பார்க்க வேண்டும்?

தவறுதான். நடந்தது நடந்து விட்டது. இதைத் தாங்கிக் கொண்டுதான் ஆக வேண்டும். பையனின் கடைசி வருஷப் படிப்பை எப்படியாவது கஷ்டப்பட்டு முடிக்கச் செய்து, அவனை ஒரு நல்ல வேலையில் அமரச் செய்தால்தான் அவரது சோகம் போக முடியும். இதையெல்லாம் பையனுக்குப் பக்குவமாக எடுத்துச் சொல்லி, தமது வாழ்க்கையின் தவறுகளையே அவனுக்கு ஒரு பாடமாக எடுத்துச் சொல்லி அவர் செயல்பட்டால் நிச்சயம் அவரது சோகமும் மறையக் கூடிய ஒரு விஷயம்தான்.

இன்னொரு மிகப் பெரிய சோகம் மரணம். நமது குடும்பத்திலுள்ள ரொம்பவும் வயதானவர் இறக்கிற போது, 'அவர் எல்லாவற்றையும் அனுபவித்து விட்டார். இனிமேல் என்ன, அவர் ஆத்மா சாந்தியடைய வேண்டியதுதான். இது நல்ல கல்யாணச் சாவுதான்!' என்று எளிமையாக எடுத்துக் கொண்டு விடுகிறோம்.

ஆனால், அதே சமயத்தில் குடும்பத்தில் சம்பாதிக்கிற ஒரு நபர்- முதுகெலும்பாக இருக்கிற ஒரு நபர்- திடீரென்று மரணமடைகிறபோது அதை நம்மால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. காரணம் என்ன? அவரை நாம் நம்பி வாழ்ந்தோம் என்பதுதான். எனவேதான்

டாக்டர் எஸ். விஜயகுமார்

அவரது மரணம் நமக்கு இழப்பாக இருக்கிறது.

'எல்லோரும் ஒரு நாளைக்குப் போய்ச் சேரத்தானே போகிறோம்!' என்று ரொம்பவும் வயதான குடும்ப நபர் ஒருவர் மரணமடைந்த போது உண்மை பேசிய நம்மால், இப்போது அதே உண்மையை ஏற்றுக் கொள்ள முடிவதில்லை! மனம் கிடந்து தவிக்கிறது. இருந்தாலும் இதிலிருந்தும் நாம் விடுபட்டுத்தான் ஆக வேண்டும்.

நாம் என்ன செய்கிறோம்? அந்த இழப்பை ஈடு செய்கிற முயற்சியில் இறங்குகிறோம். அவரது இடத்தைக் குடும்பத்திலுள்ள இன்னொருவர் எடுத்துக் கொண்டு செயல்படுகிறார். அவரால் இழப்பு ஈடு செய்யப்படுகிறது. அப்போது குடும்பத்தாரின் சோகம் கொஞ்சம் கொஞ்சமாக மறைய ஆரம்பித்து விடுகிறது.

ஆக, சோகம் என்பது இழப்பால் வருவது. அந்த இழப்பு என்பது பணம் போன்ற விஷயம் மட்டுமல்ல; நட்பு, உறவு போன்றவையாகவும் இருக்கலாம். எதுவானாலும் அதற்கு ஈடு கிடைக்கிறபோது சோகம் மறைந்துவிடும்.

எனவே, யாரும் சோகத்தைச் சுமந்து கொண்டு வாழ வேண்டிய அவசியமில்லை. இழப்பு என்பது நமக்கு மட்டுமே வருகிற விஷயமும் இல்லை. அதுவொரு பொதுவான நியதி. இதன் காரணமாகத்தான் 'இந்த உலகமே அநித்தியம்' என்று நமது தத்துவங்கள் காலங்காலமாகச் சொல்லி வருகின்றன.

ஆக, யாருடைய வாழ்க்கையிலும் எதுவுமே நிரந்தமில்லை என்பதே உண்மை. ஆனாலும் எல்லாவற்றுக்குமே மாற்று உண்டு. அதனால் ஒன்றை இழந்ததற்கான சோகத்தை, அதன் மாற்றாக இன்னொன்றை அடைவதன் மூலம் தூக்கியெறிந்துவிட முடியும். இது தத்துவமல்ல; உண்மை.

ஆனால், இந்த ஈடு என்பதும் மாற்று என்பதும் ஒரே நாளில் கிடைத்துவிட முடியாது என்பதால்தான், நம்மைப் பாதிக்கிற சோகமும் ஒரே நாளில் மறையாமல் கொஞ்சம் கொஞ்சமாக மறைகிறது. இதைத்தான் 'காலம் தரும் மருந்து' என்று குறிப்பிடுகிறோம்.

எனவே, துக்கத்தைத் தூக்கியெறிந்துவிட்டு வாழுகிற மனப்பக்குவத்தை இந்தப் புத்தாண்டில் பெற்று வாழ்வோம், வாருங்கள். உங்கள் உறவு, நட்பு, அண்டை வீட்டார் என்று பேதமில்லாமல் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக் கூறுங்கள்; சோகத்தின் சுமைகளைத் தூக்கியெறியுங்கள்!



இன்டர்வியூவுக்கு சென்று இருந்த இடத்தில் மஞ்சுவைப் பார்த்தேன். மஞ்சுவைப் பார்ப்பேன் என்று நான் எதிர்பார்த்து இருக்கவில்லை. மஞ்சுவும் என்னைப் பார்த்தாள். பரஸ்பரம் புன்னகைகளைப் பரிமாறிக் கொண்டோம். மஞ்சுவின் கழுத்தை யதேச்சையாய்ப் பார்த்தேன். கழுத்தில் தாலி...

மஞ்சுவை நெருங்கினபோது - மஞ்சு உள்ளே சென்று விட்டாள். அவளை யாரோ அழைத்தார்கள். அந்தக் கம்பெனி முதலாளியைச் சந்திக்க உள்ளே சென்று இருக்கலாம். நான் ஓரமாய் நின்றேன். என்னைப் போன்று நிறைய ஆண்களும், பெண்களும் நின்றிருந்தனர்.

பெரிய வேலை ஒன்றும் இல்லை. வீட்டு உபயோகப் பொருட்காட்சி ஒன்று நடக்கவிருக்கிறது. பதினைந்து நாட்களுக்கு. அந்தப் பதினைந்து நாட்களுக்கு விற்பனையாளர் வேலைக்குத்தான் வந்து இருப்பது. ஒருநாளைக்கு ஐம்பது ரூபாய் சம்பளம். நேற்று தினசரி ஒன்றில் விளம்பரம் வந்து இருந்தது. ஐந்து அல்லது ஆறு பேர்களை வேலைக்குத் தேர்வு செய்யலாம். ஆனால் வந்து இருப்பதோ முப்பது நாற்பது பேராவது இருப்போம். பதினைந்து நாள் வேலைக்கு இத்தனை போட்டி....

கஷ்டத்தை நாங்கள் துரத்துகிறோமா

இல்லை கஷ்டம் எங்களைத் துரத்துகிறதா என்று தெரியவில்லை. எந்த வேலையாவது செய்யத் தயாராய் இருக்கிறோம். வேலைதான் தயாராயில்லை.

மஞ்சுவின் ஞாபகம் வந்தது. உள்ளே சென்ற மஞ்சு இன்னும் வரவில்லை. மஞ்சு வைப் பார்த்து ஆறு மாசம் இருக்குமா? இருக் கும். போன வருட தீபாவளிக்கு- இதே மாதிரி ஒரு வீட்டு உபயோகப் பொருள்கள் கண் காட்சி நடத்தினார்கள். அப்போது நான் பணிபுரிந்த ஸ்டாலுக்கு பக்கத்து ஸ்டாலில் மஞ்சு பணிபுரிந்தாள். அப்போதுதான் எங்கள் அறிமுகம் நிகழ்ந்தது. அப்போது மஞ்சுவுக்குக் கல்யாணம் ஆகி இருக்கவில்லை.

நான் பணிபுரிந்தது ஒரு ப்ரிட்ஜ்- கம் பெனியின் ஸ்டாலில். மஞ்சு பணிபுரிந்தது ஒரு மிக்ஸி கம்பெனியின் ஸ்டாலில். மூன்று மணிக்கு ஆரம்பமாகும். இரண்டு மணிக்கே சென்று விடுவேன். மஞ்சுவும் வந்து இருப்பாள். அவரவர் ஸ்டால்கள் திறக்கப் படும் வரை ஏதாவது பேசிக் கொண்டு இருப் போம். இப்படியாக ஆரம்பித்தது சினேகம்.

எங்களைப் போன்றே நிறையப் பேர் பணிபுரிந்தாலும் - என்னிடம் பேசுவதை மாத்திரம் மஞ்சு விரும்பினாள். என்னைத் தவிர்த்து வேறு எந்த ஆணுடனும் மஞ்சு பேசி நான் பார்த்தது இல்லை. நானும் மஞ்சுவுடன் பேசுவதை விரும்பினேன்.

பொண்ணா... நா ஆணா... அதுதான் வித்தியா சம். தவிர இரண்டு பேரும் கஷ்டப்படும் குடும்பத்தில் ஜனனமாகி - கஷ்டங்களோடு போராடி - கஷ்டப்பட்டு வெளியே வர முயற் சிக்கிறோம். முடியலை."

"ஏன் முடியலைன்னு யோசிச்சீங்களா?" என்று கேட்டான்.

"யோசிக்காமலா... யோசிக்கிறேன். எங்க வீட்டுல ஆறு பேர். அப்பா, அம்மா, ஒரு தங்கை, என்னையும் சேர்த்து மூணு ஆம் பளைப் பசங்க. நா ஒருத்தன் மட்டும் இப் படியா சிந்திச்சு என்ன பிரயோஜனம்... ஒரு தேரை ஒருவனால் இழுப்பது சாத்தியமா... எல்லோரும் சேர்ந்து இழுத்தாத்தானே நகரும் நாம மட்டும் அக்கறைப்பட்டு என்ன பிரயோ ஜனம்? மனசு சில சமயம் வெறுத்துத்தான் போகுது. ஆனா - அம்மா, தங்கச்சிய நினைச் சுத்தான் பல்லைக் கடிச்சிட்டு இருக்கேன்."

"உண்மைதான். நல்ல பெற்றோர், நல்ல சகோதரர்கள், நல்ல நண்பர்கள் - இதெல்லாம் கிடைக்கக் கொடுத்து வைச்சு இருக்கணும் போல் இருக்கு."

"ஆமா... மற்றவை நல்லதா கிடைச்சதோ இல்லையோ - நல்ல சினேகம் உங்க மூலமா எனக்குக் கிடைச்சு இருக்கு" என்றேன். "எனக் கும்தான்" என்று சிரித்தாள்.

பதினைந்து தினங்கள் நடைபெற்றன, அந்த வீட்டு உபயோகப் பொருட்காட்சி.

ஜனங்கள்

மஞ்சு - பி.காம். முதலாமாண்டுடன் படிப்பை நிறுத்திக் கொண்டு வேலைக்குச் செல்ல ஆரம்பித்தாள். 'க்ராஜுவேட்னா நல்ல வேலைக்குப் போகலாம்' என்று அப்பாவிடம் எவ்வளவோ சொல்லியும் அவர் கல்லூரிக்கு இவளை அனுப்ப மறுத்து விட்டார். அவருக் குக் குடிக்க பணம் வேண்டும். தன் சம்பாத்தி யத்தை எல்லாம் குடித்தே அழிக்கிறவர். குடும்பச் சக்கரம் சுழல வேண்டுமே... மஞ் சுவை வேலைக்கு அனுப்பி விட்டார். தன் னைப் பற்றிக் கூறினவள் - என்னைப் பற்றிக் கேட்டாள்.

"ஏறக்குறைய இரண்டு பேரும் ஒரே கோட்டில்தான் நிற்கிறோம். வறுமைக்கோடு. நீங்க

யோகி

தீபாவளிக்கு முந்தின தினத்தோடு முடிந்தது. விடைபெற்றோம். "நாம அடுத்து எப்பவாவது சந்திப்போமா?" என்று கேட்டேன்.

"சந்திக்கலாம். சந்திக்காமலும் போகலாம். இருவரது அட்ரஸும் பரிமாறிக் கொள்ளப் பட்டு இருக்கு."

"அதற்காகக் காரணம் இல்லாம வந்து சந்திக்க முடியுமா. ரெண்டு பேருக்குமே கவலைகளுக்குப் பஞ்சம் இல்லை. இனி புதுசா வேலை தேடணும். பதினைஞ்சு நாள் எந்தக் கவலையும் இல்லாம இருந்தோம்" என் றேன். பிறகு பக்கத்தில் இருந்த ஸ்வீட் ஸ்டா லுக்குச் சென்று ஒரு ஸ்வீட் பாக்ஸை வாங்கி மஞ்சுவிடம் கொடுத்து, 'ஹாப்பி தீபாவளி'

ஏரோப்பிளான் ஓட்டிப் பழக எட்டரை லட்ச ரூபாய்!

● ஏரோப்பிளான் ஓட்டிப் பழக எவ்வளவு செலவாகும் என்பது நம்மில் பலருக்குத் தெரியாது. எட்டரை லட்ச ரூபாய்க்கு மேல் செலவாகிறது என்றால் நம்ப முடிகிறதா? 18 மாதகாலப் பயிற்சிக்குத்தான் இந்தக் கட்டணம். இந்தப் பயிற்சியளிக்கும் 'TAAL' என்றழைக்கப்படும் Teneja Aero Space Aviation's Ltdக்குச் சென்று பார்த்தோம். இது தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஓசூரில் இருக்கிறது.

● பன்னிரண்டு பேர் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இங்கேயே தங்கிப் படிக்கும் இவர்களுக்கு சகல வசதிகளும் உள்ளன. (சும்மாவா 8.5 லட்சம் அல்லவா...!) இங்கே பயிற்சி முடிந்ததும் அரசுத் தேர்வு நடக்கும். அதில் பாஸ் செய்வது குதிரைக் கொம்பு என்கிறார்கள். இத்தனை பெரிய தொகையைக் கட்டணமாகக் கட்டுவதே நம்மைப் போன்ற சாமானியர்களுக்குக் குதிரைக் கொம்புதான் என்றபோது, "அதனால்தான் எட்டரை லட்சத்தை இரண்டு தவணைகளில் கட்டுகிற சலுகையளித்திருக்கிறோம்" என்றார் இதன் ஜி.எம்மான செனத்ரி.

● வெறுமனே விமானப் பயிற்சியோடு நில்லாது ஆறு பேர் அமரக்கூடிய 'P68-C-TC' வகை விமானங்களையும் தயாரித்து விற்பனை செய்கிறது TAAL. இதன் அடக்க விலை ரூபாய் இரண்டு கோடி. 1992-ல் துவக்கப்பட்ட இந்த விமானக் கம்பெனி இதுவரை ஐந்து விமானங்களைத் தயாரித்து விற்பனை செய்துள்ளது. இஞ்ஜின் போன்ற சில முக்கியமான பாகங்கள் தவிர்த்து மீதி உதிரி பாகங்கள் இங்கேயே தயாரிக்கப்பட்டு வடிவமைக்கப்படுகிறது. வருடத்திற்கு 24 விமானம் செய்யப் போதுமான ஆள்வசதி, இயந்திர வசதி இங்கு உண்டென்றாலும் இப்போது 12-தான் தயாரிக்கப்படுகிறதாம். இது போன்ற விமானத் தயாரிப்பும், பயிற்சியும் ஒருங்கே அமையப் பெற்ற இடங்கள் இந்தியாவில் மிகச் சொற்பம். அதனாலேயே பல்வேறு மாநிலத்தவர்களோடு

என்றேன். 'எதுக்கு வீண் செலவு' என்று தயங்கினவாறு வாங்கிக் கொண்டாள். "ரமேஷ் நீங்க எனக்குச் செஞ்ச மாதிரி உங்களுக்கு ஏதாவது பிரசண்ட் பண்ணனும்னு நினைக்கிறேன். ஆனா வீட்டுல ஏதுடி சம்பளக் காக குறையுதுன்னு கேட்டுத் திட்டுவாங்க. அதனால் என்னால் வாங்கிக் கொடுக்க முடியலை" என்றாள்.

"நா உங்ககிட்ட கேட்கலை. உங்க மேல எனக்கு உற்ற அன்பை வெளிக்காட்ட பிரியப் பட்டேன். அதே சமயம் தீபாவளிக்காக ஏதாவது நா கொடுக்கனுமில்லையா. பொருள் ஏதும் கொடுத்துத்தான் நட்பைக் காட்டணுங்கிற அவசியம் இல்ல" என்றேன்.

அன்றைக்குப் பிறகு – இன்று மீண்டும் சந்திக்கிறோம். ஆறு மாதங்களுக்குப் பிறகு. இருவரின் வாழ்க்கையிலுமே பெரிசாய் ஒன்றும் மேம்பட்டு விடவில்லை. செல்வி மஞ்சு – திருமதி மஞ்சுவாகி விட்டாள். அவ்வளவுதான். எனக்கு மஞ்சுவைப் பிடித்து இருந்தது. சாதாரண இந்த சினேகம் – திருமண பந்தம் வரை தொடர வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. அதே சமயம் – அது சாத்தியமில்லை என்று தோன்ற – எனக்குள் என் ஆசைகளைப் புதைத்து விட்டேன்.

மஞ்சு வெளியே வந்தாள். "ஹலோ ரமேஷ்" என்று வந்தாள். இப்போது நான் உள்ளே செல்ல வேண்டும். "போயிட்டு வாங்க... நா வெயிட் பண்றேன்" என்றாள். உள்ளே போய் அந்த நிறுவனத்தின் முதலாளி கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொன்ன பிறகு, அவர் எக்ஸிபிஷன் வேலைக்கு வரச் சொன்னார். சந்தோஷமாய் இருந்தது. இந்த வேலை கிடைக்குமோ, கிடைக்காதோ என்று பயமாய் இருந்தது.

வெளியே வந்தேன். மஞ்சு காத்திருந்தாள். மஞ்சுவை நோக்கி நடந்தேன். "என்ன சொன்னாங்க?"

"வேலைக்கு வரச் சொன்னாங்க" என்றேன்.

"பரவாயில்லே. உங்களுக்குக் கிடைச்சிடுச்சு. என்னிடம் ஒன்றும் சொல்லலை. அப்ப இந்த வேலை எனக்கு இல்ல போல் இருக்கு. இந்த வேலை கிடைச்சு இருந்தா நல்லா இருந்து இருக்கும். ஒரு பதினைஞ்சு நாள் பிரச்னை இல்லாம இருந்து இருக்கும்" என்றாள்.

இருவரும் பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தோம். "மேரேஜ் ஆயிடுச்சு போல் இருக்கு. சொல்லவே இல்ல."

பல்வேறு நாட்டவரும் இங்கு வந்து பயிற்சி பெறுகின்றனர்.

● சைக்கிள், மொபெட் வாடகை... கார், டெம்போ வாடகை போல் அவசரத்துக்கு விமானத்தையும் இங்கே வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம். ஒரு நாளைய வாடகை எவ்வளவு



தெரியுமா...? பயந்து விடாதீர்கள்... 25,000 ரூபாய்தான். பெட்ரோல், பைலட் எல்லாம் தனி செலவு.

சந்திப்பு, படம் : கா.சு. வேலாயுதன்

''சொல்லத் தோணலை. அதோட சொன்னா – உங்களுக்குத்தான் வீண் செலவு. மொய்ங்கிற பேர்ல அம்பது ரூபாயை நீங்க அழணும். உங்களுக்குன்னு எவ்வளவோ செலவு இருக்கும். பிறருக்கு ஐம்பது ரூபாய்ங்கிறது பெரிய விஷயமே இல்லை. ஆனா நமக்குப் பெரிய தொகை இல்லையா...''

''அதுக்காக கல்யாணத்தைச் சொல்லாம இருக்கிறதா...?''

''உங்களுக்கு மேரேஜ் பேசலையா?''

''தங்கச்சிக்கு முடிக்கணும். அப்புறம் ரெண்டு அண்ணன்ங்களுக்கு முடிக்கணும். எப்படியும் ஏழெட்டு வருடங்கள் கழிந்து ஆகலாம். ஆகாமலும் போகலாம்.''

''நீங்க இந்த ஆறு மாசமா என்ன பண்ணீங்க'' என்று கேட்டான்.

''திருப்பத்தூர்ல ஒரு கெமிக்கல் கம்பெனிக்குப் போனேன். நல்ல சம்பளம்தான். அங்க இருந்து பணம் அனுப்ப – அண்ணாவும், அப்பாவும் இஷ்டத்துக்குச் செலவு பண்ணிட்டு குடும்பத்தைக் கவனிக்காம சுத்தினாங்க. 'அம்மா இங்கேயே வந்துடுப்பான்னு சொன்னாங்க. நீ இருந்தாத்தான் வீடு வீடா இருக்கு...'ன்னு லெட்டர் போட்டாங்க. வந்துட்டேன். ஆறு மாசத்துல நம்ம நிலையில் பெரிய மாற்றம் இல்ல. பார்த்தீங்களா.. வளர்ச்சிங்கிறது இல்ல. ஆனா பொதுவா எத்தனையோ மாற்றங்கள். ஆட்சி மாற்றம், விலைவாசி ஏற்றம்னு இப்படி.''

''உண்மைதான். செல்வி மஞ்சுவா இருந்த நான் – திருமதி மஞ்சுவா மாறி இருக்கேன். வேறு மாற்றம் இல்லை. அப்பா வீட்டுல இருந்த அதே பிக்கல், பிடுங்கல் – கணவன் வீட்டுல தொடருது. நீங்க ஏதாவது தொழில் பண்ணலாம்ல.''

''பண்ணலாம்தான். அப்பளக் கம்பெனி ஒண்ணு ஆரம்பிக்கலாம்னு பார்த்தேன். பாங்க்ல லோன் வாங்கி – மெஷினரி வாங்கிப் போடலாம்னு. லோன் கிடைக்கலை. வெளியே பெரிசா பேசிக்கிறாங்க, பட்டதாரி இளைஞர்களுக்குக் கடன் தர்றோம்னு. ஆனா உண்மை வேற. வேற ஏதாவது பண்ணலாம்னா தடங்கலா வருது. வீட்டுல ஓரளவு ஒத்துழைப்பு இருக்கணும். ஒருத்தர் இரண்டு பேர்னா செலவைக் கட்டுப்படுத்தலாம். எல்லாத்தையும் நாமளே பார்க்கணுங்கிற போது எரிச்சல்தான் வருது. திருப்பூர்ல இருந்து வரும்போது பனியன் ஜட்டிகள் – ஹோல்சேல் ரேட்டுக்கு வாங்கிட்டு வந்து இங்க சேல்ஸ் பண்ணினேன். தெரிஞ்சவங்ககிட்ட சேல்ஸ் பண்ணினதால் பணம் இப்போ தர்றேன், அப்போ தர்றேன்னு இழுத்தடிக்கிறாங்க. நம்ம நெற்றியில் இளிச்சவாயன்னு எழுதி இருக்கோ என்னவோ.''

''எங்க நெத்தியக் காட்டுங்க பார்ப்போம்'' என்றான் மஞ்சு. சிரித்தேன். ''சரி உங்க லைஃப் எப்படி இருக்கு?''

எப்பவும் போலத்தான். அதே கஷ்டங்கள் தொடருது. முன்ன என் சம்பளத்தைப் பிடுங்கி அப்பா தண்ணியடிப்பார். இப்ப என் புருஷன் செய்யறார். என் கணவர் வேன் டிரைவரா இருக்கார். நல்ல வருமானம்தான். ஒரு சென்ட்ரல் கவர்மெண்ட் ஸ்டாப் வாங்குற சம்பளம். ஆனா எல்லா கெட்ட பழக்கங்களும் உண்டு. வறுமையோட மல்லுக்கு நிற்க வேண்டி இருக்கு. ஒரு வேடிக்கை... நான் ஒரு காஸ் சிலிண்டர் கம்பெனில வேலை பார்த்தேன். ஆனா எங்க வீட்டு அடுப்பு எரிய மண்ணெண்ணெய் கூட இல்ல. இப்படித்தான் வாழ்க்கை முரண்பாடா இருக்கு. அதே காட்சி, அதே நாடகம் ஆனா வேற மேடையில். முன்ன – கழுத்துல பித்தளை டாலரும், கறுப்புக் கயிறுமா... இப்போ தாலியும் மஞ்சள் கயிறுமா...'' என்று சிரித்தான்.

எனக்குச் சிரிப்பு வரவில்லை. மனப் பாரமாய் இருந்தது. இருவருமே எதுவும் பேசாமல் நடந்தோம். ●

“டெஸ்ட் பந்தயங்களிலும்

— இலங்கை அணியின் துணை கேப்டன் பேட்டி

அரவிந்த் டிசில்வா - இலங்கை கிரிக்கெட் அணியின் துணைகேப்டன். அண்மையில் இவரைச் சந்தித்த போது, 'இதுவரை நான் எந்தத் தமிழ்ப் பத்திரிகைக்கும் பேட்டி தந்ததில்லை. நீங்கள் கேட்டவுடனேயே ஒப்புக் கொண்டதற்கு என்ன காரணம் தெரியுமா? நாங்களும் தமிழர்களும் ஒன்றுதான் என்பதைத் தெளிவாக்கவே ஒப்புக் கொண்டேன்' என்றார். கடந்த உலகக் கோப்பை ஆட்டத்தின்போது தொடர்ந்து நான்கு முறை சிறந்த ஆட்டக்காரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை வெல்ல, இவரது சதமே உதவியாக இருந்தது. எந்தச் சூழ்நிலையிலும் அலட்டிக் கொள்ளாமல் பேட்டிங் செய்வது இவரது தனிச் சிறப்பு...

கல்கி : உங்களைப் பற்றிச் சுருக்கமாக வர்ணிக்க வேண்டுமானால், 'இலங்கை அணியின் முதுகெலும்பு' என்று சொல்லலாம். இந்த வெற்றியின் ரகசியம் என்ன?

அரவிந்த் டி.சில்வா : இது ரொம்பவும் அதிகபட்ச வர்ணனை சார். (அவரது முகத்திலும் வார்த்தைகளிலும் கூச்சம் தெரிகிறது). நான் மட்டுமா எங்கள் அணிக்கு ரன்களைக் குவிக்கிறேன்? Ceat ranking-ல் முதல் இடம் வகிக்கும் ஜெயசூர்யாவுக்கும் எனக்கும் நாற்பது பாயிண்டுகள் வித்தியாசம் உள்ள நிலையில் என்னை எப்படி இப்படி அழைக்க முடியும்? கேப்டன் ரணதுங்காவின் சாமர்த்தியம் இல்லாமல் எங்கள் அணி வெற்றி பெற முடிந்து விடுமா என்ன! மகானாமா, முரளிதரன் ஆகியோரும் முக்கியமானவர்கள். நானும் ஏதோ ரன்களை எடுக்கிறேன், அவ்வளவுதான்!

கல்கி : இந்த ஆண்டில் மட்டும் நீங்கள் தொடர்ச்சியாக ஏழு சதங்கள் அடித்திருக்கிறீர்கள். மொத்தம் 1,300 ரன்களுக்குமேல் எடுத்திருக்கிறீர்களே?

அரவிந்த் : இருக்கலாம். பந்துகள் கச்சிதமாக வந்து என் பேட்டில் பட்டதால் ரன்களை நானும் குவித்திருக்கலாம். ஆனாலும் இது ஒன்றும் அதிசயமில்லையே! மேற்கிந்திய அணியின் லாரா ஒரே ஆண்டில் கிட்டத்தட்ட 1,600 ரன்கள் எடுக்கவில்லையா? கடந்த ஆண்டில் உங்கள் சச்சின் டெண்டுல்கரும் ஆஸ்திரேலியாவின் மார்க் வாக்கும் ரன்களைக் குவிக்கவில்லையா என்ன! எங்கள் ஜெயசூர்யாவும் இந்த ஆண்டில் ஆயிரம் ரன்களுக்கு மேல் எடுத்துவிட்ட நிலையில், என்னை மட்டும் குறிப்பிட்டுக் காட்டுவது சரியல்ல. ஓர் அணியின் வெற்றிக்கு அனைவருடைய முயற்சியுமே தேவை. எனவே, தனிப்பட்ட ஒருவரை மட்டுமே காரணமாகச் சொல்லக்கூடாது. ஏதாவதொரு குறிப்பிட்ட ஆட்டத்தில் வேண்டுமானால் தனிப்பட்ட நபர்களால் ஆட்டத்தின் போக்கு மாறலாமே தவிர, எல்லாச் சமயங்களிலும் தனிப்பட்ட ஒருவரே அணியின் வெற்றிக்குக் காரணமாக இருந்துவிட முடியாது.

கல்கி : ஒரு நாள் போட்டிகளில் வெற்றி பெறுவது போல, ஏன் உங்கள் அணி டெஸ்ட் பந்தயங்களில் வெற்றி பெறுவதில்லை?

அரவிந்த் : கடந்த இரண்டாண்டு காலமாகத்தான் எங்கள் அணியின் திறமை ஒருநாள் போட்டிகளிலும் வெளிப்படுகிறது. இதே மாதிரி டெஸ்ட் பந்தயங்களிலும் எங்கள் திறமை நிச்சயம் வெளிப்படும்.

கல்கி : ஒரு நாள் போட்டிகளில்



ஜெயித்துக் காட்டுவோம்!”

விளையாடும் அதே ஆட்டக்காரர்கள்தானே டெஸ்ட் ஆட்டங்களிலும் விளையாடுகிறீர்கள். அப்புறம் ஏன் இந்த முரண்பாடு?

அரவிந்த் : நீங்கள் கேட்பது சரிதான். ஆனாலும் ஒன்றை நீங்கள் கவனிக்க வேண்டும். ஒருநாள் போட்டிகளில் பேட்ஸ்மன்களின் ஆதிக்கம்தான் அதிகம். பந்து வீச்சாளர்களின் ஆதிக்கம் என்பது மிகவும் குறைவு. ஒருவர் இத்தனை ஓவர்கள் தான் போட வேண்டும் என்று பௌலர்களுக்குக் கட்டுப்பாடுகள் இருக்கிற மாதிரி பேட்ஸ்மன்களுக்கு இல்லை. எனவே, துவக்க ஆட்டக்காரர் முதல் இறுதி ஆட்டக்காரர் வரை ரன்களை அடித்துக் குவித்துத் தமது அணியை வெற்றி பெறச் செய்ய முடியும். கட்டுப்பாடுகளுக் கிடையிலும் திறமையாகப் பந்து வீசுபவர்கள் கூட நல்ல ஃபீல்டர்களைக் கொண்டு பேட்ஸ்மன்களைக் கொஞ்சம் கட்டுப்படுத்த முடியும் என்றாலும் எல்லா நேரங்களிலுமே அப்படிச் செய்துவிட முடியாது. அதுவும் ஜெயசூர்யா, டெண்டுல்கர், லாரா, சையது அன்வர் ஆகியோர் முழுவீச்சில் ஆடுகிறபோது பந்து வீச்சாளர்களால் ஒன்றுமே செய்ய முடியாமல் போய்விடுகிறது. ஆனால் டெஸ்ட் பந்தயங்களில் பந்து வீச்சாளர்களுக்குக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாததால் அவர்களின் ஆதிக்கம் மேலோங்கி விடுகிறது. இரண்டு நல்ல பௌலர்கள் இருந்தாலே போதும் சுலபமாக வெற்றி பெற்றுவிட முடியும். எங்கள் அணியில் மிகவும் திறமையான பௌலர்கள் இல்லை. ஆனாலும் இது தாற்காலிகமான ஒரு விஷயம்தான். விரைவில் டெஸ்ட் பந்தயங்களிலும் நாங்கள் நெம்பர் ஒன் என்பதை நிச்சயம் நிரூபிப்போம்.

கல்கி : மிகச் சிறந்த பௌலர்கள் உங்கள் அணியில் இல்லாததால்தான் டெஸ்ட் பந்தயங்களில் ‘நெகடிவ் அப்ரோச்’சுடன் ஆடுகிறீர்களா? அதாவது ஆட்டத்தை ‘டிரா’வில் முடிப்பதற்காக நீங்கள் விளையாடுகிறீர்களா?

அரவிந்த் : நீங்கள் சொல்வதை ஒப்புக் கொள்ள முடியாது. விதிகளின்படிதான் எங்கள் கேப்டன் செயல்படுகிறார். எந்த அணியின் கேப்டனும் தமது அணி தோல்வியைச் சந்திப்பதைவிட ‘டிரா’ மேல் என்றுதானே நினைப்பார். அப்படி நாங்களும் நினைப்பதில் என்ன தவறு?

கல்கி : முன்பெல்லாம் நீங்களும் பந்து வீசியிருக்கிறீர்கள். இப்போது ஏன் வீசுவதில்லை?

அரவிந்த் : இப்போது நான் முழுமையாக பேட்டிங்கிலேயே கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. அதனால்தான் போடுவதில்லை. அப்புறம், எனக்கும் வயதாகவில்லையா என்ன!

கல்கி : உங்களின் ஆசை என்ன?

அரவிந்த் : சென்னை சிதம்பரம் மைதானத்தில் ஆடி, சென்னை ரசிகர்களின் பாராட்டைப் பெற வேண்டும் என்பதுதான். ⭘

படம், பேட்டி : **நந்தினி**



முதல்வர்-கவிஞர் இரு லடாய்!

மும்பை மசாலா:

நின்றும்... நடந்தும்... இருந்தும்

'நல்ல கவிஞர்' அவார்டை, உருது அகாதமி சார்பில் மனோகர் ஜோஷி கொடுக்கிறார் என்றவுடன், ''முன்பொருமுறை ஆஷா போன்ஸ்லேவை கௌரவிக்கும் விழாவில், நான் முஸ்லிம் என்பதால், ஜோஷி உட்கார்ந்தபடியே பரிசை வழங்கி என்னை அவமானப்படுத்தினார்; அதனால் அவர் கையால் இப்போது நான் பரிசு வாங்க மாட்டேன்'' என ஒற்றைக் காலில் நின்றார் கவிஞர் மஜ்ருஹ் சுல்தான்புரி. ''உட்கார்ந்திருந்தேனா? அபாண்டம்! ஒன்றிரண்டு, வயசான கலைஞர்களுக்கு, அவர்களால் நடக்க முடியாதென்று, அவர்களிருக்கும் இடம் சென்று கௌரவித்தேன்; மற்றவர்களுக்கு, என் இருக்கை அருகில் நின்று கொண்டுதானே பரிசு வழங்கினேன்? நான் அவரை மராத்தியராகப் பார்க்கிறேனேயன்றி, முஸ்லிமாக இல்லை'' என்று பழைய வீடியோ கேசட்டை எல்லாம் சாட்சியாகப் பத்திரிகையாளர்களுக்குப் போட்டுக் காட்டி, தாம் குற்றமற்றவர் என்பதை, நல்ல மருமகன் பாணியில் நிருபித்திருக்கிறார் ஜோஷி. மஜ்ரு சாஹேப்பும் ''சரி... சரி... பரிசை ஏற்றுக் கொள்கிறேன்; ஆனால் இதற்கென்று நாக்பூரெல்லாம் வர முடியாது; மும்பையில் விழா நடத்தினால் வருவேன்'' என்று சற்று இறங்கி வந்திருக்கிறார், மாமியார் மிடுக்கை விடாமல்!

நிரந்தர நாயகன் தாக்கரே!

'சிவசேனைதான் தாக்கரே; தாக்கரேதான் சிவசேனை' என்பதைத் தெரிந்து கொள்ளாமல், எலெக்ஷன் கமிஷனர்களில் ஒருவரான கிருஷ்ணமூர்த்தி, உட்கட்சித் தேர்தல் நடத்தியே ஆக வேண்டும் என அடம் பிடித்தாரா? நிமிட நேரத்தில் அந்த நாடகத்தையும் அரங்கேற்றி, பால்தாக்கரே தான் அதன் ஆயுட்காலக் கதாநாயகன் என்பதையும் உறுதிப்படுத்தி விட்டனர் சேனைக் காரர்கள். இனி கிருஷ்ணமூர்த்தி பங்கேற்கும் நிகழ்ச்சிகளை எல்லாம் புறக்கணிப்பது என்று ஒட்டு மொத்தமாகத் தீர்மானமும் நிறைவேற்றி விட்டனர். 'தில்'லுக்கு, சேனைக் காரர்களுக்குச் சாதகமான பார்வையே இருப்பதால், தில்லி சென்று, அவருடன் மட்டும் பேச்சுவார்த்தை நடத்தப் போகிறார்களாம். அங்கே தப்பித் தவறி 'இஷ்மு' இருந்துவிட்டால் பேசாமல், எழுத்து வடிவத்தில் தங்கள் தீர்மானங்களை 'தில்'லிடம் சமர்ப்பித்து விட்டு திரும்பி விடுவார்களாம்!

கிடாரா? ஐயோ... ஓடு!

மும்பையில் யாராவது உங்களிடம் 'கிடார் வாசிக்கத் தெரியுமா?' என்று கேட்டால், 'ஓ' என்று தலையை ஆட்டி வைக்காதீர்கள்; அடுத்த நிமிடமே, ஏதாவது ஒரு "அண்டர்வர்ல்ட் காங்கி"ல் ஃப்ரீ மெம்பர்ஷிப் கிடைத்துவிடும்! சந்தேகமாயிருந்தால் மும்பை போலீசைக் கேட்டுப் பாருங்கள் - "கிடாரைக் கொண்டு வா; இல்லாவிட்டால் காமிராவாவது நிச்சயம் வேண்டும்! காக்காய் குருவி எல்லாம் இருக்கிறதா பார்த்துக்கொள்" என்றால் என்ன அர்த்தமென்று! உங்களுக்கு நல்ல "வரவேற்பு" கிடைக்கும்; கிடார் என்றால் AK-47னாம்! காமிரா தான் பிஸ்டல், மொபைல், பேஜர் எல்லாம் காக்கா கு(க)ருவிகள்! போகிற போக்கைப் பார்த்தால் இந்த அண்டர்வர்ல்ட் பாஷைக்கென்று போலீஸ் புது அகராதியே போட்டுவிடும் போலிருக்கிறது.

எப்படை வெல்லும்?

மும்பையில், வரவர தூரத்துப் புறநகர் பகுதிகளிலெல்லாம் கூட, மார்க்கெட்டுக்குப் போக வேண்டுமென்றால், நடந்து சென்றால் 15 நிமிடம், ஆட்டோவிலென்றால் 20 நிமிடம், காரிலோ அரைமணி என்ற நிலைக்குப் போக்குவரத்து நெரிசல் மோசமாகி விட்டது. கூடவே பொல்யூஷன் பிரச்னை வேறு! இந்நிலை மாற, சிங்கப்பூர் ஸ்டைலில், இரட்டைப் படை எண்களை உடைய வாகனங்கள் 2,4,6... நாட்களிலும், ஒற்றைப் படை எண்களென்றால் 1, 3, 5... நாட்களிலும் ஓடவேண்டுமென்ற புதிய சட்டத்தைக் கொண்டு வரலாமா எனத் தீவிரமாகப் போக்குவரத்துத் துறை யோசித்துக் கொண்டிருக்கிறதாம்!

கல்லூரிக் கவலைகள்

கல்விக்கூடங்கள் வரவர, கற்பவர்கள், கற்பிப்பவர்கள் இருவருக்குமே பிரச்னைக் களங்களாக மாறி வருகின்றன. வாஷியிலுள்ள ஃபாதர் ஆக்னல் இஞ்ஜினியரிங் கல்லூரியில், மூன்றாமாண்டு மாணவனான ஆனந்தராஜின் காம்பஸ் பாக்ஸில் ஏதோ ஃபார்முலா இருக்கியிருந்ததால், அவன் காப்பியடித்ததாக் குற்றம்சாட்டப்பட்டு, பாதி பரீட்சையிலேயே வீட்டுக்கனுப்பப்பட்டான். மனமுடைந்த மாணவன் வீட்டுக்குச் செல்லாமல், வீடு பேறையே தேடிச் சென்று விட்டான். அவனது தற்கொலை, மாணவர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இது ஒருபுறம் என்றால், மறுபுறம் பரேலிலுள்ள லாலா லஜ்பத்ராய் காலேஜின் வாசலில், தனக்குச் சேர வேண்டிய பி.எஃப்., கிராஜுவிடி முதலியவற்றை எதிர்நோக்கி, அரைப் பைத்தியமான நிலையில் விரிவுரையாளர் பாவனா காஷ்யப்! பாவம் காஷ்யப், பொருளாதாரத்தைக் கற்றுத் தந்தாரே தவிர, தம் குடும்பத்தாருக்குப் பெற்றுத் தரவில்லை! அதனால் வீட்டிலிருந்தும் கல்தா! செய்தித்தாள்களில் வந்த விஷயத்தைப் படித்துவிட்டு யாரோ பழைய மாணவர் ஒருவர் அவருக்கு உதவ முன்வந்திருக்கிறாராம்.

மும்பையிலிருந்து: **ஜெயஸ்ரீ ராஜ்**



ஜனவரி 6-ல் கிறிஸ்துமஸ்!

சென்னை-எஸ்பிளனேடு பகுதியிலுள்ள அரண்மனைக்காரத் தெருவில் (ஆர்மேனியன் தெரு என்பதுதான் அரண்மனைக்காரன் தெருவானது) உள்ளது ஆர்மேனியன் சர்ச்! இதன் வயது 225. ஆங்கிலேயருக்கு முன்பே இந்தியாவுக்குள் அடியெடுத்து வைத்தவர்கள்தான் ஆர்மேனியர்கள் அதாவது போர்த்துக்கீசியர்கள். ஆனாலும் இவர்கள் இந்தச் சர்ச்சைக் கட்ட ஆரம்பித்தபோது பிரிட்டிஷ் அரசு முதலில் அனுமதி மறுத்து விட்டதாம். 50 ஆண்டுகளுக்குப் பிறகுதான் அனுமதி தந்ததாம். உலகமே டிசம்பர் 25-ம் தேதி கிறிஸ்துமஸைக் கொண்டாடினாலும் போர்த்துக்கீசியர்கள் ஜனவரி 6-ந் தேதியன்றுதான் கொண்டாடுகிறார்கள். எனவே, இந்தச் சர்ச்சிலும் வரும் ஜனவரி 6-ந் தேதிதான் கிறிஸ்துமஸ் கொண்டாடப்படுகிறது.

படம்; தகவல்: ச.க. மணியன்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சாரியார்

'என்னால் ஆனது இவ்வளவுதான்' என்று வாசல் திண்ணையில் போய் உட்கார்ந்தால் ஆயிற்றா... அது பிரயோஜனமில்லை. 'உன்னால் செய்ய முடியாத தர்மங்களை விட்டு விடு...' என்று சொன்னவன், 'விட்ட ஸ்தானத்தில் என் திருவடியைப் பிடித்துக் கொள்' என்றும் சொல்கிறான். 'என் ஒருவனுடைய திருவடியையே கெட்டியாய்ப் பற்று...' எவ்வளவு அழகாகச் சொல்லிக் கொடுக்கிறான்! 'என் திருவடியைப் பற்று... வீணான காரியத்தில் போய் முனையாதே...' இதைக் காட்டிலும் யார் சொல்லுவார்கள் நமக்கு?!

சுத்த பிரகாசிகாச்சார்யார் என்கிற ஆசார்யர் ரொம்ப அழகாகச் சொல்கிறார். - கங்கைக் கரையிலேயே ஒருத்தர் நிற்கிறாராம்... அவருக்கு ரொம்ப தாகம்! அந்த கங்கையிலிருந்தே ஒரு துளி நீரெடுத்துப் பருகினால் அவருக்கு தாக சாந்தி ஏற்படும். கங்கைக் கரையிலே நின்று கொண்டிருக்கிற அவன், ஓடுகிற கங்கையை விட்டு விட்டு, தாக சாந்திக்கு கங்கைக் கரையிலே கிணறு வெட்ட ஆரம்பித்தானாம்!

'என்னத்துக்கு வெட்டுகிறாய்...?' என்று கேட்டால், 'தாகத்துக்காக...' என்றானாம்.

'என் திருவடியைப் பற்று' என்று பகவான் சொல்கிறானே... அவன் அருள், கங்கை பிரவாகம் மாதிரி ஓடுகிறது. அதை விட்டு விட்டு, 'நான் அதைப் பண்ணுகிறேன். இதைப் பண்ணுகிறேன்...' என்று ஏன் கஷ்டப்பட வேண்டும்?

பகவான் கீதையிலே தன் திருவடியைப் பற்றும்படி சொல்கிறான் என்றால், ஏதோ அர்ஜுனனுக்கு ரத சாரதியாயிருந்த ஒரு சாமானியன் என்று அவனை நினைத்து விடலாகாது. அவன் சாமானியனாய் இருப்பதே பக்தர்களுக்காகத்தான். பக்தபராதீனனாக, பக்தர்கள் இட்ட வழக்காய் வேலை செய்யக் கூடியவனாக அவன் இருக்கிறான்.

'என்னுடைய குணத்தை உணர்வாயாக. நான் யார் தெரியுமா...?' என்று அவன் கேட்கிறான். 'அஹம்' என்கிற பிரயோகம் வருகிறது.

அந்த 'அஹம்' என்கிற சப்தத்தை அவன் ஒருவன்தான் சொல்லக்கூடிய தகுதி படைத்தவன். நமக்கெல்லாம் அந்த அருகதை கிடையாது.

ஒரு சிஷ்யன், ஆசார்யனிடம் போனானாம். 'யார் நீ?' என்று கேட்டிருக்கிறார் அவர். 'நான் வந்திருக்கிறேன்...' என்று பதில் சொல்லியிருக்கிறான் அவன்!

'நான் செத்த பிற்பாடு வா...' என்று பதில் கூறியிருக்கிறார் ஆசார்யார்.

நடுங்கிப் போய்விட்டான் அவன்! 'நான்' செத்த பிறகு எப்படி வருவதாம்...?

சில நாட்கள் கழித்து மறுபடியும் குருவைக் காண வந்தான் சிஷ்யன்.

'நான் வந்திருக்கேன்!' என்றான். மீண்டும் அவர் அப்படியே சொல்லியனுப்பி விட்டார் 'நான் செத்த பிற்பாடு வா!'

இப்படி பல முறை நடந்த பிறகு ஒரு நாள் வந்தவன், 'தாஸன் வந்திருக்கேன்...' என்று சொல்லியிருக்கிறான் குருவிடம்.

அன்றைக்குத்தான் குரு 'உள்ளே வா!' என்று அழைத்தாராம்.

'நான் செத்த பிற்பாடு' என்றால் 'நான் என்று சொல்கிறாயே, அது உன்னைவிட்டு நீங்கிய பிற்பாடு' என்று அர்த்தம். 'அடியேன்' என்றோ, 'தாஸன்' என்றோதான் கூற வேண்டுமேயொழிய, 'நான்' என்று சொல்லவே கூடாது.


இதற்கு ராமாயணத்திலே ஒருவர் உதாரணமாயிருந்தார்.

இளையபெருமாள் லக்ஷ்மணன் ராமனிடம் சொன்னாராம்: 'உன்னுடன் வந்திருந்து, நீ தூங்கும்போதும், விழித்திருக்கும் நேரத்திலும் எல்லா கைங்கர்யமும் பண்ணுகிறேன்...'

பரமாத்மாவுக்குக் கவலை வந்து விட்டது! 'ஐயோ! இவ்வளவு கைங்கர்யம் பண்ணுவதாகச் சொல்கிறவன் கூடவே 'நான்' என்றும் சொல்லிவிட்டானே...' என பகவான் கவலைப்பட்டானாம்!

சித்ரகூடத்தில் பரதன் வந்து பகவானிடம் வேண்டிக் கேட்டுக் கொள்ளும்போது என்ன சொல்கிறான்... 'எல்லோரையும் முன்னிட்டு,

குறையொன்றுமி




அடியேனால் பிரார்த்திக்கப்படக்கூடிய இந்த வார்த்தையை நீங்கள் கேட்க வேண்டும்' என்கிறான்.

அதனால்தான், லக்ஷ்மணன் முன்னிலையிலே, பரதனையே அதிகமாகக் கொண்டாடுகிறான் பகவான். காரணம்... 'அஹம்' என்று லக்ஷ்மணன் சொல்லிவிட்டதுதான்!

ஆகவே 'அஹம்' என்பதை பகவான் மட்டுமே சொல்லலாம். நமக்கு அந்த உரிமை இல்லை! ஏனெனில் அவன் மட்டுமே ஏக ஆத்மாவாக, ஏக வீரனாக இருக்கிறான். அவனே ஆத்மா; பரமாத்மா; எல்லா பாபங்களிலிருந்தும் நம்மை விடுவிப்பவன்.

பாபங்கள் மூன்று விதம்! மூட்டை மூட்டையாகக் குருவி சேர்க்கிற மாதிரி நாம் ஏற்கெனவே சேர்த்து வைத்திருக்கிற பாபங்கள். இரண்டாவது, பலனைக் கொடுக்க ஆரம்பித்து விட்ட பாவங்கள். ஒருத்தரைப் பார்த்து, 'ஏன் இப்படி அவஸ்தைப் படுகிறார்...?' என்று பரிதாபப்படும்போது 'என்ன செய்ய அவர் பண்ணிய பாவம், பிராப்தம்!' என்று பதில் சொல்வதில்லையா... அது! மூன்றாவது வகை, இனி செய்யப் போகிற, இந்த வாழ்க்கையில்

39



செய்து கொண்டிருக்கிற பாவங்கள்!

பக்தி யோகம் பண்ணினால் மூட்டை கட்டிய பாபமும் போய் விடும்; மேல் வரக்கூடிய மொத்த பாவமும் போய்விடும்: ஆனால் பிராரப்தத்தைப் போக்கக் கூடிய சக்தி, பக்தி யோகத்துக்குக் கிடையாது. பிராரப்தத்தையும் சேர்த்துப் போக்க வேண்டுமானால், சரணாகதியினால் தான் அது முடியும். - இதைத்தான் பகவான் சொன்னான்: 'எல்லா பாபங்களையும் நான் போக்கி விடுவேன். அவற்றிலிருந்து விடுவித்து உன்னை ரக்ஷிப்பேன். கவலையே படாதே! பக்தி யோகம் செய்யவில்லையே என்ற விசாரமே வேண்டாம்...! 32 பிரும்ம வித்யைகள் தெரியவில்லையே என்று கவலைப்பட வேண்டாம். 'அது தெரியாததனால் பகவான் நம்மை ரக்ஷிப்பானா...?' என்று கவலைப்படாதே...' என்றான்.

கவலைப்படாதே, கவலைப்படாதே என மீண்டும் மீண்டும் சொல்கிறான் அவன்.

'நீ பக்தி யோகம் பண்ணினால் என்ன சந்தோஷத்தை நான் அடைவேனோ, நீ ஞான யோகம் பண்ணினால் என்ன சந்தோஷத்தை நான் அடைவேனோ, நீ கர்ம யோகம் பண்ணினால் என்ன சந்தோஷத்தை நான் அடைவேனோ... அந்த சந்தோஷத்தையெல்லாம், என் திருவடியை நீ பற்றிக் கொண்டாலே நான் அடைந்து, உனக்கு மோக்ஷத்தைக் கொடுப்பேன்...' என்கிறான்.

- இதுதான் கீதையிலுள்ள சரம ஸ்லோகத்தின் சாரம்.

'எட்டும் மூன்றும் ஒன்றுமாகி'யை விளக்கப் போய் இங்கே கீதையின் சரம ஸ்லோகத்துக்கு வந்திருக்கிறேன். 'மூன்றும்' என்றதில் அஷ்டாக்ஷரம், த்வய மந்திரம், சரம ஸ்லோகம் ஆகிய மூன்றும் அடங்கும் என்று சொன்னேன்.

இந்த மூன்றையும் நினைத்து அவனை தியானம் பண்ண வேண்டும். சமஸ்தத்திலும் பரவியிருக்கிற எம்பெருமான் இந்த மூன்று மந்திரங்களிலும் கட்டுப்பட்டுக் கிடக்கிறான்! ஆகையால்தான் இவற்றின் அர்த்தத்தைத் தெரிந்து கொண்டு நாம் தினமும் இவற்றை ஜபிக்க வேண்டும்.

இந்த மூன்றையும்கூட சொல்ல முடியாது என்கிற நிலை வருகிறபோது, 'ஓம் விஷ்ணவே நம:' என்று சொல்ல வேண்டும்.

மதுசூதன சரஸ்வதி என்கிற ஆசார்யார் ரொம்ப அழகாகச் சொன்னார்.

'உபநிஷத்திலே பிரும்மத்தைத் தேடுகிறீரே... சாந்தோக்ய உபநிஷத், கேனோபநிஷத், கடோபநிஷத், மாண்டுக்யோபநிஷத்... இப்படித் தேடித் தேடிப் பார்க்கிறீர்களே... இதிலே புத்தியைக் குழப்புகிற விஷயம் நிறைய இருக்கிறது...' என்று. அவ்வாறு தேடுகிறவரைக் கூப்பிட்டுச் சொல்கிறார்:

'உபநிஷத்திலே புத்தியைப் போட்டு ஏன் குழப்புகிறீர்கள்...? அந்த உபநிஷத்தில் எந்த தேவதை சொல்லப்படுகிறதோ, அந்த தேவதை நமக்கு இங்கே சுலபமாகக் கிடைக்கிறதே...'

எங்கே கிடைக்கிறது...?


அந்த யசோதை வீட்டிலே, உரலிலே கட்டுண்டு நிற்கிறதே!

உபநிஷத்தில் இருக்கும் பிரும்மம் ஒரு எளிய பெண்ணின் குருங்கயிற்றினால் கட்டுண்டு கிடக்கிறது.

அவன் தன்னைத் தானே கட்டுண்டு பண்ணிய பெருமாயம் அந்த நிகழ்ச்சி!

அம்மாவுக்கு சிரமத்தைக் கொடுக்கக் கூடாது என்று, தானே கட்டுண்டு நிற்கிறதாம் குழந்தை! அதைக் கட்டிப் போட கயிறு வேண்டும். கட்டிய கயிறை முடிச்சுப் போடுகிற நேரத்தில் ஓர் அங்குலம் குறைகிறதாம். குறை கயிற்றைத் தேடி வரச் செல்கிறாள். போகிறவள், குழந்தையைப் பார்த்து எச்சரித்துவிட்டுப் போகிறாள்...

'நான் போய்விட்டு வருவதற்குள் இங்கேயிருந்து எங்கேயாவது போனாயானால் தெரியும்!' என்று மிரட்டிப் போகிறாள்.



"நீங்க எழுதின கதையை ஏற்கெனவே வேறு ஒருத்தர் எழுதி படிச்சிருக்கேன்!"

"அதெப்படி? உங்களுக்கு வங்காள மொழி தெரியுமா?"

— பொள்ளாச்சி கே. சித்ரா

அந்தக் குழந்தையும் அம்மா வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அப்படியே இருக்குமாம்! எவ்வளவு நல்ல குழந்தை பாருங்கள்! அப்படி அது அசையாமல் நிற்பதைப் பார்த்து அவளுக்கு ரொம்ப சந்தோஷமாம். குழந்தைகள் நாம் சொன்ன வார்த்தையைக் கேட்டால் சந்தோஷம் ஏற்படுகிறதல்லவா...

அந்தக் குழந்தையைக் கட்டாமலே விட்டு விட்டால் என்ன... என்று நினைத்துக் கொண்டாளாம். 'ஆனால், ஊராரிடத்திலே சண்டையைக் . கொண்டு வருகிறதே' என்று நினைத்து திரும்பவும் கட்ட, மறுபடியும் ஓர் அங்குலம் கயிறு குறைந்ததாம்! வேறு கயிறு எடுத்து வரப் போனாள். மீண்டும் ஓர் அங்குலம் குறைந்ததாம்... மீண்டும் மீண்டும் கயிறு குறைய, இப்படியே நாலா திக்கிலும் ஓடி ஓடி கயிறு தேடி வியர்த்துப் போனாளாம் யசோதை!

குழந்தை பார்த்தது... 'அம்மாவை இப்படி சிரமப்படுத்துகிறோமே' என்று வருந்தி, தானே கட்டுண்டு அடங்கியது.

பக்தியாகிற கயிறுக்குத்தான் எம்பெருமான் கட்டுண்டு நிற்கிறான் என்று உணர்த்துகிறது, நிகழ்ச்சி.

குழந்தையைக் கட்டிப் போட்டவள் மாட்டுச் சாணத்தை அள்ளிப் போட்டு, வைக்கோலை எடுத்துப் போட்டு, கன்றுக் குட்டியைக் கொண்டு போய்க் கட்டி, வேலைகள் செய்கிறாள்... அம்மா செய்கிற காரியத்தையெல்லாம் பார்த்துவிட்டு, குழந்தை இரண்டு கைகளாலும் தலையில் அடித்துக் கொள்கிறதாம்...!

(தொடரும்)



அருள்வாக்கு

மனிதனுக்குப் பலவிதமான இச்சைகள், பாசங்கள், ஆசைகள். தன் இச்சையைப் பூர்த்தி செய்து கொள்கிறான். அதில் பூரித்துப் போகிறான். ஆனால் இது சாசுவதமான பூர்த்தியா, பூரிப்பா என்றால் இல்லவே இல்லை. இன்னோர் இச்சை, அப்புறமும் இன்னொன்று என்று பிரவாகமாக வந்து கொண்டேயிருக்கிறது. இருந்தாலும் இந்த ஓயாத அலைச்சலுக்கு நடுவில் அவ்வப்போது இப்படியொரு பூரிப்புப் பெறுகிறான். இது ஒருவிதத்தில் அம்பாள் செய்கிற கிருபை; இன்னொரு விதத்தில் அவளே செய்கிற ஏமாற்று வித்தை!

தான் ஆசையும் பாசமும் வைப்பவர்கள் திருப்பித் தன்னிடம் ஆசையும் பாசமும் வைத்தால் ஓரேயடியாகச் சந்தோஷப்படுகிறான். கலியாணம் பண்ணிக் கொண்டு குழந்தை குட்டிகள் பெற்று, இவ்வாறு தன் இச்சை பூர்த்தியானதாகச் சந்தோஷப் படுகிறான். குழந்தையை இவன் ஆசையோடு தூக்கிக் கொஞ்சும் போது அது 'களுக்'கென்று சிரித்தால், 'அடடா, என்னிடம் குழந்தை எத்தனை ஆசையாக இருக்கிறது?' என்று ஒரே ஆனந்தம் அடைகிறான். அதை மேலும் அன்போடு, கவனத்தோடு வளர்க்கிறான்.

மனிதன் இந்த காம இச்சை, வாத்ஸல்யம் எல்லாம் தன் சுகத்துக்காக என்று எண்ணிக் கொண்டிருக்கிறான். அதுதான் இல்லை. பல ஜீவர்கள் மறுபடி பிறவி எடுத்துத் தங்கள் கர்மத்தை அநுபவித்தாக வேண்டும்; முடிவாகக் கர்மத்தைக் கழித்துக் கொண்டு மோக்ஷ நிலையைப் பெற வேண்டும். அதற்காகத்தான் இவனுக்குக் காமமும் கலியாணமும், சந்ததியும். ஆனால் இவன் தன் இன்பத்துக்கென்று நினைத்து ஆனந்தப்படுகிறான். இப்படியாக மநுஷ்யனை இயற்கை ஏமாற்றுகிறது. இயற்கை என்றால் என்ன, அம்பாள் ஏமாற்றுகிறாள்!

இப்படி மனுஷ்யனைப் பலவிதத்தில் ஏமாற்றியாகிறது! பலவித வியஞ்சனங்களை ருசித்துச் சாப்பிட்டுவிட்டு இவன் சந்தோஷப்படுகிறானே! உணவு இவனது நாவின் சந்தோஷத்துக்காகவா ஏற்பட்டது? இல்லை, இவன் தன் கர்மாவை அநுபவிப்பதற்கு உடம்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். உடம்பு வளருவதற்கு ஆகாரம் வேண்டும். ஒரே ருசியில் ஆகாரம் இருந்தால் சாப்பிட அலுத்துப் போகும். அதனால் இயற்கை-அம்பாள்-பலவிதமான ருசிகளைக் காட்டி, இவனைச் சாப்பிட வைத்து, இவனை, 'ருசியாகச் சாப்பிட்டோம்', என்று சந்தோஷப் படவும் செய்து, இவன் கர்மாவை அநுபவிக்க வசதியாக உடம்பை வளர்க்கிறாள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சங்கராச்சார்ய
. சுவாமிகள்.

செங்கல்

குளிர்கால வானத்தில் முடியவிருக்கும் இரவின் மங்கல் வெளிச்சம். பட்டணத்தின் உறக்கம் கலையவில்லை இன்னும். பக்கத்து வீட்டிலிருந்து துல்லியமாகக் கேட்கிறது குழாயிலிருந்து தண்ணீர் சொட்டும் அரவம்.

மஞ்சரி போர்வையை விலக்கிக் கொண்டு எழுந்து, டீ தயாரிக்க ஸ்டவ் மேல் கெட்டிலை வைத்து விட்டு, மறுபடியும் போர்வைக்குள் புகுந்து கொண்டாள்.

அப்போது தெருவையே திடுக்கிடச் செய்யும்படி பெருத்த ஒலியெழுப்பிக் கொண்டு வீட்டு வாசலில் ஏதோ ஒரு வண்டி வந்து நின்றது. லாரியாகத்தானிருக்க வேண்டும்.

சற்றுப் பின்னர் அழைப்பு மணி ஒலித்தது.

எரிச்சலோடு ஜன்னல் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள். லாரிதான், அதில் நிறையச் செங்கல்.

போர்வையை உடம்பில் நன்றாகச் சுற்றிக் கொண்டு கதவைத் திறந்தாள் மஞ்சரி. லுங்கியும் ஸ்வெட்டரும் அணிந்த ஒருவன் அவ்விடம் ஒரு சீட்டை நீட்டினான்.

"என்ன வேணும்?" மஞ்சரி கேட்டாள்.

"சீட்டைப் பாருங்க. இந்த விலாசந் தானே?.. செங்கல் கொண்டு வந்திருக்கேன்.."

மஞ்சரி சீட்டை வாங்கிப் பார்த்தாள். அவள் வீட்டு விலாசந்தான். அவளுடைய அம்மாவின் பெயர். அவந்தி மஜும்தார். அதில் எழுதப்பட்டிருந்தது.

கதவைப் படாரென்று சாத்திவிட்டு உள்ளே போனாள். சிறிய ஒரடுக்கு வீடு. நான்கு அறைகள். ஒரு சமையலறை, பாத்ரூம். கடைசி அறை அம்மாவினுடையது. அறைகளையொட்டி ஒரு நீள வராந்தா.

அங்கே அம்மா இல்லை. பாத்ரூமில் இருந்தாள். அவள் வாய் கொப்புளிக்கும் அரவம் கேட்டது.

"அம்மா...." உரக்கக் கூப்பிட்டாள் மஞ்சரி.

"மணியடிச்சது.. யாரு?" அம்மா உள்ளேயிருந்தே கேட்டாள்.

"ஒரு லாரிலே செங்கல் வந்திருக்கு. என்ன விஷயம்?"

வெளியே வந்த அம்மாவின் முகத்தில் படபடப்பு தெரிந்தது. "என்ன, செங்கலா? இவ்வளவு அதிகாலையிலேயா?..." என்று கேட்டுக்





கொண்டே வாசலுக்குப் போனாள்.

மஞ்சரி அம்மாவின் கையில் சிட்டைத் திணித்தாள்.

"போய் என்ன சொல்லணுமோ சொல் லிக்கோ, எனக்கு டீத் தண்ணி கொதிக்குது."

செங்கல் மஞ்சரியின் மண்டைக்குள் நுழைந்து விட்டது. ரத்தச் சிவப்புச் செங்கல். இவ்வளவு செங்கல் எதற்கு? வீட்டைப் பழுது பார்க்கவா? பழுதுபார்க்க ஒரு லாரி செங் கல்லா வேண்டும்? இதைக் கொண்டு ஒரு சிறிய வீடு கட்டி விடலாமே!

அவளுடைய அப்பா காலத்தில் கட்டிய வீடு அது. அந்தக் காலத்துக் கட்டுமானமாகை யால் இன்னும் சிதைவடையாமல் இருக்கிறது. கடந்த இருபதாண்டுக் காலத்தில் அதாவது அப்பா இறந்த பிறகு - ஒரேயொரு தடவை சிறிது பழுது பார்க்கப்பட்டது.

அப்பா காலமான போது மஞ்சரி பி.ஏ. தேர்வு எழுதியிருந்தாள். அப்போதும் வேலை யில்லாத் திண்டாட்டம் கடுமைதான். மஞ்சரி வேலை தேடித் தெருத் தெருவாக அலைந்தாள். அப்பா வைத்து விட்டுப் போன சேமிப்பில் சிக்கன மாகக் குடும்பம் நடந்தது. அம்மா வீட்டு வேலை முழுவதையும் பார்த்துக் கொண்டாள்.

மஞ்சரியின் தம்பி கல்லூரியில் படித்துக் கொண் டிருந்தான். தங்கை பள்ளியில். தம்பி படிப்பை முடித்து வேலையில் அமர வேண்டும். தங்கைக்கு நல்ல இடத்தில் திருமணம் செய்து வைக்க வேண்டும். எஞ்சியிருந்த சேமிப்பு தீர்வதற்குள் மஞ்சரிக்கு வேலை கிடைக்க வேண்டும்.

சமையல் செய்தவாறு தன் விதியை நொந்து கொள்வாள் அம்மா. கடவுளைச் சபிப்பாள்.

மஞ்சரி தட்டச்சு, சுருக்கெழுத்து கற்றுக் கொண் டாள். வேலைக்காக அலைந்தாள். கணக்கற்ற தடவைகள் இன்டர்வியூவுக்குப் போனாள். ஏமாற்றங்கள், தோல்விகள்.

அவள் இன்டர்வியூவுக்குப் போய்விட்டு வீட்டுக்குள் நுழைந்ததும் அம்மா கேட்பாள்

"என்ன ஆச்சு?"

மஞ்சரி மௌனம்.

"சான்ஸ் இருக்கா?"

என்ன சொல்வாள் மஞ்சரி? ஒரே விதமாகப் பதில் சொல்லிச் சொல்லி அலுத்து விட்டது அவளுக்கு.

வங்க மூலம் : நீலிமா சென் கங்கோபாத்தியாய்

தமிழாக்கம் : சு. கிருஷ்ணமூர்த்தி

கடவுளைச் சபித்துக் கொண் டிருந்தாலும் அவந்தி ஒரு பொறுப்புணர்வு மிக்க இல்லத் தரசி. குழந்தைகளுக்கு டீ, டிபன், சாப்பாடு சரியான வேளைக்குக் கிடைத்து விடும். அவள் மகளைத் தேற்றுவாள், "எப்படியும் நமக்கு நல்ல காலம் பொறக்கும். நீ கவலைப்படாதே."

வேலை தேடிக் கொண்டே மஞ்சரி ட்யூஷன் சொல்லிக் கொடுத்தாள். நல்ல வேளை, அவ ளுடைய தம்பியும் தங்கையும் படிப்பில் கட்டி. அவர்களுக்குப் படிக்க ஸ்காலர்ஷிப் கிடைத்து

விட்டது. குடும்பம் எப்படியோ கண்ணியமாகக் காலந்தள்ளி வந்தது. குடும்பத்தின் வறுமை நிலை வெளியிலிருந்து தெரியாது.

ஆனால் சேமிப்பு குறைந்து கொண்டே வந்தது. அது தீர்ந்து போய்விட்டால் தங்கையின் திருமணம் எப்படி நடக்கும்? நல்ல வரன் கிடைப்பதற்கு 'நல்ல' பணம் கொடுக்க வேண்டுமே!

நல்லவேளை, கடைசியில் மஞ்சரிக்கு ஒரு வேலை கிடைத்து விட்டது. ஒரு மல்ட்டி நேஷனல் கம்பெனியில் ரிசப்ஷனிஸ்ட் வேலை.

குடும்பத்துக்கு நல்ல காலம் பிறந்து விட்டது. மஞ்சரி நன்றாக உழைத்தாள், வேலையில் படிப்படியாக முன்னேறினாள். குடும்பத்துக்குக் களை வந்தது. புதிய சோபாசெட், புதிய ஜன்னல் திரைகள், புதிய படுக்கை விரிப்பு. அவந்திக்கும் இப்போது சற்று ஓய்வு கிடைத்தது. சமையலுக்குப் பகுதி நேர வேலைக்காரி அமர்த்தப்பட்டாள்.

மிச்சமிருந்த சேமிப்போடு ஆபீசிலும் கடன் வாங்கி மஞ்சரி தங்கைக்கு நல்ல முறையில் திருமணம் செய்து வைத்தாள். தம்பி படிப்பை முடித்துவிட்டுத் தானே ஒரு துணைவியைத் தேர்ந்தெடுத்துக் கலியாணம் செய்து கொண்டு டில்லி போய்விட்டான். அங்கே அவனுக்கு ஒரு நல்ல வேலை கிடைத்து விட்டது. அதன் பின் அவனுக்கு அம்மா, அக்காவுடன் அதிகத் தொடர்பில்லை. அவனுடைய மனைவிக்கு மாமியாரைத் தன்னுடன் வைத்துக் கொள்ள இஷ்டமில்லை. அவ்வப்போது அவனிடமிருந்து கடிதம் வரும், அவ்வளவுதான்.

மஞ்சரிக்கு இப்போது வயது நாற்பது.

அவந்திக்கு எப்போதும் கவலைதான் - திருமணமான சிறிய பெண்ணுக்கு என்னென்ன பண்டிகைக்கு, என்னென்ன சீர் அனுப்புவதென்று. நல்ல முறையில் சீர் செய்யாவிட்டால் சம்பந்திகள் என்ன நினைப்பார்கள்!... அப்புறம் பிள்ளைக்கும் பிறந்த நாள் பரிசு சரியான நேரத்தில் போய்ச் சேர்ந்திருக்குமா என்ற கவலை. இதற்கான செலவெல்லாம் மஞ்சரியின் பொறுப்புதான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

மஞ்சரியின் எதிர்காலத்தைப் பற்றி யோசிக்கத் தோன்றவேயில்லை அவந்திக்கு.

மஞ்சரிக்கு ஆபீஸ் வேலை காரணமாகப் பலருடன் பழக்கம் ஏற்பட்டது. பெரிய கம்பெனியில் பெரிய ஆபீசர் என்ற முறையில் அவளுக்கு மதிப்பு இருந்தது. ரசிகர்களும் இருந்தார்கள்.

ஒரு நாள் அவள் அம்மாவிடம், "நான் கலியாணம் பண்ணிக்கப் போறேம்மா" என்று சொன்னாள்.

அவந்தி அப்போதுதான் ராமகிருஷ்ண மடத்தில் கீதைப் பேருரை கேட்டு விட்டு வந்திருந்தாள். உலகத்தில் யாரும் யாருக்கும் உறவில்லை என்ற தத்துவம் நிறைந்திருந்தது அவளது உள்ளத்தில். தூக்கத்திலும் விழிப்பிலும் பார்ப்பதெல்லாம் பொய், மாயை.

மகளின் பேச்சைக் கேட்டுத் திடுக்கிட்டாள் அவந்தி. பிறகு தன்னை சமாளித்துக் கொண்டு வாஸ்தவ உலகத்திற்கு இறங்கி வந்தாள்.

மஞ்சரிக்குக் கலியாணமா?

நீண்ட காலத்துக்குப் பிறகு நினைவு வந்தது மஞ்சரி என்ற பெண்ணைப் பற்றி. இருபதாண்டுகள் முன்னால் அவளுடைய கலியாணத்தைப் பற்றி யோசித்ததுண்டு. அப்போது மஞ்சரி பி.ஏ. படித்துக் கொண்டிருந்தாள். பிறகு மஞ்சரியின் தந்தை இறந்து போனார்... பிறகு மஞ்சரியே குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள நேர்ந்ததில் அவளுடைய கலியாணத்தைப் பற்றிய நினைவே இல்லாமல் போய் விட்டது.

ஆனால் மஞ்சரியும் அவந்தியின் பெண்தானே! அவளுக்கும் கலியாணம் செய்ய வேண்டியதுதானே...! சோர்ந்து போய் சோபாவின் மேல் சாய்ந்து கொண்டாள் அவந்தி.

நுரை மெத்தை வைத்துத் தோலுறை போட்டுத் தைத்த சோபா. உடம்புக்கு ரொம்ப இதமாக இருக்கும். மஞ்சரிதான் அம்மாவுக்காக வாங்கிக் கொடுத்திருந்தாள். அதில் சுகமாக உட்கார்ந்து கொண்டுதான் அவந்தி புத்தகம் படிப்பாள், ரவீந்திர சங்கீத் கேட்பாள்....



"அந்த ஆளு பெரிய புளுகன்னு எதை வைச்சு சொல்றே?"
"ரிசர்வ் பேங்க்'ல அக்கவுண்ட் இருக்கிறதா சொன்னாரே!"
— வீ. முத்தையா

அவந்தி தன் கைப்பையைத் திறந்து அதிலிருந்த வெற்றிலைச் செல்லத்தை எடுத்து வெற்றிலையை வாயில் போட்டுக் கொண்டாள். புகையிலை டப்பியிலிருந்து வாசனைப் புகையிலையையும் போட்டுக் கொண்டு பெண்ணிடம் சொன்னாள், "ஒக்காரு... பையன் யாரு?"

"என் ஆபீசிலேயே வேலை பார்க்கறவர். பர்ச்சேஸ் டிபார்ட்மெண்ட்லே. பேரு சுகத பட்டாசார்ஜி. விவாகரத்து பண்ணிக்கிட்டார்!" சற்றும் தயக்கமின்றிப் பதிலளித்தாள் மஞ்சரி.

"ஓ, ரெண்டாந்தாரமா? கொழந்தெ குட்டிகள் இருக்கா?"

"இல்லை."

"பையன் எப்படி?... ஏன் விவாகரத்து ஆச்சு?"

"ரெண்டுபேருக்கும் ஒத்துக்கல்லை, அவ்வளவுதான்!" சுருக்கமாகப் பதில் வந்தது மஞ்சரியிடமிருந்து.

கலியாண யோசனையை எதிர்க்க ஒரு சாக்கு கிடைத்துவிட்டது அவந்திக்கு... ஆனால் நாற்பது வயதுப் பெண் கலியாணம் செய்து கொள்ள முடிவு செய்து விட்டபின் எப்படி எதிர்ப்பது?

அவந்தி சொன்னாள், "சரி, அப்படீன்னா அதுக்கு ஏற்பாடெல்லாம் பண்ணணும்... கலியாணம்னு சொல்லிட்ட ஒடனே நடந்துடுமா?"

"என்ன ஏற்பாடு?" எரிச்சலோடு கேட்டாள் மஞ்சரி. "விவாகரத்து பண்ணிக்கிட்ட ஒருத்தரை ரெண்டாந்தாரமாக் கலியாணம் பண்ணிக்கப் போறேன். நான் யாரோட ஒதவியை எதிர் பார்க்கணும்? எனக்கு வேலை இருக்கு, பிராவிடெண்ட் ஃபண்டிலே கொஞ்சம் பணம் இருக்கு. இந்த வயசிலே எனக்கு பிரும்மசாரிப் பையன் கெடைப்பானா?"

"ஏன், முன்னாலேயே வரன் தேடறதுக்கென்ன?" என்று கேட்க நினைத்தாள் அவந்தி. ஆனால் மறுகணமே தன்னை சமாளித்துக் கொண்டு மௌனமானாள்.

"நீ ஒண்ணும் கவலைப்பட வேண்டாம்!" தொடர்ந்து பேசினாள் மஞ்சரி. "ஒன்னைக் கைவிடமாட்டேன். அவரோட இது பத்திப் பேசியாச்சு. ஒன் பிள்ளை எப்போ ஒன்னைக் கவனிச்சுக்கறதில்லையோ, ஒன்னைக் காப்பாத்தற பொறுப்பு எனக்கு உண்டு. குடும்பத்திலே மூத்த பெண் இல்லையா நான்? தவிர, இந்த வயசிலே நான் என்ன கொழந்தெகுட்டி பெத்துக்கிட்டுக் குடித்தனம் செய்யப் போறேனா? ஏதோ ஒரு துணை வேணும்னுதான் இந்தக் கலியாணம்..."

மகளைப் பற்றிய குத்தல் பேச்சை, பேசாமல் ஜீரணித்துக் கொண்டாள் அவந்தி. "அது சரிதான், கலியாணம்னா ஏதாவது நகை நட்டு பண்ண வேண்டாமா? எனக்கு ஆசை இருக்காதா?"

"அதுக்கு வேண்டிய பணம் தரேன். கவலைப்படாதே!"

வங்கியில் கொஞ்சம் பணம் இருந்தது. பிராவிடெண்ட் ஃபண்டிலிருந்தும் கடன் வாங்க வேண்டியதுதான். எப்படியும் பத்தா



அதிசய காலணி

விளையாட்டுக் காலணி நிறுவனமான "நைக்" தயாரித்துள்ள லேட்டஸ்ட் காலணி தான் இது. இதில் உள்ள திரை, நீங்கள் நடக்கவோ ஓடவோ செய்யும் போது எவ்வளவு தூரம், எந்த வேகத்தில் செல்கின்றீர்கள் என்பதைக் காட்டும். மேலும் குறிப்பிட்ட தூரம் வாக்கிங் செல்ல வேண்டுமெனில் அதை இதில் பதிவு செய்து விட்டால், அந்த தூரம், வந்ததும் மணி அடிக்கும் வசதியும் உண்டு! தட்ப-வெட்ப நிலை, கடிகாரம் என பலவும் உள்ளடக்கிய இந்த காலணியின் விலை மூவாயிரம் ரூபாய்!

— பாரீஸ். பார்த்தசாரதி

யிரம் ரூபாய் சேர்த்து அம்மாவிடம் கொடுத்து விடலாம்.

இப்போதெல்லாம் சம்பளத்திலிருந்து அதிகம் மிஞ்சுவதில்லை. வாழ்க்கை நிலை உயர்ந்ததால் செலவும் அதிகமாகிவிட்டது. ஆபீசர் என்ற முறையில் கௌரவத்தையும் பார்க்க வேண்டியிருக்கிறது...


பொழுது புலர்ந்து விட்டது. ரேடியோவில் பஜனைப் பாட்டு ஒலிக்கிறது. மஞ்சரி ஒரு கப்பையும் பிஸ்கட்டும் எடுத்துக் கொண்டு உட்கார்ந்தாள்...

இருபதாண்டுகால ஏமாற்றமும் எரிச்சலும் உள்ளத்தில் பொங்கியது.

வெளியே செங்கல் இறக்கி அடுக்கி வைக்கப்படும் ஒலி. இவ்வளவு செங்கல் எதற்கு?

அவந்தி செங்கல் லாரிக்காரனிடம் ஏதோ சொல்லி அவனை அனுப்பி விட்டு அறைக்குள் நுழைந்தாள். பிறகு செய்தித்தாளை எடுத்துப் படிக்கத் தொடங்கி விட்டாள் தீவிர அக்கறையோடு.

"என்னத்துக்கு இவ்வளவு



"அவர் எதற்காக அடிக்கடி தலையைக் கலைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கார்?"
"ரொம்பப் பேசினீங்கன்னா கூட்டணியைக் கலைச்சுடுவேன்'னு சிம்பாலிக்கா சொல்றார்!"
— பிரான்னிஸ்

செங்கல்?" மஞ்சரி கேட்டாள்.

"ஓ, ஒங்கிட்டே சொல்ல மறந்துட்டேன் போலேயிருக்கு. மொட்டை மாடியிலே ஒரு ரூம், ஒரு பாத்ரூம் கட்டலாம்னு செங்கலுக்கு ஆர்டர் கொடுத்தேன். நான் மேலே இருந்துக்கிட்டுக் கீழ் போர்ஷனை வாடகைக்கு விட்டா அந்தப் பணத்திலே என் காலத்தை ஓட்டிடுவேன்..."

"ஒன் எதிர்காலத்தைப் பத்தி ஒனக்கேன் கவலை? நான்தான் இருக்கேனே! கலியாணத்துக்கப்பறமும் ஒன்னைக் கவனிச்சுக்கறேன்னு தான் சொன்னேனே!... என்னை ஒரு வார்த்தை கூடக் கேக்காமே இப்படி... என்னடா, இவ்வளவு செங்கல் எதுக்குன்னு மண்டையைக் கொழப்பிக்கிட்டிருக்கேன். அதுசரி, இதுக்குப் பணம் எங்கே கெடச்சுது? ஒம் பிள்ளை கொடுத்தானா?"

"நீ பத்தாயிர ரூபா கொடுத்திருந்தியே, அதைத்தான்..."

பாதி கடித்திருந்த பிஸ்கட்டைக் கீழே வைத்தாள் மஞ்சரி. திகைத்துப் போய்க் கேட்டாள், "அந்தப் பணம் நகை பண்றதுக்குன்னா கொடுத்தேன்!... என் கலியாணத்துக்கு நான் தானே செலவு செய்யணும்!"

"ஆனா என் கதி என்ன ஆகும்? நீ கலியாணம் பண்ணிக்கிட்டுப் போயிடுவே, என்னை யாரு பார்த்துப்பாங்க?"

ஒரு செங்கல் தலையில் விழுந்தாற் போலாகிவிட்டது மஞ்சரிக்கு. இவளா அம்மா? சுயநலக்காரி, பேராசைக்காரி...!

நினைக்கவே கஷ்டமாயிருந்தது மஞ்சரிக்கு. அப்படியானால் இந்தக் குடும்பத்தில் மஞ்சரி யார்? குடும்பச் சக்கரத்தைச் சுற்றச் செய்யும் இயந்திரம் மட்டுமா? குடும்பத்திலிருந்து அவள் எதுவுமே எதிர்பார்க்கக் கூடாதா? ஒரு தாயின் அன்பு கூடவா அவளுக்குக் கிடைக்காது?

வேதனையும் அருவருப்பும் அவளது உள்ளத்தை நிறைத்தது.

அவள் டீ கோப்பையை அப்படியே வைத்துவிட்டு எழுந்தாள். ஊஹூம், இந்த வீட்டில் இனி இருக்கக் கூடாது. இங்கே அவளுக்கு உறவு யாருமில்லை. அம்மா கூடத்தான்!

பர்ச்சேஸ் டிபார்ட்மெண்ட் சுகத பட்டாசார்ஜி கைநிறைய சம்பாதிக்கிறார். அவரைக் கலியாணம் செய்து கொண்ட பிறகு மஞ்சரி வேலையை விட்டு விடலாம். அம்மாவைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பிலிருந்து விடுதலை கிடைத்து விட்டது. அம்மா தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்வாள்.

அம்மாவையே நம்ப முடியவில்லை. சுகத பட்டாசார்ஜியை மட்டும் முழுவதும் நம்பிவிட முடியுமா? சோதித்துப் பார்க்க வேண்டும்!

வெறி பிடித்த மனநிலையில் ஆபீசுக்குப் போனாள். சுகத பட்டாசார்ஜிக்கு போன் செய்தாள். "நகை பண்றதுக்குப் பத்தாயிரம் ரூபா கொடுத்திருந்தேன் ஒரு இடத்திலே. ஏமாத்திட்டாங்க. பணம் போச்சு. நாம ரெண்டு பேருமா சேர்ந்து ஃப்ளாட் வாங்கற திட்டத்தைக் கொஞ்ச காலத்துக்குத் தள்ளிப் போடணும் போலேயிருக்கு... நீங்க என்ன சொல்றீங்க?"

சற்றும் கவலையில்லாமல் பதில் வந்தது. "அப்படின்னா நம்ம கலியாணத்தை ரெண்டு வருஷம் தள்ளிப் போட்டுக்கலாம்... கலியாணம் பண்ணிக்கிட்டப்பறம் என்னோட சின்ன அறையிலே காலந்தள்ள முடியாது."

"அப்போ..."

"இவ்வளவு நாளா இருக்கல்லியா? அதே மாதிரி இன்னுங் கொஞ்ச காலம் இருந்துட்டுப் போறோம், அவ்வளவு தானே!"

"ஆனா வயசு ஏறிக்கிட்டே போகுதே?"

"வயசா? இப்போ மட்டும் நாம என்ன எள வட்டமா?" உணர்ச்சியற்ற குரலில் பேசினார் சுகத பட்டாச்சார்ஜி.

அப்படியானால் ஏதோ பணத் தேவைக்காகத்தான் கலியாணம் செய்து கொள்ள நினைக்கிறார் சுகத பட்டாசார்ஜி. அவருக்கு ஒரு ஃபிளாட் வாங்க வேண்டும். விவாகரத்து செய்த மனைவிக்கு மாதா மாதம் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டியிருப்பதால் அவருடைய சம்பளத்தில் ஃபிளாட் வாங்க முடியாது. அதற்கு மஞ்சரியின் சம்பளமும் தேவைப் படுகிறது.

மஞ்சரியின் கண்முன் எங்கும் இருள். அம்மா கெட்டிக்காரி, தன் கவலையைத் தீர்த்துக் கொண்டு விட்டாள். மஞ்சரியின் பணத்தில்!

பணியாள் டீ கொண்டு வந்து கொடுத்தான். மஞ்சரி அதை எடுத்துக் குடித்தாள். ருசிக்கவில்லை. கீழே வைத்து விட்டாள்.

வேலையை விட்டு விடலாமா? வேலையில்லா விட்டால் சாப்பாடு எப்படிக் கிடைக்கும்? வீட்டுக்குத் திரும்பப் பிடிக்கவில்லை. ஒரு லாரி செங்கல்லின் நினைவு அவளுடைய மண்டையைக் குடைந்தது... அவளுக்கு இரத்த அழுத்தம் ஏற்பட்டு விட்டதா? இருக்கலாம். எவ்வளவு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது அவளுக்கு!

மஞ்சரி விடுப்பு எடுத்துக் கொண்டு ஒரு நோக்கமுமின்றித் தெருவில் சுற்றியலைந்தாள். காலையில் குடித்த அரைக் கோப்பை டீக்குப் பிறகு வயிற்றில் எதுவும் விழவில்லை.

அவள் எல்லோரிடமும் தோற்றுப் போய் விட்டாள். அம்மா, தம்பி, தங்கை, ரசிகன் யாருமில்லை அவளுக்கு. எல்லாம் பொய்!

ஆனால் வேறு போக்கிடம் ஏது? வீட்டுக்குத் திரும்பினாள்.

மாலை வெயிலில் வீட்டு வாசலில் செங்கல் குவியல்.. அம்மா ஒரு மேஸ்திரியை வைத்துக் கொண்டு செங்கற்களை எண்ணிக் கொண்டிருந்தாள். தன் எதிர்காலப் பாதுகாப்புக்காக... ◎



சந்தோஷத்தில் புதுமுகங்கள்!

சாய்ராஜ் பகுதுலே, ரிஷிகேஷ் பணித்கர். இருவரும் இந்திய கிரிக்கெட் அணியில் இப்போது சேர்க்கப்பட்டுள்ளவர்கள். பகுதுலே மும்பைக்காரர். ரிஷிகேஷ் புனாக்காரர். இவருக்கு 23 வயது. முன்னவருக்கு 24. இருவருமே திலீப் வெங்சர்க்காரின் கோச்சிங் அகாடமி மூலம் கிரிக்கெட் உலகுக்கு அறிமுகமானவர்கள்.

சாய்ராஜ் மும்பை அணிக்கும் ரிஷிகேஷ் மகாராஷ்டிர அணிக்கும் ஆடியவர்கள். திலீப் கோப்பையின் இறுதி ஆட்டத்திற்காக சாய்ராஜ் வடக்கு மண்டல அணிக்காரராகவும் ரிஷிகேஷ் மேற்கு மண்டல அணிக்காவும் ஆடச் சென்னை வந்திருந்தபோது தான் இலங்கை அணிக்கு எதிராக ஒரு நாள் போட்டிகளில் விளையாட இந்திய அணிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள செய்தி வந்தது.

''ஹோட்டலில் இருந்த எனக்கு தமிழக கிரிக்கெட் சங்கச் செயலாளர் அசோக் கும்பத் அவர்கள்தான் போன் மூலம் விஷயத்தைச் சொன்னார். ரொம்பவும் சந்தோஷமாக இருந்தது. கடந்த ஆண்டு நாம் சந்தித்துக் கொண்டபோது, நிச்சயம் இந்திய அணியில் நான் விளையாடுவேன் என்று முதல் முதலாகச் சொன்னவரே நீங்கள்தான். இப்போது அது உண்மையானதில் மிகவும் சந்தோஷமாக இருக்கிறது!'' என்றார் சாய்ராஜ் பகுதுலே.

''நான் இந்திய அணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விஷயத்தை என்னிடம் சொன்னவர் பகுதுலேதான். உடனே இந்த சந்தோஷமான செய்தியை என் தந்தைக்கு போன் மூலம் கூறி வாழ்த்துப் பெற்றேன்!'' என்று நம்மிடம் உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னார் ரிஷிகேஷ்.

படம், சந்திப்பு: **நந்தினி**

சர்க்கரை வியாதி

சர்க்கரை வியாதி பற்றி விளக்குகிறார்
எம்.வி. டயாபடீஸ் ஸ்பெஷாலிடீஸ் சென்டர் பிரைவேட் லிமிடெட் நிர்வாக இயக்குனர், டாக்டர் வி. மோகன்.

● ***சர்க்கரை வியாதி என்றால் என்ன, டாக்டர்?***

இரத்தத்தில் இனிப்புச் சத்து அதிகமாக இருப்பதுதான் சர்க்கரை வியாதி. உணவு ஏதும் சாப்பிடுவதற்கு முன்பு இரத்தத்தில் இருக்க வேண்டிய சாதாரண சர்க்கரை அளவு 80 முதல் 120 மி.கி. பர்செண்ட் வரை. சாப்பிட்ட பிறகு 120 முதல் 160 மி.கி. பர்செண்ட் வரை. இதற்கு மேல் இருந்தால், ஒருவருக்குச் சர்க்கரை நோய் இருக்கிறது என்று உறுதி செய்து கொள்ளலாம்.

● ***இந்த நோய்க்கு ஏதாவது அறிகுறிகள் உண்டா?***

அதிகமான தாகம்; அதிகப் பசி. சிறுநீர் அடிக்கடி போவது. எடை குறைவது. காலில் ஊசி குத்துவது மாதிரி மதமதப்பாக உணர்வது. காலில் உணர்ச்சி இல்லாமல் (பஞ்சு மெத்தையில் நடப்பது மாதிரி) இருப்பது.

● ***இந்த நோய் வந்து அவதிப்படுகிறவர்கள் நிறைய பேர் இருக்கிறார்களா?***

இந்தியா, ஜனத்தொகையில் இரண்டாவது இடத்தில் இருந்தாலும், டயாபடீஸ் நோயில் முதலிடம் வகிக்கிறது. சுமார் 4 கோடி மக்கள் சர்க்கரை வியாதியால் அவதிப்படுகிறார்கள்.

● ***இந்த நோயில் எத்தனை வகை உண்டு?***

இரண்டு வகை. ஒன்று, இன்சுலின் ஊசி போட்டுக் கொள்ள வேண்டிய தேவை இல்லாதது. மருந்து மாத்திரைகள் மட்டுமே போதும். இது கிட்டத்தட்ட 90-95 சதவிகிதம். இரண்டு, இன்சுலின் ஊசி போட்டுக் கொண்டே ஆக வேண்டிய வகை. இது சின்னக் குழந்தைகளுக்கும் கூட வரும். ஆயுள் முழுக்க இன்சுலின் ஊசி போட்டுக் கொண்டே ஆக வேண்டியிருக்கும். போடவில்லை என்றால் உயிருக்கே ஆபத்து!

● ***இந்த நோயை அலட்சியம் பண்ணி விட்டால் என்ன ஆகும்?***

பத்துப் பதினைந்து வருடங்களுக்குப் பிறகு இதன் பாதிப்பு தெரியும். கண் பார்வை இழப்பு - டயாபடிக் ரெடினோபதி வரும். சிறுநீரகம் பழுதடைந்து, டயாலிஸிஸ், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை வரை போகும். இதயம் பலவீனமாகி, மாரடைப்பு வரும். கால் உணர்ச்சி குறைந்து, இரத்த ஓட்டம் குறைந்து, தடைப்படும். காங்க்ரீன் (கட்டி) வந்து, காலையே வெட்டி எடுக்க வேண்டிய நிலைமைகூட உருவாகும்!

● ***டயபடீஸ் இருக்கிறதா இல்லையா என்று கண்டுபிடிக்கப் பரிசோதனைகள் இருக்கின்றனவா?***

ஆரம்ப கட்டத்திலேயே கண்டுபிடித்து விட்டால் நல்லது. அறிகுறிகள் சொன்னேன் இல்லையா? ஆண்டுக்கு ஒருமுறை முழுதாக செக்-அப் செய்து கொள்வது அவசியம். 20-25 வயது ஆனவுடனேயே இதை ஆரம்பித்து விடலாம். குடும்பத்தில் பரம்பரையாக இருந்தால் பாதிப்பு நிச்சயம் இருக்கும் என்று சொல்லி விடலாம். அப்பாவுக்கும் - அம்மாவுக்கும் இருந்தால் நூறு சதவிகிதம் உறுதி. இருவரில் யாராவது ஒருவருக்கு மட்டுமே இருந்தால் 50 சதவிகித வாய்ப்பு நிச்சயம். எனவே பரிசோதனை செய்து கொண்டு விடுவது நல்லது. உடல் பருமன் இருந்தால், அல்லது அறிகுறிகள் எதுவும் இல்லாதபட்சத்தில் க்ளுகோஸ் டாலரன்ஸ் டெஸ்ட் (GTT) செய்து கொண்டால், முடிவு தெரிந்து விடும்.

● ***இந்தக் கண், சிறுநீரகம், இதயம், கால் பாதிப்புகள் இருந்தால் எப்படிக் கண்டு பிடிப்பீர்கள்?***

கண்ணுக்கு லேசர் ஃபோட்டோ கோயாகுலேஷன் என்ற நவீன லேசர் முறையில் கண்டுபிடித்துக் கட்டுப்படுத்தி விடலாம். உப்புச்சத்து (அல்புமின்) போக ஆரம்பிக்கும் நிலையில், மைக்ரோ அல்புமினூரியா டெஸ்ட் மூலம் சிறுநீரகப் பாதிப்பைக் கண்டுபிடித்து விடலாம். இதயத்தைப் பொறுத்தவரை, அட்டாக் வந்தால் கூட, தெரியாமல் இருக்கும். இதயத்தில்

உணர்வு குறைவாக இருப்பதுதான் காரணம். எனவே வலி அதிகமாகத் தெரியாது. இதற்கு எக்கோ, இஸிஜி, ட்ரெட்மில் டெஸ்ட்டுகள் மூலம் கண்டுபிடிக்கலாம். காலில் வரும் பாதிப்பை டாப்ளர் டெஸ்ட் வழியாகத் தெரிந்து கொள்ளலாம்.

● சரி, சர்க்கரை நோய் இருக்கிறது என்று தெரிந்து விட்டால் என்னென்ன செய்ய வேண்டும் டாக்டர்?

முதலாவது, இனிப்புப் பண்டங்களை அறவே தவிர்க்க வேண்டும். சாப்பாடு அளவைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அரிசியைக் குறைத்துக் கொண்டு, நிறையக் காய்கறிகள் சேர்த்துக் கொள்ள வேண்டும். புரதச் சத்து (ப்ரோட்டீன்) அதிகம் உட்கொள்ள வேண்டும். நார்ச்சத்து உள்ள பயறு, கடலை வகைகளைச் சாப்பிடலாம். குறிப்பிட்ட நேரத்தில் சாப்பிடுவது முக்கியம்.

சர்க்கரை நோய் உள்ளவர்கள் தினசரி அரைமணி, ஒருமணி நேரம் நடக்க வேண்டும். ஜாகிங், நீச்சல் எல்லாம் அவசியம். வருடாந்தர செக்கப் அவசியம்.



சமாளிப்பது எப்படி?

தினசரி அரைமணி, ஒருமணி நேரம் நடக்க வேண்டும். ஜாகிங், நீச்சல் எல்லாம் அவசியம். வருடாந்தர செக்கப் அவசியம்.

நீரிழிவு எந்த வகையைச் சேர்ந்தது என்று தெரிந்திருந்தால், இன்சுலின் போட வேண்டிய வகை என்றால், தட்டாமல் தயங்காமல், கட்டாயம் இன்சுலின் போட்டுக் கொண்டே ஆக வேண்டும். இன்சுலின் வகையைச் சேர்ந்தது அல்ல என்றால், டாக்டர் யோசனைப்படி தரப்படும் மருந்துகளை உட்கொள்ள வேண்டும்.

● நோயாளியே இரத்தம், சிறுநீர் பரிசோதனை செய்து கொள்ள முடியுமா?

முடியும். அதற்கான உபகரணங்கள் இப்போது கிடைக்க ஆரம்பித்திருக்கின்றன. வீட்டில் இருந்து கொண்டே செய்து கொள்ளக்கூடிய சின்ன இயந்திரங்கள் - கருவிகள் இருக்கின்றன.

சந்திப்பு :

சாருகேசி

நிலா வேட்டை

என் விழிகளுக்கு மேலே யார் பசை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்? என் பாதங்களை யார் திருடிப் போனார்கள்? என் கரங்கள் எப்படிச் சிறகாக மாறின? வாயில் ஏன் எச்சில் சுரப்பது நின்று போனது? யாராவது என் இமைகளைப் பிய்த்துக் கண்ணைத் திறவுங்களேன்? நான் பேசுவது உங்களுக்குக் கேட்கவில்லையா? எனில், என் குரலுக்கு யார் பூட்டுப் போட்டது?

அவன், இமைகளுக்குப் பின்னால் இருட்டில் விரிந்து கிடக்கிற சினப் பெருஞ்சுவரில் முட்டி மோதிக் கொண்டிருந்தான்.

எகிறிச் சீறும் எண்ணங்களின் பேரிரைச்சல். கட்டுப்படுத்த முடியாமல் திணறிக் கொண்டு இருந்தான். லேசாகத் திரும்பவோ, விரலசைக்கவோ கூட முடியாதபடி உடல் எதனோடோ இறுக்கமாகப் பிணைக்கப் பட்டிருப்பது போல் இருந்தது.

யாரோ வருகிறார்கள். அருகில், மிக அருகில். ஷூக்களின் நெருக்கமான, அதிர்வற்ற ஓசை. எதையோ எடுக்கிற அல்லது வைக்கிற ஒலி. தாள்கள் புரட்டப்படும் சப்தம். பின்னும் சில அசைவுகளின் ஒலித் துகள்கள். சரேலென்று கதவு பிளந்து, நீர் பாயும் ஓசை. ஃப்ளஷ் அவுட்? யார் வந்திருப்பது? கண்ணைத் திறக்கவோ, யார் என்று குரல் கொடுக்கவோ வக்கற்ற பிரேதத்தனம்.

சட்டென்று தன் தலையை யாரோ வருடுவது போல் உணர்ந்தான் ஹரி. காட், ரஞ்சனி? இத்தனை வாத்ஸல்ய



11

பா. ராகவன்



மும் கொப்பளிக்கும் கருணையும் வேறு யார் கரங்களில் இறங்கி, வருடலாகப் பொழியப் போகிறது? நர்ஸ்கள் தலை வருடுவார்களா? அன்பு செலுத்துவதற்கும் வெறும் மனிதாபிமானத்துக்கும் மயிரிழை வித்தியாசம் நிச்சயம் இருக்கும். அன்பு, மூளையின் கட்டளை இன்றி, மனத்தால் தெளிக்கப்படுவது.

ஒருவேளை வந்திருப்பது ரங்காவாக இருக்குமா? நட்பின் எல்லைகளைக் கடந்து ஆன்மாவுடன் ஐக்கியமாகி விட்ட ராதேயன். சே, எத்தனை மடையன் நான்? பத்து வருடங்களாகக் கற்ற வித்தையை அரங்கேற்ற அவனுக்கொரு மேடை கிடைத்து இருக்கிறது. மகிழ்ந்து, வாழ்த்தத் தோன்றாமல் எத்தனை இறுகின மண் கட்டியாக இருந்து விட்டேன்? என் சிக்கல்கள், என் பிரச்னைகள், என் கஷ்டம், என் சோகம், என் சுகம். சேற்றுப் பன்றி போல் எத்தனை ஈனமாக உழன்று இருக்கிறேன்? சீடனாகவும் தோழனாகவும் வாய்த்த வாழ்க்கை தந்த நிறைவில் எதையுமே அவன் பொருட்படுத்தவில்லை.

எ நைஸ், க்ரேட் ஜென்டில்மேன் என்று நினைத்துக் கொண்டான். இனி ரங்காவின் அண்மை இல்லை என்று நினைக்கும்போதே மனம் கனத்து, அடி வயிற்றிலிருந்து பீறிட்ட நீரூற்று விழியோரம் வரை ஈரப் பந்தலிட்டது.

ஒரு கரம் துடைக்கிறது. யார்? சற்றே நாசிப் பக்கம் வந்தால் போதும். வாசனையைப் பார்த்துக் கண்டுபிடித்து விடலாம். ஒரு விநாடி போதும். ஆனால் துடைத்த வேகத்தில் விலகி விட்டது கஷ்டமாகப் போய்விட்டது. இன்னும் கொஞ்சம் அழலாம். இறுக்கங்கள் கரைந்து உருகிப் போகும் வரை அழவேணும் போல் இருந்தது. 'அடிப்படையில் நான் மிகவும் யோக்கியமானவன்தானே?' என்று அவன் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். யார் யோக்கியமில்லை? அயோக்கியன் என்பதே அடுத்தவர் மதிப்பீடு. மனதில் கொஞ்சம் சந்தோஷம். தொழிலில் கொஞ்சம் முன்னேற்றம். உள்ளும் புறமும் நினைத்து உவக்கக் கொஞ்சம் நிம்மதி. இதுதானே என் தேவையும் ஆசையும்? இதைத் தருவதில் இறைவனுக்கு அப்படி என்ன முட்டுக் கட்டை?

ரஞ்சனி. அவளை நினைத்தாலே, தென்றல் தீண்டினாற்போல உடலெங்கும் ஒரு வருடல் சுகம் விரவிப் பாய்கிறது. இத்தனை ஆன பிறகும் அதில் மாறுதல் இல்லை. துலக்கி வைத்த பித்தளைப் பாத்திரம் போல் குளிர் ஞாபகங்கள் பளீரென்று பரவித் திக்குமுக்காடச் செய்யத்தான் செய்கின்றன.

சுகமான படகுப் பயணம் போல் தவழ்ந்தோடிக் கொண்டிருந்த வாழ்க்கை. எந்தக் கணத்தில் கவிழ்ந்து, மூழ்கியது? டாக்டர் மகாதேவன். அவரைப் பார்த்து வந்த பிறகு. ஒரு குழந்தையைப் பிறப்பிக்கவல்ல வல்லமை எனக்கு இல்லை என்பது பகிரங்கமான பிறகு.

இல்லை. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று உடனடியாகத் தன்னைச் சமாதானப்படுத்தப் பார்த்து, படுதோல்வி கண்டான்.

ரங்கா சொன்னதுதான் நிஜமோ? என் தாழ்வு மனப்பான்மைதான் பிரச்னையை மாற்றுப் பாதைக்கு திசை திருப்பி விட்டதா? எல்லாமே யூகம். எல்லாமே பிரமை, கற்பனை தானா? எனில், ஸ்டீபன் வீட்டில் பார்த்த

போட்டோ? பெங்களூருக்கும் நாகர் கோவிலுக்கும் ரஞ்சனியின் வாலாக ஸ்டீபன் போனது? சிகரமாக, பெட்டியுடன் அவள் ஸ்டேஷனுக்குப் போனது? தீராத குழப்பப் பிரளயம். சிந்தனையைப் பற்றிக் கொண்டு பேயாட்டம் ஆடும் தருணங்களின் ஊழித் தாண்டவம்.

அவனது தவிப்புகள் தாற்காலிகமாக அடங்கும் விதமாக முதல் முதலாக ஒரு குரல் காதில் இறங்கி, மனசை வருடியது.


"இது கடவுள் அருள். பிழைத்தது பேராச் சர்யம். எழுந்து நடமாடச் சில மாதங்கள் ஆகலாம். கண் விழிப்பது எப்போதும் நடக்கலாம்! ஒரு வாரத்தில் தையல்கள் பிரித்து விடலாம். அதிர்ஷ்டவசமாகத் தலை சேதப்படாமல் தப்பித்து விட்டது. இடுப்பும் கால்களும் தான்... எனி ஹவ், என் முழு முயற்சியை நான் இவருக்குத் தந்திருக்கிறேன். பேஷண்ட் என்பதால் மட்டும் அல்ல.... நான் ஹரியின் ரசிகன்."

''கட்சிப் பணத்தை நீங்க உங்க சொந்தப் பேர்ல போட்டுக் கிட்டீங்களாமே?''

''கட்சி வேறு நான் வேறுன்னு ஏன் பிரிச்சுப் பேசறீங்க?''

– சீர்காழி

வி. ரேவதி



டாக்டர் யாரென்று தெரியவில்லை. ஆனால் பேசிக் கொண்டிருப்பது ரங்காவுடன் என்பது புரிந்து விட்டது. ''தேங்க் யூ டாக்டர்...'' அடிக்குரலில் மிகச் சன்னமாக வெளிப்பட்டாலும் கண்டுபிடிக்க முடிந்து விட்டது.

யோசிக்க முடிந்தாலும் கண் திறக்க முடியாமல் இருந்த நிலை, நாலாவது நாள் மாறியது. பூட்டிய கோட்டைக் கதவுகளை யானைகள் சேர்ந்து பிளப்பது போல், மாபெரும் பிரயத்தனத்தின் முடிவில் கொஞ்சம் கண் திறந்தான்.

வெளேரென்று பால் கொட்டினாற் போன்ற அறை. எதிரே சுவரில் சின்ன மாடத்தில், கண்ணாடிக்குப் பின்னால் எம்பெருமான் ஏகநாதர். ஒரு பார்வைச் சுழட்டலில் பட்டுத் தெரிந்த காலெண்டரில், கிழமை வியாழன். தேதி இருபத்தைந்து. கடவுளே, பத்து நாட்களாகக் கிடக்கிறேன்! சென்ற வெள்ளி அன்று படம் ரிலீஸ் ஆகி இருக்கும்!

சட்டென்று உள்ளே நுழைந்த ரங்காவின் கையில் என்னமோ இஞ்செக்ஷன் மருந்துகள்.

"ஹரி!"

குரலில் ராட்சஸ வியப்பும் உற்சாகமும் துள்ளித் தெரிக்க, பாய்ந்து வந்து கரங்களைப் பற்றிக்கொண்டான்.

"காட், நீ பிழைச்சுட்டே!"

புன்னகையை மீறி வழிந்த கண்ணீர். எதற் காகப் பிழைத்தேன்? அப்படியே போயிருக்க லாம். இருந்து சாதிக்கப் போவதுதான் என்ன? ரஞ்சனி. ஒரு உலராத பனிப் போர்வை போல் வாழ்வில் படர்ந்து குளுமை தந்தவள். அவளே போனபின் வாழ்வதற்கு ஏதும் அர்த்தம் இருக்கிறதா என்ன? என் சந்தேகம், அர்த்தமற்றதாக இருக்க வேண்டும். அதன் தகிப்புத் தாங்காமல்தான் விலகிப் போய்விட்டாள். கவரிமான் என்று என்னென் னவோ தோன்றியது. வெறும் சொற்கள்! எத்தனை ஆழமாக அவளது மயிலிறகு உணர்வு களைக் கீறிப் பிளந்திருந்தால் அப்படி வெறுத்து விலகி இருப் பாள்! வாழ்வின் சில மோசமான கணங்கள்ளத் தவிர்க்க முடிவதே இல்லை. அந்தக் கணங்களில் நிகழ்ந்து விடுகிற யுகப் பிரளயம். போகட்டும். படம் என்ன ஆயிற்று? மிகவும் சிரமப்பட்டு ரங்காவிடம் சைகை மூலம் கேட்டான்.

அவன் பதில் சொல்லவில்லை. வருத்த முடன் தலைகுனிந்த சோகத்தில் புரிந்து விட்டது. துக்கம் நெஞ்சை அடைக்க, அவன் கண்களை மூடிக் கொண்டான்.

"சிட்டி ஸைடில் சுமாரா போறது ஹரி. மொஃபஸல் மக்களுக்குப் புரியலை. மதுரை, திருநெல்வேலியில் ரொம்ப மோசம். கோயமுத்தூர் பரவாயில்லை. கேரளாவில் ரிலீஸை நிறுத்தி வெச்சுட்டாங்க. ப்ரொட் யூசர், சபரி மலைக்குப் போயிட்டார். இன் னும் பப்ளிசிட்டி பண்ண அவருக்கு விருப்ப மில்லை. சில டிஸ்ட்ரிப்யூட்டர்கள் மட்டும்

சொந்தச் செலவில் தினத்தந்தியில் விளம்பரம் தராங்க.''

தகர்ந்துவிட்ட கடைசி நம்பிக்கை. இனி வாழ்வதில் அர்த்தமே இல்லை என்று தோன்றிவிட்டது. அவன் கண்கள் பொழிவதைக் கண்டு, ரங்கா மேலும் அருகே வந்து குனிந்தான். கன்னங்களைத் துடைத்து, ''நம்பிக்கை இழக்காதே ஹரி. இதுவே முடிவு இல்லை'' என்றான்.

இதற்கு மேலும் முடிவு என்று ஒன்று இருக்க முடியும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. எத்தனை முயற்சிகள்! எத்தனை உழைப்பு! எத்தனை முனைப்பு! உணவையும் தூக்கத்தையும் பொருட்படுத்தாத அசுர உழைப்பு. இடையே மலைபோல் வந்த பிரச்னைகள். ஸ்டிரைக், அகிலாவின் திருமணம். மாற்றப்பட்ட கிளைமாக்ஸ். டிஸ்ட்ரிப்யூட்டர்கள் காட்சியில் பட்ட அவமானம். பத்திரிகை விமர்சனங்களாவது ஒழுங்காக வந்திருக்கிறதா?

அருகிலிருந்த ஹிந்துவைக் கண்காட்டி மிகப் பிரயத்தனப்பட்டுப் புரிய வைத்த போது, ''டெய்லீஸில் வழக்கம்போல் நல்லா எழுதி இருக்காங்க. குமுதம், பரவாயில்லாம பண்ணி இருக்கு. விகடனில் இன்னும் வரலை. கல்கியில் அந்த ஆர்.பி.ஆர்., பிடிச்சுக் கிழிச்சுட்டான். சாவியிலே பாராட்டி இருக்காங்க'' என்றான்.

அவன், ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

''ஸாரி ஹரி. எல்லாம் என்னால்தான். நான் தானே உன்னை சென்ட்ரல் வரச் சொன்னேன்? சே, எத்தனை மடையனாட்டம் நடந்துட்டேன்? ஒரு நிமிஷம் மூளை பிசகிப் போச்சு! எ கிரேட் பிளண்டர்! விஷயம் என்'னன்னு தெரிஞ்சுக்காமல் எத்தனை அவசரப்பட்டுட்டேன்? உண்மை தெரிஞ்சு, பதினஞ்சு நிமிஷத்தில் மறுபடி உன்னை காண்டாக்ட் பண்ணினால், எவனோ ட்ராஃபிக் போலீஸ், செல்லை எடுத்து, இந்த மாதிரி, ஆக்ஸிடெண்ட், நீங்க யாரா இருந்தாலும் உடனே வாங்கன்றான். துடிச்சுப் போனேன் தெரியுமா?''

உண்மை தெரிந்து! என்ன உண்மை? ரங்கா, நீ என்ன சொல்ல வருகிறாய்?

மேற்கொண்டு பேசுவதற்குள் டாக்டர் வந்தார். உடன் இரண்டு நர்ஸ்கள்.

அட, கண் திறந்து விட்டாரா? குட்! வில்பவர் சற்று அதிகம் தான். ஆனால் மிஸ்டர் ரங்கராஜன், அதிகம் பேசி சிரமப்படுத்த வேண்டாம். உள்ளே வலி இருக்கும். பேசுகிறாரா? இல்லை அல்லவா? நல்லது. இன்னும் தாண்ட சில கண்டங்கள் உண்டு. நாளை அல்லது நாளை மறுநாள் இடுப்பில் ஒரு சின்ன சர்ஜரி செய்ய வேண்டி இருக்கும். உறக்கமும் ஓய்வும் மிக அவசியம். நீங்கள் சற்று வெளியே போகிறீர்களா?

ரங்கா, போகாதே! தயவு செய்து சொல்லி விட்டுப்போ! ரஞ்சனி என்ன ஆனாள் என்று சொல்!

கத்திக் கதற வேண்டும் போல் இருந்தது அவனுக்கு. குரல் வரவில்லை. தொண்டையில் போல்ட் வைத்து முடுக்கினாற்போல் அப்படியொரு இறுக்கம்.

கண்ணீர் விட்டு வளர்த்தோம்!

சுதந்தரத்துக்குப் பிறகு இந்த ஐம்பது ஆண்டுகளில் நிகழ்ந்த பல்வேறு ராணுவ நடவடிக்கைகளிலும் மொத்தம் 18,326 இந்திய வீரர்கள் வீரமரணம் அடைந்திருக்கிறார்கள்! இரண்டு உலகப் போர்களிலும் இந்திய ராணுவத்திற்கு நேர்ந்த உயிரிழப்புக்குச் சமமானது இது.



இலங்கைக்குச் சென்ற அமைதிப்படை தனது வீரர்களில் 1200 பேரை இழந்து விட்டு வந்தது.

1947-48ல் ஸ்ரீ நகருக்காக பாகிஸ்தான் ராணுவத்துடன் நடந்த போரில் 1910 வீரர்கள் இறந்தனர்.

1962ல் சீனாவுடன் நடந்த 32 நாள் போரில் 3180 வீரர்கள் வீரமரணமடைந்தனர்.

1971ல் 'பங்களாதேஷ்' விவகாரமாக நடந்த போரில் 3954 வீரர்களைப் பலி கொடுக்க வேண்டியதாயிற்று.

(ஆதாரம்: அமரர்களான வீரர்கள்: ஒரு நினைவு நூல். இதில் விடுதலைக்குப் பின் நிகழ்ந்த பல போர்களின் அடிப்படை காரணங்கள், இதரபல தகவல்கள் வரைபடங்களுடன் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்: வைஸ் அட்மிரல் வி.கே. நாயர்.)


தகவல்: மாடன்

தவித்துத் தவித்துத் தணிகிற வேளையில் கண்கள் கவிந்து, உடல் ஓய்ந்து போய் ஒடுங்கத் தொடங்கியது. இருள். வரிசை பிசகி விரையும் ஞாபக அலைகள். ரஞ்சனி. டாக்டர் மகாதேவன். ரங்கா. அகிலா. வெளியான படம். போனில் பேசிய புதிய ப்ரொட்யூசர். மருத்துவமனை. இங்கே பார்த்த டாக்டர். ரயில். கார். விபத்து. மவுண்ட் ரோடு. ஸ்ரீரங்கம். அம்மா. கோவில். பாஸ்கர். ஸ்டீபன். ஸ்டீபன். ரஞ்சனி. ஸ்டீபன்...

''என்ன தலைவரே! நேற்றைய பொதுக் கூட்டத்தில் 'தாங்கள் ஆட்சிக்கு வந்தால் கம்ப்யூட்டரை கிலோ நூறு ரூபாய்க்குக் கொண்டு வருவோம்'னு பேசிட்டிங்க?''

''பின்ன என்னய்யா. எத்தனை நாளைக்குதான் 'அரிசி விலையைக் குறைப்போம்'னு பேசறது?''

— க. சரவணக்குமார்



சில யுகங்களுக்குப் பிறகு அவன் மறுபடி கண் விழித்தான். டாக்டர் இருந்தார். ரங்கா இருந்தான். சபரிமலை பிரசாதத்துடன் ப்ரொட்யூசர் இருந்தார். வேறுசில தலைகளின் நடுவே அவன் ரஞ்சனியைத் தேடினான். ரங்கா முன்னால் வந்து அவன் தோளைப் பற்றி ஆசுவாசப்படுத்தி, ''இனிமேல் ஒண்ணுமில்லை ஹரி. யூ ஆர் ஆல் ரைட்!'' என்றான்.

''படம் போயிருச்சேன்னு வருத்தப்படாதீங்க டைரக்டரே! சில ஏரியாவுங்கள்லே லேட் பிக் அப் ஆவுறதா நியூஸ் வந்திருக்கு'' என்றார் ப்ரொட்யூசர்.

உலகம் அன்பு மயமானது. உறவுகள், அன்பினால் பிணைக்கப்பட்டவை. கருணையும் மனித நேயமுமே கடைசி வரை இனிமை தருபவை. நான் என்ன செய்தேன் என்று இத்தனை அன்பும் அக்கறையும் ஆறுதலுமாகப் பொழிகிறார்கள்? ஆனால், என் மனைவிக்கு நான் எதைத் தந்தேன்? வெறும் பழியையும் மனப் பிரளயத்தையும் கசப்பையும் தவிர? இப்போது எதை எதிர்பார்த்து இப்படிப் பரிதவிக்கிறேன்? மறுபடியும் ரஞ்சனி? மறுபடி ஒரு வாழ்க்கை? மறுபடியும் தென்றல்? மறுபடியும் நிம்மதி? நிலவைப் போல் எங்கோ தூரத்தில் ஒளிர்ந்து நின்று ஆட்டம் காட்டும் நிம்மதி... கிடைக்குமா மறுபடி?

சாத்தியமில்லை என்று தோன்றியது. வேண்டாம். இனி சினிமா வேண்டாம். ஓயாத யுத்தங்கள் வேண்டாம். குடும்பம், நட்பு, வேண்டியவர், வேண்டாதார் எதுவும், யாருமே வேண்டாம். உயரங்களை நோக்கிய பயணத்தில் சரிவுகள் பற்றிய பயம் தவிர்க்க முடியாததாக இருக்கிறது. எனக்கு வேண்டியது ஒரு சமநிலை... அதிர்வுகள் அற்ற சமநிலைப் பயணம். நதியில் மிதந்து போகும் தெப்பம் போல. காற்றில் மிதந்து வரும் சிறகிழை போல. தளர்நடையில் கரம் ஏந்தி வரும் கவலைகளற்ற குழந்தை போல. குழந்தை போல... குழந்தை போல...

அவன் தன்னை அறியாமல் அழ ஆரம்பித்தான். கட்டுப்படுத்த முடியாத, பொங்கி வெடிக்கும் அழுகை. மடை திறந்தாற் போலக் குரல் கிளம்பிக் கிழிக்க, அதிர்வில், உடலோடு பிணைக்கப்பட்டிருந்த குழாய்கள் பிடுங்கிக் கொண்டன.

பெருங்குரலில் அவன் கதறத் தொடங்கிய போது, சுதாரித்து, டாக்டர் ஓடிவர, ரங்கா மிரண்டு நிற்க, ப்ரொட்யூசர் கண்மூடிப் பிரார்த்தனை செய்ய, தன் நிலை இழந்து, உணர்வு இழந்து, எங்கோ ஆழத்துக்குத் தன்னைத் தானே தள்ளி விட்டுக் கொண்டு மிதக்க ஆரம்பித்தான்.

டாக்டர். ரங்கா. சுவர். ஏசுநாதர். காலெண்டர். ப்ரொட்யூசர். அவன் விழிகள் மூடிக் கொள்கிற விநாடியின் இறுதியில், பார்வை வாசலில் உரச, கதவோரம் படர்ந்த புடைவையை மட்டும் அவனால் இனம் காண முடிந்தது.

ஒரு பிறந்த நாளுக்கு அவன் வாங்கித் தந்தது. ஸ்டீபனின் வீட்டில் அவனைத் திகைக்கச் செய்த போட்டோவில் படர்ந்திருந்தது. ரஞ்சனியுடையது.

(ஏழு நாட்களில் முற்றும்)

✉ எங்க வீட்லே அடிக்கடி 'தமிழ் பூஸ்ட்' போட ஏற்பாடு ஆயிடுச்சங்க. தேங்க்ஸ் கமி!

கோவை,
ஏ. எஸ். இராமசாமி.

✉ பட்டிமன்றக் கதாநாயகன் திண்டுக்கல் லியோனியின் பேட்டி மூலம் அவரைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. சாலமன் பாப்பையாவை தமது குரு எனக் கூறியிருப்பது அவரது தன்னடக்கத்தைக் காட்டுகிறது.

செந்தாரப்பட்டி,
'செந்தாழை' நாதன்.

✉ கமல், கோவிந்தா, சுந்தர் ஆகியவர்களின் உல்ட்டா பற்றிய உண்மை சுவையாக இருந்தது. இறுதியில் கொடுத்திருந்த பின்குறிப்பு உங்கள் குறும்புத்தனத்தைக் காட்டியது.

தூத்துக்குடி – 2, கே. சுதர்ஷன்.

✉ நேற்று பந்தாவாகக் கருதப் பட்டவை இன்று அத்தியாவசியமாகி விட்ட நிலையில் இன்றைய செல்லுலாரும் நாளை அவசியமாகிவிடும்.

மயிலாடுதுறை,
ஜெ. ரஜினி ராம்கி.

✉ 'செல்போன்' பற்றிய அலசல், செல்போனின் அவசியத்தை அறியச் செய்தாலும், பெருமளவில் முதலீடு செய்து பணம் 'சம்பாதிப்பவர்களுக்குத்தான் 'பயன்'. மற்றவர்களுக்குப் பணத்தை விரயமாக்கும் 'பந்தா'வாகத்தான் விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதும் உண்மை.

சென்னை – 78,
சி. பூங்கோதை.

✉ 'பெண்ணே! அண்ணே! கண்ணே!' என்று விளித்த பத்மா ரவிசங்கரின் மூன்று முத்தான சிறுகதைகளும் சித்தத்தில் கொத்தாக ஒட்டிக் கொண்டன. படித்து ரசித்தேன். பாராட்டுக்கள்.

திருச்சி – 17,
உஷா முத்துராமன்.

✉ 'கலாமுக்கு செய்வோம் சலாம்' கட்டுரையில் அவரைப் பற்றி மேலும் பல விஷயங்களை அறிந்து கொள்ள முடிந்தது. முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை என்பதைச் சாதாரண குடும்பத்தில் பிறந்த அப்துல் கலாம் சாதித்துள்ளார். இன்றைய இளைஞர்களுக்கு அவர் ஒரு முன்னோடி என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

கோவை,
கே. ஆர். வேலுச்சாமி.

பாட வைத்த கார்ட்டூன்!

✉ 'அதாண்டா இதாண்டா ஜெயலலிதா நான்தாண்டா' என்று பாடி ஆடிடும் கார்ட்டூன், வச்ச கண் வாங்க முடியாத நல்ல நையாண்டி மேளம்; 'ஆகாடா ஓகோடோ அடடா நம் கல்கிடா' எனப் பாடலாம்!

பொறையாறு, கங்காகணேசன்.

✉ பதக்கங்கள் கிடைத்தன. வேலைதான் கிடைக்கவில்லை என்ற தலைப்பில் வலுதூக்கும் வீராங்கனை கே. கங்காதேவி அளித்த பேட்டியை இவ்வார கல்கியில் படித்தேன். இந்தியா ஏன் விளையாட்டுத் துறையில் முன்னேறவில்லை என்பதற்கு வலு தூக்கும் வீராங்கனை கே. கங்காதேவி படும் கஷ்டம் ஒன்றே சாட்சி. கலைஞர் அரசு கங்காதேவிக்குக் கருணை காட்டுமா?

லால்குடி, எம். இராஜேந்திரன்.

✉ பழைய கூட்டணி (தி.மு.க – த.மா.கா.) மீண்டும் தொடர்ந்து விடுவதால் மட்டும் நாம் நிம்மதி பெருமூச்சு விட்டு விட முடியாது. ஆட்சிக்கு வரும் பட்சத்தில், முன்னர் செய்யாது விட்டுப் போன, 'காவிரி நதிநீர்ப் பங்கீடு' மற்றும் தெலுங்கு – கங்கைத் திட்டம்' உள்ளிட்ட திட்டங்களில் ஒருமித்த கருத்தோடு வெற்றிகாண வேண்டும். அதுவே, தமிழ் மக்களுக்குச் செய்யும் பெரும் பிரதி உபகாரமாக இருக்கும்.

தூத்துக்குடி, ப. சுகுமார்.

✉ சுயமரியாதை, பகுத்தறிவு, ஆத்திகம், நாத்திகம், மொழி, இனம், அரசியல் என்று சமூகத்தின் அன்றாட உணர்வுகள், சிந்தனைகள் பற்றிய அரிய கருத்துக்களை திரு. அன்பழகன் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். கல்கியின் பேட்டி சிறந்து விளங்கியது. பலரும் சிந்திக்க, நன்கு செயல்பட உதவும். பாராட்டுக்கள்.

சென்னை – 107, பி. கே. ரகுபதி.

✉ அன்பழகன் அவர்களின் பேட்டி ஒளிவுமறைவற்றிருந்தது. முக்கியமாக பகுத்தறிவுக் கொள்கை குறித்து அவரது விளக்கம் மிகத் தெளிவு!

நாட்ராம்பள்ளி, பாலு.



• கலைஞர்




• கதிரி கோபால்நாத்



• சந்தானகோபாலன்



• சஞ்சய் சுப்ரமண்யம்



• திருச்சி சங்கரன்

அபஸ்வரமாய் ஆரம்பித்த கலைஞர்!

புதிய படங்கள் ரிலீஸ் ஆகிற தியேட்டர்களில் இப்போதெல்லாம் அத்தனை கூட்டம் இருக்கிறதில்லை. ஆனால் இந்த இசை சீஸனில் நம்ப முடியாத ஆச்சர்யம் – சபா அரங்குகள் – அநேகமாக எல்லா இடங்களிலும் மாட்னியிலிருந்து நைட் ஷோ வரை ஹவுஸ் ஃபுல்! (வி.விலக்கு: தமிழிசைச் சங்கம்.) இன்னொரு ஆச்சர்யம் பார்வையாளர்கள் பக்கம் நிறைய '– 30க்கள்' – இரு பாலரும்! அடுத்த சீஸனில் பிளாக்கில் டிக்கெட் போகுமோ!

• நுங்கம்பாக்கம் கல்சுரல் அகாடமியில் கதிரி கோபால்நாத் கச்சேரி. சரியான கூட்டம். குன்னக்குடிக்கு அப்புறம் பாமர ரஞ்சகமான இசை, அதே சமயம் தரம் குறையாமல் தர முடியும் என்பதை மீண்டும் நிரூபித்து விட்ட கதிரி, தம் வாத்தியத்தை அந்த விரட்டு விரட்ட வேண்டாம் என்று தோன்றுகிறது. சாகித்யமோ, ஸ்வரமோ, நிரவலோ – சும்மா பற்ற வைத்த ராக்கெட் வேகம்தான் என்பது எல்லா கட்டத்திலும் ரசிக்கும்படி இல்லை. போதாக் குறைக்குப் பக்க வாத்தியமாக உட்காருகிற வயலின் குமரி, சில கட்டங்களில் ஸோலோ வாசிப்பதாகக் கருதிக் கொண்டு விடுகிறார். கதிரியும் கண்டு கொள்வதில்லை. ஆதலால், காலேஜ் எலக்ஷன் மாதிரி சமயத்தில் சகிக்க முடியாத ரகளை.

• ராமாராவ் கலாமண்டபத்துக்கு டூ-விலரில் கச்சேரி கேட்கப் போகிறவர்களுக்கு ஓர் ஆபத்து இருக்கிறது. நடக்கிற இடம் பிள்ளைகள் அதிகம் உலவும் இடம் என்பதாலோ, விடலைகள் மேயும் இடம் என்பதாலோ – காற்றைப் பிடுங்கி விட்டு விடுகிறார்கள். அமைப்பாளர்கள் கொஞ்சம் பாதுகாப்பு ஏற்பாடு செய்யலாம்.

• போன வருஷமே விமர்சகர்கள் சொல்லிப் பார்த்து விட்டார்கள். ஆனால் நித்யஸ்ரீ அத்தனை உரத்த குரலில் பாடுவதைத் திருத்திக் கொள்வதாய் இல்லை. மியூசிக் அகாடமியில் அவர் பாடிய சாவேரியில் மழைக்கு முந்தின காவேரி போல் ஏன் அப்படியொரு வறட்சி? கீர்த்தனைகளை ஹோலி பீல்டாகவும் தம்மை டைசனாகவும் நினைத்துக் கொண்டு, போடுகிற குஸ்தியைக் குறைத்துக் கொள்ளுங்கள் அம்மணி!

• ஆரஞ்சு ஜூஸை தினம் தினம் விலையேற்றி ஜாங்கிரியை மணிக்கொரு முறை விலையேற்றி பயமுறுத்திய மியூஸிக் அகாடமி கான்டீன்காரர்களுக்கு ஓர் எச்சரிக்கை: இப்படியே போனால் ரசிகர்கள் திறந்தவெளியில் தர்ணா கச்சேரி நடத்துவார்கள், ஜாக்கிரதை!

• அகாடமியால் இவ்வாண்டு சீனியராக ஆசீர்வதிக்கப்பட்ட சஞ்சய் சுப்ரமண்யம்,

அதற்குத் தாம் முற்றிலும் தகுதியுடையவர் என்பதை நிரூபித்தார்: பள்ளி மாணவனைப் போல, வியர்த்த முகத்தைத் தோள் பட்டையில் துடைத்துக் கொள்வதை நிறுத்தி விட்டாரே! பாட்டிலும் அவர் சீனியர் என்பதை அகாடமி விழித்துக் கொள்வதற்கு முன்பே ரசிகர்கள் அங்கீகரித்தாயிற்று. அன்று அவர் பாடிய கேதார கௌளையும் தோடி ராகம் தானம் பல்லவியும் வெகு நேர்த்தி. ஆனால் குதம்பைச் சித்தர் பாடலை இவ்வளவு இழுத்து இஸ்திரி போட வேண்டாமே!



• நித்யஸ்ரீ



• திருவிழா ஜெய்சங்கர்

● நெய்வேலி சந்தானகோபாலனைப் போல் கார்வையில் நிற்க இன்றைக்கு இன்னொரு பாடகர் கிடையாது. ஆனால் திடுதிடுப்பென்று அவர் மூச்சை வாயால் உள்ளிழுக்கிற ஒலி சகிக்கவில்லை. அதைக் கட்டுப்படுத்த விஷயம் தெரிந்தவர்களிடம் பயிற்சி பெறலாமே! அகாடமியில் நெய்வேலியாருக்கு அதியற்புதமாக மிருதங்கம் வாசித்தார் திருச்சி சங்கரன். பாடிய மிருதங்கம் என்று சொல்ல வேண்டும்... அத்தனை சௌக்யம்! அத்தனைக்கத்தனை உயிரில்லாத வயலின் திருப்பாற்கடல் வீரராகவனுடையது. பாடகர் இந்தப் பக்க வாத்தியத் தேர்வில் கவனம் செலுத்துவதோடு, டைம் மேனேஜ்மென்டும் கற்றுக் கொள்ள வேண்டும். ஏழரைக்கு முடிக்க வேண்டிய நிலையில் ஏழு பதிமூன்றுக்கு கமாஸ் ராகம், தானம் பல்லவி எடுக்கிறார்! 'வெண்ணெய் தின்ன சின்னத்தனமா...' என்று இரண்டு முறை பாடிவிட்டு 'பல்லவி'யை முடிப்பதற்குப் பதில் கமாஸில் ஒரு சின்ன கீர்த்தனை பாடி பெரிய பாராட்டு வாங்கியிருக்கலாமே!

● தமிழிசைச் சங்கத்தின் டிசம்பர் கொண்டாட்டம், திண்டாட்டமானதற்கு ரசிகர்கள் வராதது காரணமா, நிர்வாகக் குளறுபடியா என்பது பாப்பையா, லியோனி போன்றவர்களுக்கான சமாசாரம். சுதா ரகுநாதன் கச்சேரிக்கே ஆடிடோரியம் ஈ, கொசுவாடியது என்றால் கோளாறு பெரிசாகத்தான் இருக்க வேண்டும்.

தொடக்க விழாவில் திருவிழா ஜெய்சங்கருக்கு 'இசைப் பேரறிஞர்' பட்டம் அளித்துப் பேசிய கலைஞர், ''இசை வேளாளர்களின் கலைச் செல்வம் அத்தனையும் - பரதம் உட்பட - உயர் சாதிக்காரர்கள் எடுத்துக் கொண்டு விட்டார்கள். தவில், நாதஸ்வரம் மட்டும் விடுபட்டு விட்டது. காரணம் இதை வாசிக்க நிறைய இறைச்சி சாப்பிட வேண்டும்!'' என்று அபஸ்வரமாக சாதி சன்னதுகளைப் புகுத்தி ஆரம்பித்து வைத்தார்!

''என் தந்தை என்னை நாதஸ்வரம் வாசிக்கச் சொல்லி ரொம்பக் கட்டாயப்படுத்தியும் நான் மறுத்து விட்டேன். ஆனால் ஜெய்சங்கரின் தந்தை, அவரை 'நீ நாதஸ்வரம் வாசிக்கக் கூடாது' என்று வற்புறுத்தியும் அவர் இதில் மேதையாகி விட்டார்!'' என்று ஒரு காண்ட்ராஸ்டைச் சுட்டிக்காட்டி, ''இன்று ஜெய்சங்கருக்கு நான் பட்டம் சூட்டுகிறேன்!'' என்று முத்தாய்த்தார்.

— மோகனம்

'ஜெ' நடத்தும் அகோர ஹோமம் பற்றி...?

● அ. குமார், திருக்கொண்டீஸ்வரம்.

? ரஜினியே அமைதியாக இருந்தாலும் அவரைப் பத்திரிகையாளர்கள் ஏன் பெரிதுபடுத்துகிறார்கள்?

! அரசியல் களத்தில் அவரை எப்படியாவது இழுத்து விட்டுவிட்டால் சென்ற தேர்தல் போல் இப்போதும் பரபரப்பு ஏற்பட்டு பத்திரிகை விற்பனை கூடாதா என்கிற நப்பாசை தான்.

● ஆர். சுப்பராவ், திருக்கோவலூர். ❑

? ஜெயலலிதாவின் மீது படிந்துவிட்ட கரும் புள்ளியைத் தேய்த்துக் கழுவி பவுடர் பூச பா.ஜ.க.வினால் முடியுமா...?



• பொன் குடம்...!



• மண் குடம்!....

! 'அந்த முயற்சியெல்லாம் செய்யப் போவதில்லை; ஜெ. குற்றவாளி என்று தீர்ப்பானால் தண்டனை அனுபவிக்க வேண்டியதுதான்...' என்று வாஜ்பாய் திட்டவட்டமாகக் கூறிவிட்டாரே! 'அப்படியானால் இது சந்தர்ப்பவாதக் கூட்டணியா?' என்று கேட்டதற்கு, 'நாற்பதாண்டு கொள்கையுடன் நேர்மையாக ஆடினோம். மற்ற ஆட்டக்காரர்கள் அனைவரும் அழுகுணி அடித்தார்கள். நாங்களும் வேறு வழியின்றி அழுணி ஆடுகிறோம்' என்று ஒப்புக் கொண்டிருக்கிறார் வாஜ்பாய். மனம் உடைந்து போகிற அளவுக்கு வருத்தம் ஏற்படுத்துகிறது இந்த வாக்குமூலம்!




• சப்பைக்கட்டு சாம்பியன்!

● பாலு, நாட்றாம்பள்ளி

? லட்சக் கணக்கில் வருமான வரி பாக்கி வைத்திருக்கும் பெரிய நடிகர்கள் Vdis விளம்பரத்துக்கு 'போஸ்' கொடுக்கிறார்களே...? கசாப்புக் கடைக்காரன் அஹிம்சை பற்றிப் பேசுவது போலல்லவா இருக்கிறது...?

! வரி பாக்கி என்பது வேறு, வரி ஏய்ப்பு என்பது வேறு... இரண்டுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு என்பது ஒருபுறமிருக்க, வரிபாக்கி வைத்திருப்பவர்கள் தானே வருமான வரித்துறைக்குப் பயந்து கூப்பிட்டவுடன் விளம்பரத்துக்கு நடிக்க வருவார்கள்.



• மனமுடையவைக்கும் வாக்குமூலம்!

● பு.ப. சந்திரன், இராசை புதுப்பட்டி.

? காங்கிரசை அ.தி.மு.க. கழற்றிவிட்டதன் மூலம் தமிழகமே ஜெயின் கமிஷனுக்கு எதிராக உள்ளது என்றுதானே அர்த்தம்?

! ராஜீவ் காலமான கையோடு, அதற்கு 'தி.மு.க. தான் காரணம்' என்பதாகப் பொய்ப் பிரசாரம் செய்தது போல் இப்போது செய்ய முடியாது; மக்கள் விழிப்படைந்து காங்கிரஸின் இரட்டை வேடத்தைப் புரிந்து கொண்டு விட்டார்கள். இதை ஜெயலலிதா உணர்ந்து கொண்டிருப்பதால்தான் அவர் காங்கிரஸைக் கழற்றி விட்டு விட்டார்!

● ஜி. அர்ஜுனன், திருப்பூர் - 7.

? கல்கி விற்பனையில் தேக்கம் ஏற்பட்டுள்ளதாக ஏ.பி.சி. அறிக்கை கூறுகிறது என்று குமுதம் செய்தி வெளியிட்டிருக்கிறதே?

! பத்திரிகையின் தரம் பற்றியோ வாசகர்களின் வாழ்க்கைத் தரம் பற்றியோ, பத்திரிகையின் விற்பனையை அதிகரிக்கக் கையாளப்படும் முறைகள் பற்றியோ ஏ.பி.சி. அறிக்கை வாய் திறப்பதில்லை. விளம்பரதாரர்கள் இதையெல்லாம் கவனிக்காத போது, நல்ல பத்திரிகைகள் செழிக்க வழியும் இல்லை.

● மல்லிகை மன்னன், மதுரை - 17.

? அரசியல்வாதிகளுக்கு மானம், சூடு, சொரணை எதுவுமே கிடையாது என்பதைத் தானே பி.ஜே.பி - அ.தி.மு.க. கூட்டணி நிரூபித்திருக்கிறது?

! அரசியல்வாதிகளுக்கு இல்லாமல் போனால் என்ன... மக்களாகிய நமக்கு இருந்தால் போதும்!

● செ. ரோஜா, நாட்டரசன்கோட்டை.

? திருவண்ணாமலை கோயில் சுற்றுப் பிராகாரத்துக்கு விளக்கு வசதி செய்து தர அம்மாவட்ட கலெக்டர், ரஜினியிடம் கோரிக்கை வைத்ததும் பன்னிரண்டு லட்சம் ரூபாய் தந்து உதவிய ரஜினி பற்றி...?

! சென்று வந்த பக்தர்கள் வாழ்த்துகிறார்கள். கிரிவலப் பாதையைச் சீர் செய்யும் பணி ஒன்று பாக்கியிருக்கிறது. போன வருடமே ஒரு பொதுக்கூட்டத்தில் மூப்பனார் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. நினைவூட்டுகிறோம்.


● மு. இரவிச்சந்திரன், சேலம் - 9.

? விடுதலைப் புலிகள் விஷயத்தில் தி.மு.க.வைக் குறைகூறும் அ.தி.மு.க. புலிகளைத் தீவிரமாக ஆதரிக்கும் பா.ம.கவை கூட்டணியில் சேர்த்துக் கொண்டது ஏன்...?

! மாமியார் உடைத்தால் மண் குடம்; மருமகள் உடைத்தால்



• போட்டா....



• பரபரப்புக்காக...!

பொன்குடம் கதைதான்! 'பா.ம.கவின் விடுதலைப் புலி ஆதரவு என்பது பழங்கதை' என்கிற அசட்டுத்தனமான பொய் சமாதானம் வேறு!

● ச. ந. ராஜா சிதம்பரம்.

? அரசாங்க வேலை பார்க்கும் ஒருவருக்குச் சம்பளம் அதிகம்; வேலை குறைவு. ஆனால் மாடாய் உழைக்கும் உழைப்பாளிகளுக்கு (கூலி வேலை) வேலை அதிகம் சம்பளம் குறைவு... ஏன் இந்த அவல நிலை....?



! சோஷலிஸ சிந்தனையுடன் பார்த்தால் நீங்கள் கூறுவது அவல நிலைதான். ஆனால், யதார்த்த நோக்கில் பார்த்தால் சோஷலிஸ நாடுகளில் கூட இந்த அவல நிலை உண்டு. யதார்த்தம் என்னவெனில், திருக்குறள் 395. அதிகாரம் : கல்வி.

● வி. மோகன், நெல்லிக்குப்பம்.

? ஊழல் குற்றச்சாட்டு நிறைந்த அ.தி.மு.கவுடன் பா.ஜ.க. கூட்டணி வைத்துக் கொண்டிருக்கிறது என்று குறை கூறும் கேசரி, லல்லுவைச் சேர்த்துக் கொண்டிருக்கிறாரே?

! கேசரி மட்டுமா...? வாஜ்பாய் கூடத்தான் 'லல்லு ஊழலுக்கும் ஜெ ஊழலுக்கும் இடையே மலைக்கும் மடுவுக்கும் இடையேயான வித்தியாசம் உண்டு' என்பதாகப் பம்மாத்து பேசுகிறார். எந்த அரசியல்வாதியிடம்தான் நேர்மை, கொள்கை போன்றவற்றை எதிர்பார்க்க முடியும்...?!

● அ. முஸ்தபா, தக்கோலம்.

? இந்திய கிரிக்கெட் அணியினர் தொடர்ந்து தோல்வியைச் சந்திக்கிறார்களே... வெட்கமா கிராதோ?

! பெப்ஸி தொடரில் கௌஹாத்தியில் முதல் மேட்சில் கலக்கிட்டாங்களே! வெற்றியும் தோல்வியும் விளையாட்டில் மாறி மாறித்தான் வரும். பெப்ஸி கோப்பையையாவது கோட்டை விடாம இருக்காங்களா பார்ப்போம்...

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.



? 'எனக்கு நியாயம் கிடைத்ததற்காக நீதித்துறைக்கு நன்றி கூற வேண்டும்... நான் அப்பாவி என்பது நிரூபணமாகிவிட்டது...' ஜாமீனில் விடப்பட்டதற்காக லல்லு இப்படிச் சொல்கிறாரே?

• ....போட்டி!



• விளம்பர நடிப்பு!

! ஜாமீனில் வெளியே வருவதைக் கூட குற்றமற்றவர் என்று நிரூபணமாகி விடுதலையாகி விடுவது போல ஒரு மாயைத் தோற்றத்தை உண்டு பண்ணி மக்களை ஏமாற்றப் பார்க்கும் கீழ்த்தரமான செயல்தான் இது. லல்லுவுக்கும் ஜெவுக்கும் இதிலே போட்டா போட்டி!

● க. கந்தையா, நாகர்கோவில்.

? தேர்தலில் வெற்றி பெற ஜெ நடத்தும் அகோர ஹோமம் பற்றி....?

! தப்பித் தவறி ஜெ அணி தேர்தலில் ஜெயித்துவிட்டால் அகோர ஹோமம்தான் காரணம் என்றா சொல்வார்கள்? ஜெயலலிதாவின் செல்வாக்கு என்றுதான் பீற்றிக் கொள்வார்கள். தோற்று விட்டாலோ 'கிரக நிலை சரியில்லை; அகோர யாகம் செய்தும் பிரயோஜனப்படவில்லை' என நழுவலாம் அல்லவா...?

● இராம கமலக்கண்ணன், நாமகிரிப்பேட்டை.

? காங்கிரஸின் பலம் எது? பலவீனம் எது?

! சோனியா!

● சுகந்தி நாராயணன், சென்னை - 39.

? உட்கார்ந்த நிலையிலேயே குட்டித் தூக்கம் - ரயில் பயணத்திலா? பஸ் பயணத்திலா? எதில் சுகம்?

! ஞாயிற்றுக் கிழமை சற்று சாவகாசமாக மதிய உணவு சாப்பிட்டுவிட்டு வீட்டில் ஈஸி சேரில் சாய்ந்தால் செருகிக் கொண்டு போகுமே... அதற்கு ஈடு உண்டோ...?

❑ ரூ. 50 பரிசு பெறுபவர்:
ஆர். சுப்பாராவ்,
B-17, ஐந்தாவது தெரு. லக்ஷ்மி நகர்,
நங்கைநல்லூர், சென்னை - 600 061.



எக்ஸ்ட்ரா குரோயிங்
பவர்
இப்போது
1 கிலோ
சூப்பர்
சேவர்
பேக்கிலே
சேமியுங்கள்
ரூ. 25
CHOCOLATE FLAVOUR
Complan
COMPLETE PLANNED FOOD IN A DRINK
WITH 23 VITAL NUTRIENTS
NEW IMPROVED
SUPER SAVER PACK
SAVE Rs. 25
WITH SPECIAL SCOOP
தேர்ந்தெடுக்கப்பட்ட பெருநகரங்களில் மட்டுமே கிடைக்கிறது.





ஒரு புரட்சிப் பறவை மீண்டும் பறக்கிறது!

ஒரு சிறைப் பறவைக்கு சமீபத்தில் சீன அரசு விடுதலை அளித்திருப்பதை உலகம் ஆச்சரியத்துடன் பார்க்கிறது.


அந்த சிறைப்பறவை வே ஜிங்ஷெங். சீனாவில் ஜனநாயகம் மலரப் பாடுபட்டவர். அதனால் கடந்த நான்கு வருடங்களாக நோபல் (அமைதிப்) பரிசுக்கு இவர் பெயர் சிபாரிசு செய்யப்பட்டு வருகிறது. கி.பி. 2009 வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட இவரை சீன அரசு விடுவித்ததில் தன் பங்கு அதிகம் என்று பெருமைப்படுகிறது அமெரிக்க அரசு. சமீபத்தில் சீன ஜனாதிபதி ஜியாங் ஜெமீன் வாஷிங்டனுக்கு விஜயம் செய்தார். அப்போது, அரசியல் கைதிகளை சீன அரசு விடுவிக்க வேண்டும் என்று கிளின்டன் கேட்டுக் கொண்டார் – குறைந்தது இரண்டு வி.ஐ.பிக்களுக்காவது இந்தச் சலுகையை அளிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். அதன் விளைவுதான் சீனாவின் இந்த மனமாற்றமோ?

விடுதலை செய்யப்பட்டிருக்கும் வே ஜிங்ஷெங், சீனத் தலைநகரிலுள்ள மிருகக் காட்சிச் சாலையில் எலெக்ட்ரிஷியனாகப் பணிபுரிந்தவர். அவரும் அவரைப் போன்ற பல இளைஞர்களும் சீனாவின் உதவிப் பிரதமரான டெங் ஜியோபிங்கின் புரட்சிகரமான கருத்துக்களால் கவரப்பட்டனர். நாட்டில் ஜனநாயகம் மலர வேண்டுமென்று அரசுக்கெதிரான போஸ்டர்களைத் தொடர்ந்து ஒட்டினார்.

இவர்களையெல்லாம் நன்கு பயன்படுத்திக் கொண்டார் டெங் – தன் எதிரியும், மாசேதுங்கின் வாரிசாகக் கருதப்படுபவருமான ஹுவா குவா பெங்கை ஓரம் கட்டுவதற்கு! காரியம் முடிந்தவுடன் வே ஜிங்ஷெங்கின் மீது அடக்குமுறையைக் கையாளத் தொடங்கினார். ''இனி எதற்குப் புரட்சி? நான்தான் சீனாவை நவீனப்படுத்தப் போகிறேனே!'' என்று ஆசை வார்த்தை காட்டினார். கூடவே இனி எந்தவிதப் புரட்சி வாசகங்கள் அடங்கிய போஸ்டர்களையும் ஒட்டக் கூடாது என்று கடும் தடைவிதித்தார்.

''நாட்டில் ஜனநாயகம் இல்லையென்றால் நவீனப்படுத்துவதில் எந்த அர்த்தமும் இல்லை. அப்படி ஆட்சியாளர்கள் சொல்வது தங்கள் எதேச்சாதிகாரத்தை மூடி மறைப்பதற்காக மட்டுமே'' என்று முழங்கினார் வே.

'புரட்சி செய்த' காரணத்திற்காக 1979-ல் வே கைது செய்யப்பட்டார். பதினைந்து வருடங்கள் சிறைத்தண்டனை கிடைத்தது. சிறையிலிருந்தே நிறையக் கடிதங்கள் எழுதினார் – நண்பர்களுக்கும், ஆட்சி செய்தவர்களுக்கும். இவையெல்லாம் நூல் வடிவில் வெளிநாடுகளில் பிரசுரமாயின. (''தி கரேஜ் டு ஸ்டாண்ட் அலோன்''). உலகெங்கும் விநியோகிக்கப்பட்ட இந்த நூல் சீன இளைஞர்களைப் பெரிதும் கவர்ந்தது. ''டெங் அவர்களே, தியானென்மென் சதுக்கத்தில் ஆயுதமும் அனுபவமும் அற்ற இளம் குருத்துக்களை ராணுவத்தை ஏவிவிட்டு வெற்றிகரமாகத் தீர்த்துக் கட்டி



மிதக்கும் மேடைக் கச்சேரி!

மும்பையில் மலபார் ஹில்ஸ்ஸை அடுத்த வாக்கேஷ்வரில், படிக்கட்டுகளைப் பொறுமையாகக் கடந்து இறங்கி வந்து பார்த்தால் தெரியும் பிரம்மாண்டமான குளத்துக்குப் பெயர் பாண் கங்கா.

ராமேசுவரத்துக்குப் புறப்படுமுன் ராமரும் லட்சுமணரும் தண்ணீருக்காகத் தவித்து, ஒரு பாணத்தைத் தரையை நோக்கி விட்டபோது, பூமியிலிருந்து தண்ணீர் ஊற்றாகப் பொங்கி வெளிவந்ததாம். கங்கையே இப்படி வந்ததாகச் சொல்லுகிறார்கள். இன்னும் சற்றுக் கீழே இறங்கினால் கடல்! ஆனாலும் இந்தக் குளத்து நீரில் உப்புக் கரிப்பு என்பது துளிக்கூட இல்லை...

வருடா வருடம், ஊற்றை அடைத்துவிட்டு, அழுக்கான நீரை வெளியேற்றுகிறார்கள். மறுபடி ஊற்றிலிருந்து தண்ணீர் பெருகி, குளம் நிறைந்து விடுகிறது. பார்க்கக் கிட்டத்தட்ட நம் மயிலாப்பூர் கபாலி கோயில் குளம் அளவுக்குத்தான் இருக்கிறது. பக்கத்திலேயே வாலுகேசுவர் கோயில். குளத்தையும் கோயிலையும் கௌட சாரஸ்வத பிராமண அறக்கட்டளை நிர்வகிக்கிறது.

மகாராஷ்டிர அரசின் டூரிஸ டிபார்ட்மெண்ட், இந்த இடத்தில் ஐந்து வருடங்களாக, குளத்தின் நடுவில் மேடை போட்டு, சங்கீதக் கச்சேரிகள் நடத்தி வருகிறது. பிரபல கர்நாடக - இந்துஸ்தானி இசைக் கலைஞர்கள் வந்து பங்கு கொள்ளுகிறார்கள். சிட்டிபாங்க், ஹாங்காங் பாங்க் இரண்டும் ஸ்பான்சர் செய்யும் இந்த இசை நிகழ்ச்சிகளுக்கு டிக்கட் உண்டு. அப்படியும் கூட்டம் எக்கச்சக்கமாக வருகிறது! படிக்கட்டை ஒட்டி நாற்காலிகள் போட்டு விடுகிறார்கள்.

ஜனவரி முதல் வாரத்தில் நடக்கும் இந்த இசை நிகழ்ச்சிகளுக்கு, ஏராளமான வெளிநாட்டினர் வந்து ரசிக்கிறார்கள்! ●

- சித்தார்த்

படம் : **மகாராஷ்டிர டூரிசம்.**

விட்டீர்கள். இப்போதாவது சந்தோஷமா?'' என்றெல்லாம் இவர் எழுதிய கடிதங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றன.

1993-ல் இவருக்கு விடுதலை அளித்தது சீன அரசு. இந்த மனமாற்றத்திற்குப் பின்னணி வேறு. கி.பி. 2000ம் ஆண்டு ஒலிம்பிக்ஸை எங்கு நடத்தலாம் என்று தீர்மானிக்க ஒலிம்பிக்ஸ் குழு கூடுவதற்கு ஒன்பது நாட்களுக்கு முன் தான் இந்த விடுதலை. காரணம் அந்த ஒலிம்பிக்ஸ் தனது தலைநகரில் நடைபெற வேண்டுமென்று விரும்பியது சீனா. 'மனித உரிமைகள் நசுக்கப்படுகின்றன' என்ற காரணத்தால் அந்த வாய்ப்பு தன்னிடமிருந்து தட்டிப் போகக் கூடாது என்பதால் அந்தத் திடீர் சலுகை! (ஆனால் கடைசியில் அந்த வாய்ப்பு சிட்னிக்குச் சென்று விட்டது வேறு விஷயம்).

மனித உரிமைகளைப் பற்றி வே வேகமாக எழுதித் தள்ளினார். பல சீனத் தலைவர்கள் இதனால் கோபமடைந்தார்கள். 'அரசைக் கவிழ்க்க சதி செய்ததற்காக' பதினாலு வருடங்கள் மீண்டும் சிறைத் தண்டனை.

சிறையில் தினமும் அடி, உதை. அதிக ரத்த அழுத்தம், இதயச் சிக்கல் ஆகியவை கொண்ட வேயின் உடல்நிலை மிக பலவீனமடைந்தது.

சமீபத்திய விடுதலைக்கு அமெரிக்காவின் வற்புறுத்தலைத் தவிர இன்னொரு காரணமும் சொல்லப்படுகிறது. ''விடுவிக்கத் தயார். ஆனால் சீனாவில் இருக்கக் கூடாது'' என்று அரசின் நிபந்தனைக்கு இதுவரை ஒத்துக் கொள்ள மறுத்த வே, சமீபத்தில் இதற்கு உடன்பட சம்மதித்திருக்கிறார். அவரது குடும்பத்தினரின் வற்புறுத்தலும் காரணம். இப்போது மருத்துவ சிகிச்சைக்காக சிறையிலிருந்து அவர் நேராகச் சென்றிருப்பது அமெரிக்காவுக்கு.

இன்னொரு வி.ஐ.பி.க்கும் சீன அரசு விடுதலை அளிக்குமா என்ற கேள்வி இப்போது அரசியல் விமரிசகர்களின் மத்தியில் எழுந்துள்ளது. அவர் வாங் டென் - தியானென் மென் நிகழ்ச்சியில் தீவிரப் பங்கேற்ற மாணவர் தலைவர். ●

— ஜி.எஸ்.எஸ்.

நடக்குமென்பார், நடக்கும்!

மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*


உற்சாகத்துக்குக் குறைவு இல்லாமதான் இந்த வாரத்தைத் தொடங்குவீங்க. ஆனாலும் தொழில் ரீதியிலே கொஞ்சம் பிடுங்கல் இருக்கும். கௌரவப் பிரச்னை, அந்தஸ்துக்குப் பொருந்தாத காரியங்கள்ல ஈடுபடவேண்டிய சூழ்நிலை வரலாம்! பயந்துடாதீங்க. கூடப் பிறந்தவங்க மூலமான ஆறுதலும் அவசியமான கட்டத்துல உதவியும் கிடைக்கும். இந்த வாரம், எழுத்து, கணக்கு, விஞ்ஞானத் துறையைச் சேர்ந்தவங்களுக்குச் சில அதிர்ஷ்ட வாய்ப்புகள் வரலாம். பெண்கள், அடுத்தவங்களை அனுசரிச்சிப் போற குணத்தை வளர்த்துக்கிட்டா வாரக் கடைசில சில லாபகரமான வரவுகளை வாங்கி வெச்சுக்கலாம்!

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

ரொம்ப நாளா ஆசைப்பட்டுக்கிட்டிருந்த காரியம் ஒண்ணை இந்த வாரம் வெற்றிகரமா செஞ்சு முடிப்பீங்க. அதனால உற்சாகம் ஏற்பட்டு, பிற வேலைகளையும் சிறப்பா சாதிக்க முடியும். ஆனாலும் உடல் நலத்தில் அவசியம் கவனம் காட்டணும். பயணங்களால் உடல் நலக் குறைவு - வயிற்றுப் போக்கு, ஜுரம் இந்த மாதிரி வரலாம். பெண்கள் சிலருக்கு அறுவைச் சிகிச்சை அளவுக்குக் கூட உடல் நலக் கோளாறு வரலாம்! அரசியல்வாதிகள், அடக்கி வாசிக்க வேண்டிய காலகட்டம் இது. வாயைத் தொறந்தாலே வம்பு வருங்க, கவனம்! முதலீடுகள், புதிய பொருள் சேர்க்கை இந்த வாரம் வேணாம். கொடுக்கல் வாங்கல் வேணவே வேணாம்! புள்ளையார் கோவிலுக்கு இந்த வாரம் ஒரு தடவையாவது போயிட்டு வாங்க.

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

தொட்டது துலங்கற நேரம் வந்தாச்சு சார்! நல்ல பேரும் புகழும் வர்றாப்பல சிறப்பா ஏதாவது ஒரு காரியத்தை இந்த வாரம் செஞ்சு முடிப்பீங்க, பாருங்க. இஞ்சினியர்கள், கம்ப்யூட்டர்காரங்க, யு.எஸ். கனவுல இருந்தாங்கன்னா, இந்த வாரம் அதுக்குச் சாதகமான சிக்னல் ஒண்ணு கிடைக்கும். யோசிச்சி முடிவு எடுத்தா, அரசியல்வாதிகளுக்கு எல்லாமே சாதகமா அமையும் - தொகுதிப் பங்கீடுகள் உட்பட. தொழிலதிபர்களுக்குச் சின்ன அளவுல லேபர் பிராப்ளம் வரலாம். உஷாரா இருங்க. தாய்க்குலங்களுக்குத் தங்கம் சேருகிற வாய்ப்பு பிரகாசமா இருக்குது. அதனால வீட்டுக்காரங்க பாக்கெட் காலி! தோல், ரியல் எஸ்டேட், ஃப்ளாட் இந்த மாதிரி எதுலனா முதலீடு செய்ய நினைச்சீங்கன்னா ரொம்ப கவனம் அவசியம். இடறி விழ இப்ப வாய்ப்பு அதிகம்!



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

பயணங்கள் முடிவதில்லை சாரே! இந்த வாரம் கால்ல சக்கரம் கட்டினாப்பல ஊர் சுத்தப் போறீங்க! வெளியூர், வெளி நாட்டுத் தொடர்புகள் மூலமா நீங்க எதிர்பாராத ஒரு லக் அடிக்கப் போவுது. யாரையாவது உருகி உருகி லவ் பண்ணிட்டிருக்கீங்களா? ஒரு சின்ன ஊடலும் சமாதானத்துக்கப்புறம் எதிர்பாராத முத்தம் மாதிரி கிளுகிளுப்பான அனுபவங்களும் இந்த வாரம் இருக்கும். பெண்களுக்கு உற்சாகமான வாரம் இது. உங்க வீட்டுக்காரர் நீங்க சொல்றதைக் கேப்பார்! விருப்பங்களைக் கேட்டு வாங்கிக்கங்க. லாட்டரி, ஷேர் எல்லாம் அத்தனை லாபம் தராது. அந்தப் பக்கம் இப்ப போகாதீங்க. அரசு ஊழியர்களும் கூலித் தொழிலாளிகளும் ரொம்பக் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டிய நேரம் இது!

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

உங்களை அரிச்சிட்டிருக்கற பிரச்னைகள் நீங்கி, அமைதி பிறக்கப் போவுது. எடுத்த காரிய வெற்றி, புத்திக் கூர்மையால பாராட்டுகள், புதிய ஆபரண சேர்க்கை - இது இந்த வார நல்ல பலன்கள். சினிமா, எழுத்துத் துறைல இருக்கறவங்களுக்கு வளர்ச்சி அனேகமா இருக்கும். சிலருக்கு ராத்தூக்கம் கெடும். உணர்ச்சி வசப்படாம இருந்தீங்கன்னா, சில விரோதங்

ரிஷப ராசிக்காரரான அத்வானி அடக்கி வாசிக்க வேண்டிய வாரமாம் இது. வாயைத் திறந்தாலே வம்பு வரும் என்பதால் கவனமாக இருக்க வேண்டுமாம்!

டிசம்பர் 31 முதல் ஜனவரி 6 வரை

களைத் தவிர்க்கலாம். வீட்டுல பெரியவங்களை அனுசரிச்சி, விட்டுக் கொடுத்துப் போங்க. அதனால குடும்ப அமைதி நிரந்தரமா இருக்கும்.

கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

வசமான கூட்டணி சிக்காத அரசியல்வாதி மாதிரி இந்தவாரம் குழப்பத்துல தவிப்பீங்க. என்ன காரணம்? உங்க அவசரக் குடுக்கை நடவடிக்கைகளால ஏற்படற விரோதங்கள் தாம்! செலவு கட்டுக்குள்ள இருக்காதுங்கறதால மேலும் சிடுசிடுப்பு காட்டுவீங்க. ஆனா வாரக் கடைசில நிலைமை கொஞ்சம் சீராகும். விவசாயிகள், அரசுப் பணியாளர்களுக்குச் சாதகமான சூழ்நிலை கூடிவரும். புள்ளைங்களுக்குப் பெற்றோர் மூலம் அனுகூலம்; மனைவிகளுக்குக் கணவர் மூலம்! வீட்டுல வயசானவங்க இருந்தாங்கன்னா அவங்க மூலம் சில மருத்துவச் செலவுகள் வரலாம்!

துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

விருந்து சாரே, விருந்து! இந்த வாரம் ஒரு விருந்து, கேளிக்கை இருக்கு உங்களுக்கு. சினிமாக்காரங்க, டான்ஸ், பாட்டுப் பாடறவங்களுக்குப் புது வாய்ப்புகள், வெயிட்டான பண வரவு எல்லாம் இருக்கு! தொழிலதிபர்களுக்கு வெள்ளிக்கிழமை அன்னிக்கு எதிர்பாராத முன்னேற்றம் ஒண்ணு இருக்கு. கணவன் - மனைவி உறவு பிரமாதமா இருக்கும்! மாமியார் - மருமகள் உறவு அதுக்கு மேல்! வீடு, நிலம் வாங்கவோ, விற்கவோ சரியான வாரம் இது. சில பேருக்கு லாட்டரியில 1000 ரூ. வரைக்கும் கிடைக்கலாம்!

விருச்சிகம் : *(விசாகம் 4- ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

வீட்டுல விசேஷம், வெளியில உல்லாசம்! பார்ட்டி, கெட்-டுகெதர்னு ஜாலியான அனுபவங்கள் இருக்குது. இதனால சிலருக்கு வயிற்றுக் கோளாறு வரலாம்ங்கறது வேற விஷயம். மருத்துவ செலவும் இருக்கும். அரசியல்வாதிகளுக்கும் அரசுப் பணியாளர்களுக்கும் நல்ல அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடும். வீடு, ப்ளாட் வாங்கறது - இப்ப வேணாம். குழந்தைகள் நலனில் கவனம்! படிப்பு, உடல் நலன் ரெண்டு லயும்தான். சில பேருக்கு ஸ்தல யாத்திரை யோகம் தெரியுது. இல் லாட்டா சாது தரிசனம்!





தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*


எதிர்பாராத செலவுகளைத் தவிர்க்க முடியாது திடீர் பயணங்களையும்தான்! வீட்டுல முக்கியமான ஒரு பிரச்னையைத் தீர்க்க ரொம்பப் பாடுபடுவீங்க. உணர்ச்சி வசப்படாதீங்க. நிதானமா செயல்பட்டீங்கன்னா எல்லாமே சுமுகமா முடியும்! சிலருக்கு அலைச் சல்! வீண் செலவு இருக்கும். அரசியல்வாதிகள் எச்சரிக்கையோட செயல் படவேண்டிய காலகட்டம் இது. கவுக்கறதுக்கு ஒரு கும்பல் அலஞ்சிட்டு இருக்கு.


மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

புதிய எண்ணங்கள் தோணும். எல்லாம் உங்க வளர்ச்சி குறித்துத்தான். தைரியமா செயல்படுத்துங்க. வெற்றி நிச்சயம். இந்த வாரம் குடும்பத்துல சிறு பிரச்னை ஒண்ணு உண்டாகும். லேசா மனஸ்தாபம் உண்டாக்கும். தொழில், வியாபார நிலைமை மந்தமாத்தான் இருக்கும். நெருப்பு, காஸ் அடுப்பு, மின்சாரம் விஷயத்துல பெண்கள் கவனமா இருக்கணும். விபத்துக்கு சான்ஸ் இருக்கு. உறவினர்கள் வருகை, சிறு சுப நிகழ்ச்சி மூலம் கொஞ்சம் ஆறுதலும் கிடைக்கும்.














கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

உங்க குழப்பத்தையெல்லாம் மூட்டை கட்டி வெச்சுட்டு, ஆக வேண்டிய காரியத்தைப் பாருங்க. டைம் நல்லா ஓர்க் அவுட் ஆகாது. எல்லாரையும் அனுசரிச்சி, வேலைகளைப் பகிர்ந்து கொடுத்து, தட்டிக் கொடுத்துட்டே போனீங்கன்னா பிரச்னை ஏன் வருது? இந்த மாசம் குடும்பத் தலைவிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் சூப்பரான நேரம்! நீங்க நெனைச்சது நடக்கும். நல்லதையே நினைங்க! புத்திக் கூர்மையைப் பயன்படுத்தி, எதிரியையும் வளைச்சுப் போடப்பாருங்க. ஆல் தி பெஸ்ட்!

மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

குட்டி குட்டியா ரெண்டு மூணு பிரச்னை இந்த வாரம் உங்க உயிரை எடுக்கும்! நீங்க செய்ய வேண்டியது இதுதான். நிதானம்! நிதானம்! சில பேருக்கு உத்யோக ரீதில இடமாறுதல் இருக்கலாம். அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்காதீங்க. யோசனை முக்கியம். குடும்பத்துல மகிழ்ச்சிக்கும் குறைவு இருக்காது. சில பிரயாணங்கள் இருக்கும் நல்ல பலன்கதான் என்றாலும் பஸ்ஸுல, ரயில்ல போகும் போது எச்சரிக்கை அவசியம். பிக்பாக்கெட் கவனம்! வியாபாரிகளுக்கு வாரக் கடைசில நல்ல லாபம் கிடைக்கும்!

கட்டுப்படாமல் அலைக்கழித்தது கல்யாணி. பட்டாபிராமன் செக்குமாடாக ஒரே ஸ்வரத்தில் உழன்று சலித்து தம்பூராவைக் கீழே வைத்து விட்டு எழுந்தான். கண்ணாடி ஜன்னலை நிறைத்த நீல வானம் ஏளனமாய்ப் பரிகசித்தது.

'என்ன ஆச்சு உன் ஏகாக்கிர சித்தத்துக்கு...?' - ஒரு வெண்பஞ்சு மேகம் வந்து துக்கம் விசாரித்தது. அது அகன்று போக, வானம் மீண்டும் எகத்தாளம் பண்ணியது. 'என்னளவு விரிஞ்சு கிடக்கு கல்யாணி ராகம்... உன்னால் ஒற்றை ஸ்வரத்தைத் தாண்டி வர முடியலையே?...' 'நீ' 'நீ' 'நீ'.... கொய்யா மரத்து அணில் கூட கேலியாகக் கத்தியது. அந்த மரத்தடியில் காலந்தப்பிப் பூத்திருந்த ஊதா நிற டிசம்பர் பூக்கள்... சௌதாமினி பண்ணுகிற சுருதி பேதம் போல! கல்யாணியிலிருந்து சங்கராபரணத்துக்கொரு கட்சித் தாவல்! ஒரு சில வினாடிகள் அதில் சுழன்றடித்து விட்டு அலுங்காமல் திரும்பவும் கல்யாணிக்குள் புகுந்து கொள்ள, அதிசயத்தில் வாய்பிளந்து கைதட்டலால் அரங்கத்தை அதிர வைக்கும் கூட்டம்.

"சங்கீத சர்க்கஸ்...!"

- அருவருப்புடன் பட்டாபி முகம் சுளித்து விமர்சித்தால், "அதுக்குத்தானே கை தட்டல்..." என்பாள் பவித்ரா.

"கைதட்டலுக்காகத்தானா பாடறது...?"

"பின்னே எதுக்கு...?"

"ஆத்ம திருப்தி..."

"ஆத்மா, திருப்தி அதிருப்திக்கெல்லாம் அப்பாற்பட்டது.. இளையராஜா சொல்லிருக்கார், கல்கி பேட்டில... படிக்கலை...? சரி... உன் கொள்கை ஆத்ம திருப்தின்னே வைச்சுப்போம்... அப்படின்னா தினமும் கொஞ்ச நேரம் வீட்ல பாடினா போறுமே... மண்டைய உடைச்சுண்டு புரோகிராம் போட்டு, திருச்சினா தமிழ்ப்பாட்டு, தஞ்சாவூர்னா தியாகராஜர், தீக்ஷிதர், பெங்களூர்ல தாஸர் பதம், ஆந்திராவுல அன்னமாச்சார்யான்னு மாய்ஞ்சு மாய்ஞ்சு கூட்டத்திற்கு ஏத்த மாதிரி பாடறியா இல்லையா...? அதெல்லாம் விடு... பாடினா கேட்க ஆள் வேண்டியிருக்கில்லே..."

வேண்டித்தானிருக்கிறது... மேடை ஆரோகணிப்பும், மண்டையாட்டும் கூட்டமும், ஆலாபனையின் லயிப்பிலிருந்து இவன் விடுபட்ட பிறகும் அந்த அனுபவத்தில் தத்தளித்துத் ததும்பும் முகங்களின் காட்சியும்... இத்தனை பேரை ஆட்கொள்ள முடிகிறதே என்ற கர்வமும்... எல்லாமே



கொள்ளை கொள்ளையாகப் பிடித்திருக்கிறது.

பவித்ராவிடம் ஒப்புக் கொண்

டான். அவளிடம் எதையும் மறைப்பது சாத்தியமில்லை. பழகிய பல்லாங்குழி போல் அவன் மனத்தின் மேடு பள்ளங்களை நீவி அறிந்தவள்.

காஞ்சனா பிரகாஷ்ராவ்

அந்த அண்மையில்லாமல் பதினைந்து நாட்கள் சூன்யமாகத்தான் கழிந்திருக்கின்றன. கச்சேரிகளைப் பழுதின்றி முடித்துத் திரும்பினாலும், உள்ளே பல்லிளிக்கிற ரகசிய சூன்யம்.

பட்டாபி பயத்தில் இருந்தான். குருவை மட்டுமே நம்பி வளர்ந்த ஒரு வித்தை, ஆலமரம் போல் வளர வளர என்னென்ன ஆதரவுகளைத் தேடுகிறது! ரசிக்க ஒரு கூட்டம் வேண்டியிருப்பதோடு, வருடி சமன் செய்ய ஒரு துணையும் தேவைப்படுகிறது. பவித்ரா அவனறியாமலே அவன் வாழ்வில் நெசவாகியிருந்தாள்.

'உன்னைப் போல பொறாமை பிடிச்சவன் எவனாவது எழுதியிருப்பான்...' அவள் குற்றம் சாட்டியதில் கூட நியாயமின்றிப் போகவில்லை.

மொட்டைக் கடிதம் எழுதும் எண்ணம் எழவில்லைதான். ஆனால் அந்த நிகழ்வு ஒரு கணகுரூர மகிழ்ச்சியைக் கண்டிய பிறகுதான் வருத்தமாய் மாறியது. பவித்ராவின் மெல்லுணர்வு அதைப் பதிவு செய்ததும் அவன் வெறுப்பில் வெளியேறியதும் ஆச்சர்யமில்லை...



பட்டாபிராமன் ஒரு முடிவுக்கு வந்தான். சௌதாமினி சகல சௌபாக்யங்களுடன் பாடிக் கொண்டே இருக்கட்டும். இனி எந்த சக்தியும் என்னை ஹிம்சிக்க முடியாது.

தம்பூராவை எடுத்து வைத்துக் கொண்டு

3

[illegible] கனவுகள்

மீட்டினான். கல்யாணியை விட்ட இடத்தில் தொடராமல் மீண்டும் புதிதாய்ப் பாட ஆரம்பித்தான். அது தன் லாவண்யங்களில் அவனை ஆட்கொண்டது. முப்பதேழு நிமிடங்கள் கழிந்து, வியர்த்து, களைத்து திருப்தியுடன் தம்பூராவை கீழே வைத்த கணத்தில் டெலிபோன் ஒலித்தது.

நிதானமாக எழுந்துபோய் ரிசீவரை எடுத்தான்.

"ஹலோ..."

"நான் பவித்ரா பேசறேன்.."

கல்யாணி திரும்பவும் அலைமோதியது.

"......"

"பட்டாபி...! நான் பவித்ரா...."

"ம்...."

"ரொம்ப ஸாரி..."

"எப்ப வரே பவித்ரா?"

``Now...?''

"வா....!"

பதினைந்து நிமிடங்களில் வந்து சேர்ந்தாள். ஒரு மஞ்சள் உறையில் வாழ்த்து அட்டை.

"எனக்கின்னிக்கு பிறந்தநாளில்லையே...."

"தெரியும்..."

உறையைப் பிரித்தான்.

அவசரத்தில் வார்த்தைகள் கொட்டினாலும், அவ்வப்போது அசடு வழிந்தாலும், அடிக்கடி உன்னைத் திட்டினாலும்... அந்த எல்லா சந்தர்ப்பங்களிலுமே உன்னை நேசிக்கிறேன்.. அச்சிட்ட வாழ்த்து.

கீழே 'I am sorry'' என்று தன் வாட்டமுற்ற எழுத்தில் எழுதிக் கையொப்பமிட்டிருந்தாள்.

"எதுக்கு இது....?" பட்டாபி அவளை நேருக்கு நேராகப் பார்த்தான்.

"உன்கிட்டே கோவிச்சுண்டு போன மறுநாளே தியாகராஜன் போன் பண்ணினார்... ராஜாராமன்தான் அந்த மொட்டைக் கடுதாசி எழுதியிருக்கான். அதை அவனே ஒத்துக்கிட்டானாம்..."

"அப்படியா?"

``I am sorry பட்டாபி. அது தெரிஞ்சப்புறம் உன்னை வந்து எப்படிப் பாக்கறதுன்னே புரியலை... பயமாயிருந்தது."

கண்களின் சந்திப்பில் புதியதொரு சுருதி.

"உன் கோபம் நியாயமானது பவித்ரா. ஏன்னா என் பொறாமை உண்மையானது..."

"தேங்க் யூ. நீ இப்பவே பாதி ஜெயிச்சுட்டே... எப்போ உன் பலவீனத்தை ஒத்துக்கிட்டயோ அதுதான் அதை ஜெயிக்கறதுக்கும் முதல் படி.... ஐயோ! இன்னைக்கு நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன்... எப்படி கொண்டாடறது..?"

"என்ன செய்யலாம்...?"

"நீ பாடு பட்டாபி... ரொம்ப நாளாச்சு நான் கேட்டு..."


அவன் சிரித்தபடி தம்பூராவை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தான்.

"நேயர் விருப்பம் என்னவோ...?"

" 'ரஞ்சனி' பாடு. அதை நீ பாடிக் கேட்டு ரொம்ப நாளாச்சு..."

பட்டாபிராமன் மனத்துக்குள் இலேசாக முகம் சுளித்துக் கொண்டான். அது சௌதாமினியின் முத்திரைப் பாட்டு! அவள் மேடைத் தோற்றம் ஒரு நீண்ட கணத்துக்கு மனத்திரையை ஆக்கிரமித்துச் சீண்டியது.

இரண்டரை மாதங்கள் கழித்து சௌதாமினி திரும்பியபோது, சென்னை மாநகரம் தன் சொந்தக் குழந்தையாக அவளை ஏந்தி வரவேற்க, அந்தச் சீண்டல் 'பழைய பொறாமையாக வளருவேன்' என பயமுறுத்தியது!



"உங்க பக்கம் மானம் பார்த்த பூமிங்கறீங்களே நீங்க ராமநாத புரம் பக்கமா புதுக் கோட்டைப் பக்கமா?"
"பக்கத்திலே, மீனம்பாக்கம்தான். எல்லோரும் அடிக்கடி விமானம் வருதான்னு மேலே பார்த்தபடி இருப்பாங்க!"
— கரம்

சௌதாமினியும் பயந்து போயிருந்தாள். இவ்வளவு சீக்கிரத்தில் இதை அவள் எதிர்பார்க்கவில்லை. கல்யாணமாகி எட்டாவது மாதமே.... "குரல் போயிடுமா டாக்டர்...?"

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாதும்மா... பழைய பாட்டி கதை - யார்னா பயமுறுத்துனாங்களா...?"

"இல்ல, சொன்னாங்க..."

"அவங்க கிடக்கறாங்க.. நான் காரண்டீ. குழந்தை பிறந்த பிறகும் நீ இதே மாதிரி

மேடை மேடையா வெளுத்து வாங்குவே... பயப்படவே பயப்படாதே..."

''அந்த காரண்டீல்லாம் வேண்டாம் டாக்டர்... அதுல எனக்குச் சந்தேகமே கிடையாது...'' சௌதாமினியை உரசிக் கொண்டு உட்கார்ந்திருந்த தியாகராஜன் இழுத்தான்...

"பின்னே...?"

"நல்லபடியா safeஆ குழந்தை பிறக்கணும்... அந்த காரண்டியை நீங்க குடுங்க போதும். மிச்சத்தை நாங்க பாத் துக்கறோம்...''

டாக்டர் விமலா சிரித்தார். "நான் அதுக்கு காரண்டீ.. போதுமா... சௌதாமினிக்கு எல்லாம் நார்மலா இருக்கு. ஸ்கேன் கூட எடுத்துப் பார்த்தாச்சு...''

ஃபீஸ் கொடுத்துவிட்டு வெளியேறி காருக்கு வந்த பிறகு தியாக ராஜன் வாய் ஓயாது பேசிக் கொண்டே வண்டி ஓட்டினான்.

அவன் பேசப் பேச சௌதாமினி செவிகளை அணைத்துவிட்டு உள் நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள்.

இந்தக் கலகலப்பை மீட்கக் கொடுத்த விலைதான் எவ்வளவு பெரியது? சீக்கிரமே பொண்ணு பெத்துத்தரேன் என்று சொல்லியிருந் தாலும், அமெரிக்க பயணத்துக்குப் பிறகு வாய்தா வாங்க எண்ணியிருந்தாள். அடுத்த ஆண்டு மீண்டும் வர அழைப்புகள் குவிந் திருந்தன. இறக்கை முளைத்ததுபோல் ஊர் ஊராய்ப் பறப்பதும், புகழில் நனைவதும் சுக மாயிருந்தது. அடுத்த ஆண்டே மீண்டும் அந்த அனுபவங்களைப் புதுப்பித்துக் கொள்வ தென்றால்... எண்ணமே இனித்தது.

அதை வெளியிட்டதும் தியாகராஜன் சுருங்கிப் போனான். மறக்கப்பட்ட அத்தி யாயம் என்று மூடி வைத்ததைத் தூசு தட்டி எடுக்க ஆரம்பித்தான். இத்தனைக்கும் ராஜா ராமனைச் சந்தித்த பிறகு அமெரிக்காவுக்கு போன் செய்து சுருக்கமாக விஷயத்தைச் சொல்லி, தான் தெளிவாகி விட்டதாக உறுதி தந்தவன்தான்.

அந்த உறுத்தலேயின்றி மீண்டும் தனிக் குடித்தன ரம்மியங்களில் அமிழ்ந்த வேளையில், "எப்போ? எப்போ?எப்போ...?" -நச்சு பண்ண ஆரம்பித்தான்.

"என்னது எப்போ...?"

"நமக்குப் பொண்ணு எப்போ பிறக்கற தாம்...?"

"இன்னும் டூ இயர்ஸ்...?"

"கிடையவே கிடையாது..."

''இல்ல தியாகு... திரும்பவும் அடுத்த வருஷம் அமெரிக்கா வரச் சொல்லியிருக் காங்க..."

"ஐயோ! அதெல்லாம் முடியவே முடி யாது..."

"இல்ல தியாகு, இந்த ஒருமுறை மட்டும்... ப்ளீஸ்..."


"அப்போ ஒண்ணு செய்.. இந்தத் தடவை யாவது 'மூஜாமூமனை' அழைச்சுட்டுப் போ... அவனுக்காவது திருப்தியாயிருக்கும்..."

– தொனி மாறாமல் அவன் சொன்னதில் விளையாட்டுதானென்று ஏமாந்து போனாள்.

"சே! அது சரியான அசடு. ஒரு முறை திருச்சில கச்சேரி. அம்மா கூட வரமுடியாம போய்டுத்து... என்னைக் கல்யாணம் பண்ணிக்கோ பண்ணிக்கோன்னு ரொம்பப் படுத்தியெடுத்துடுத்து அந்த ராஜாராமன். சரியான தண்ணி கேஸ்..."

ஸ்டாம்ப் வாங்கப் பணமில்லாமல் ஒரு பல்கலைக் கழகம்!

கேரள முதல்வர் ஈ.கே. நாயனார் சட்டசபை களில் பேசிய 53 பிரசங்கங்கள் அடங்கிய புத்தகம் ஒன்று வெளிவந்துள்ளது. அருமையான வெள்ளைத் தாள்களில் அச்சிடப்பட்டு, காலிகோ பைண்ட் செய்து, பிளாஸ்டிக் உறை போட்டு... என்று வெளி நாட்டுப் புத்தகங்களைப் போல் வெளியிடப் பட்டுள்ளது. இதில் என்ன விசேஷம் என்கிறீர்களா? முதல் வரின் பிரசங்கங்கள் அடங் கிய, சுமார் நானூறு ரூபாய் விலை மதிப்புள்ள ஒரு புத் தகம் அரசு செலவில் அச் சடிக்கப்பட்டு, அனைவருக் கும் இலவசமாக விநியோகம் செய்யப்படுவதுதான்! இது சர்ச்சையைக் கிளப்பா விட் டாலும் பிரமிப்பை ஏற் படுத்தியுள்ளது!



கேரள பல்கலைக் கழகம் தன்னிடம் படித்துப் பட்டம் பெற்ற 5,000 மாணவ - மாணவியரின் மார்க் ஷீட்டுகளை அனுப்ப முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறது. காரணம் பணம்! 5,000 பேருக்கும் பதிவுத் தபாலில் அவற்றை அனுப்ப ஒன்றே முக்கால் லட்ச ரூபாய் தேவை. இந்தத் தொகை முன்பே மாணவ - மாண வியரிடமிருந்து வசூலிக்கப்பட்டதுதான் என்றாலும் அதை ஊழியர் சம்பளம் போன்ற செலவுகளுக்குப் பயன்படுத்திக் கொண்டு விட்டது பல்கலைக் கழகம். பாவம், மாணவ - மாணவியர்!

திருவனந்தபுரத்திலிருந்து : எஸ்.எஸ். மணி

பஸ் பயணிகள் பிரச்னைக்கு விடிவே இல்லையா?

மூன்று மணி நேரம் மற்றும் அதற்கு மேல் ஓடும் அரசுப் பேருந்துகள் நடுவழியில் மோட்டல்களில் (Motor + Hotel = Motel) சிற்றுண்டி மற்றும் உணவுக்காக நிறுத்தப்படுவது வழக்கம்.

''சுத்தமோ, சுகாதாரமோ இல்லாத கண்ட கண்ட கடைகளில் பஸ்களை நிறுத்துகிறார்கள். இதனால் உடலுக்குக் கேடு விளைவதோடு, பகற் கொள்ளை விலைகளால் பர்ஸ¬ம் பலவீனப்பட்டுப் போகிறது'' என்கிறார், அடிக்கடி பயணம் செய்யும் மருத்துவப் பிரதிநிதி ஆனந்த். இப்பிரச்னையை ஆனந்த் மட்டும் சந்திக்கவில்லை; கணக்குப் போட்டுப் பார்த்தால் ஒவ்வொரு நாளும் சுமார் 5 லட்சம் முதல் ஏழு லட்சம் பயணிகள் வரை சந்திக்கிறார்கள்.

அரசு ஓட்டுநரும், நடத்துநரும் இப்படி கண்ட கண்ட கடைகளில் நிறுத்துவதாக நிறைய புகார்கள் போனதால் மாமண்டூர், கொட்டாம்பட்டி, திருமயம், சுயத்தாறு போன்ற பல ஊர்களுக்கு அருகே சில போக்குவரத்துக் கழகங்களே மோட்டல்களை ஏற்படுத்தின. ஆனால் ஓட்டுனர்களின் ஒத்துழைப்பு இல்லாததால் மாமண்டூர் தவிர மற்ற மோட்டல்கள் எல்லாம் இழுத்து மூடப்பட்டு விட்டன.

சென்னையிலிருந்து மாமண்டூர் வழியே போகும் பேருந்துகளுக்கெல்லாம் 'அந்த மோட்டலில்தான் நிறுத்த வேண்டும்' என்று அரசு கூறியிருப்பதாலும், அந்த 'ரூட்'டில் பஸ்கள் அதிகம் என்பதாலும் அந்த மோட்டல் மட்டும் இன்னும் நிலைத்திருக்கிறது. அதிலும் கூட பல விரைவுப் பேருந்துகள் நிற்காமல் டபாய்க்கத்தான் செய்கின்றன.

''சரியான மதிய உணவு நேரம் என்பது 12:30 முதல் 1:30 வரைதான். 11:00 மணிக்கும், 11:30 மணிக்கும் மாமண்டூரைக் கடந்தால், எப்படி நிறுத்த முடியும்?'' என்று கேட்கிறார் ஒரு விரைவுப் பேருந்து நடத்துனர். இதுபோக, அசைவ உணவுக்கு ஆசைப்படும் ஓட்டுநர், நடத்துனர்கள் அசைவ உணவகத்தில்தான் நிறுத்துகிறார்கள். இதனால் தீவிர சைவத்தைக் கடைப்பிடிப்பவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

''சைவமோ, அசைவமோ ஒழுங்கான சாப்பாடு போட்டால் தேவலையே! நாற்றம் பிடித்த அரிசியையும் அழுகின காய்கறிகளையும் அல்லவா போடுகிறார்கள்! இதைக் கண்டக்டரும், டிரைவரும் எப்படித்தான் விரும்பிச் சாப்பிடுகிறார்களோ?'' என்று சிலர் கேட்கும் கேள்வி அர்த்தமற்றது. ஏனென்றால் பெரும்பாலான இடங்களில் ஓட்டுநர், நடத்துநருக்கு தனியறையில் தனி ஸ்பெஷல் சாப்பாடு (இலவசமாகத்தான்!) போடப்படுகிறது. எனவே, வெளியே – மக்கள் எதைத் தின்று அவதிப்படுகிறார்கள் என்பதே பல ஓட்டுநர், நடத்துநர்களுக்குத் தெரியாது.

அத்துவானக் காட்டிலிருக்கும் இந்தச் சாலையோர ஹோட்டல்கள் பஸ்களை எப்படி கவர்கின்றன? அருகிலிருக்கும் பெரிய நகர பஸ் ஸ்டாண்டுகளுக்குச் சென்று அந்த வழியே வரும் பஸ்களின் டிரைவரைச் சந்தித்து கேன்வாஸ் செய்

"இல்லாட்டி பண்ணிண்டிருப்பியோ...?"

–அப்போதுதான் அவன் விஷம் தடவிப் பேசுவது விளங்கியது. அடி பலம்தான். ஆனால் வலியைக் காண்பித்துக் கொண்டால் மேலும் அடிப்பான். இவனை அங்குலம் அங்குலமாக அளந்து வைத்திருக்கிறாள்.

"என்ன தியாகு...! அதை விடுங்க... நீங்க என் வாழ்க்கைல பங்கேற்கணும்னு இருக்கறச்சே அதெல்லாம் நடக்குமா... சொல்லுங்க...ம்..." நெருங்கி அமர்ந்து அணைத்துக் கொண்டான்.

"சொல்லுங்க... அடுத்த வருஷம் அமெரிக்கா போக வேண்டாம் அவ்வளவு தானே...? சரி. அதுக்கு பதிலா அமெரிக்காவை இங்க வரவழைச்சுடுவோம்... நம்ம பொண்ணுக்கு..."

அவன் முற்றிலும் இறுக்கம் தளர்ந்து போனான். "சௌதாமினி இஸ் எக்ஸ்பெக்டிங்னு தெரிஞ்சா டயபர்லேருந்து பொம்மை வரைக்கும் எல்லாத்தையும் அனுப்பிடுவாங்க அமெரிக்கா ஃப்ரெண்ட்ஸ்..."

"அவங்க கிடக்காங்க..." அவன் பேச்சுக்குத் தன் இதழ்களால் என்றுமில்லாத வேகத்துடன் முற்றுப் புள்ளி வைத்தான்.

இன்று அவன் பேசிக் கொண்டேயிருக்கிறான்... அர்த்தமில்லாத ஒலிகளாக அவற்றை



கின்றன – 'ஒரு தடவை நிறுத்திப் பாருங்கண்ணே' என்று! ஒரு தடவை வருபவர்களுக்குச் சிறப்பான உணவு, பழம், வெற்றிலை, பாக்கு, சிகரெட் பாக்கெட் என்று கவனித்து, அவர்களை ரெகுலர் கஸ்டமர்களாக்கி விடுகிறார்கள். சில ஹோட்டல்காரர்கள் உலகைச் சுற்றுவதற்கு பதில் அம்மையப்பனைச் சுற்றியே காரியம் சாதித்து விடுவதுண்டு. அதாவது யூனியன் தலைவர்களைச் சந்தித்துப் பேசி யூனியனுக்கு நன்கொடையை வெட்டி விடுவார்கள். பிறகு யூனியனே தன் ஓட்டுநர்களை சம்பந்தப்பட்ட இடங்களில் நிறுத்தச் சொல்லி பரிந்துரை செய்து விடும்!

வெளி விலையை விட டபுள் பங்கு வசூலித்துவிட்டு தரமில்லாத உணவு மற்றும் சிற்றுண்டிகளை வழங்குவது முறைதானா? ஒரு ஹோட்டல் உரிமையாளரிடமே, இதைக் கேட்டோம். ''முழுக்க, முழுக்க பயணிகளை நம்பித்தான் இருக்கிறோம். அதிலும் எல்லாப் பயணிகளுமே சாப்பிடுவார்கள் என்று சொல்ல முடியாது. எனவே சாப்பிடுகிறவர்களிடமிருந்தே முழு லாபத்தையும் எடுக்க வேண்டியுள்ளது. தவிர, டிரைவர் கண்டக்டர்களுக்கு ஆகும் செலவையும், தீபாவளி, ஆயுத பூஜை என்றால் யூனியன்களுக்குத் தரும் நன்கொடையையும் நாங்கள் வேறு யார் தலையில் வைப்பது?'' என்கிறார் அவர்.

ஒரு வருடத்திற்குத் தமிழகம் முழுக்க, தமிழ்நாட்டு மக்கள் தொகை அளவுக்குப் பயணிகள் பாதிக்கப்படும்போது, ரயில்வே மாதிரி போக்குவரத்துத் துறையும் கேன்டீன் விஷயத்தில் கவனம் செலுத்தினால் என்ன? ''இப்போதைக்கு தனியிடமின்றி ரோட்டின் மீதே இருக்கும் ஹோட்டல்களில் பஸ்ஸை நிறுத்தினால் மட்டும் 'மெமோ' கொடுக்கத்தான் எங்களுக்கு அதிகாரம்'' என்கிறார் ஓர் அதிகாரி. ●

— எஸ். ஜே. இதயா

படம் : கிரண்நியூஸ்

அவள் கேட்கிறாள். மனம், இழந்த சந்தர்ப்பத்தையும் இழக்கப் போகும் வாய்ப்புகளையும் மதிப்புப் போட்டுப் பார்க்கிறது.

யோசித்தால், வாழ்க்கை ஒரு பம்பர் லாட்டரி பரிசாகத்தானிருக்கிறது. முயற்சியின்றி, ஒரு மூன்று மணி கச்சேரியில் விழுந்த பரிசு. அதன் பிறகு எல்லாமே ஏறுமுகம்தான். அந்த மூன்று மணிக் கச்சேரியைத் தூக்கி வைத்து எழுதிய விமர்சகரின் வலிமை தன் சங்கீதத்துக்கு இருக்கிறதா...?

பிள்ளை உண்டானதிலிருந்தே சௌதாமினிக்குள் இந்தக் கேள்வி அடிக்கடி எழுந்து விழுந்து கொண்டிருந்தது. விழ விழ, புதுப்பிக்கப்பட்ட பலத்துடன் எழுந்து வாட்டியது. பிள்ளைப்பேறு என்கிற இடைவெளிக்குப் பிறகு சௌதாமினி தியாகராஜன் என்னவாயிருப்பாள்...? அவள் சங்கீதம் என்னவாயிருக்கும்...?

வலி எடுத்து நர்ஸிங் ஹோமில் சேர்க்கிற வரையில் கேள்வி நீடித்தது.

சொப்பு வாயும் சிமிழ் சிமிழாய்க் கண்ணுமாக தியாகராஜன் கேட்டது போலவே ஏழரை பவுண்டில் பெண் குழந்தை பிறந்த பிறகோ... கேள்வி வடிவமாற்றம் பெற்றது. சௌதாமினி தியாகராஜன் பிழைத்து வருவாளா...?

(தொடரும்)


என்டைஸ் என்டைஸ் என்டைஸ்
சர்க்கரைப் பொங்கலில்
தேன்மழை...
என்டைஸ் துணிகளில்
எத்தனை வகை!
என்டைஸ் பொங்கல் கலெக்ஷன்.
ஒவ்வொன்றும் மகிழ்ச்சியூட்டும்
வண்ணக்களஞ்சியம்.
உங்களுக்காக. உங்கள்
குடும்பத்திற்காக.
அனைத்து துணிரகங்களுக்கும் 10% தள்ளுபடி
1.12.97 முதல்
16.1.98 வரை
என்டைஸ்®
சிறந்த துணி ரகங்கள். சரியான விலை.
நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பொரேஷன்
(தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி) லிமிடெட்
ஒரு மத்திய அரசு நிறுவனம்
35-B, சோமசுந்தரம் மில்ஸ் ரோடு, கோயமுத்தூர் - 641 009.

எதிலும் இனிமை

பூவாக மலர்வது இனிமை!
பூவாத மலருக்குள் உதிர்வதும் இனிமை!
தொட்டில் பிறையாவது இனிமை!
தொட்டிலாய்ப் பிறையேத்தி அசைவதும் இனிமை!

வீணையாய் இசைப்பது இனிமை!
மீட்டாத பாடலாய் அதிர்வதும் இனிமை!
தண்ணீராய்க் கிடைப்பது இனிமை!
தாகமாய்த் தவித்துத் துடிப்பதும் இனிமை!

பயணமாய் நகர்வது இனிமை!
பாதையாய்ப் பயணம் வளர்ப்பதும் இனிமை!
வெற்றியாய் முடிவது இனிமை!
வெற்றியின் விதையாய்த் தோற்பதும் இனிமை!

கண்ணீர் துடைப்பது இனிமை!
கண்ணீரில் அதற்குநாம் மிதப்பதும் இனிமை!
பசித்துக் கிடப்பது இனிமை!
பரிமாற நம்மைநாம் சமைப்பதும் இனிமை!

மரணத்தை மணப்பது இனிமை!
வாழ்க்கையால் மாலைநாம் தொடுப்பதும் இனிமை!
உதயமாய்ச் சிரிப்பது இனிமை!
உதயத்தின் கர்ப்பமாய் இருள்வதும் இனிமை!

— தமிழன்பன்

டெலிவிஷனாகட்டும் ரேடியோவாகட்டும் 'லைவ்' நிகழ்ச்சி என்றாலும் சரி, சாதாரண நிகழ்ச்சித் தயாரிப்பானாலும் சரி சமயங்களில் சமயோசிதமாகப் பலவற்றைச் செய்ய வேண்டியிருக்கும். அகில இந்திய வானொலியில் 'ஏ' கிரேடு கலைஞராகவும், கர்நாடக இசை நிகழ்ச்சி தயாரிப்பாளராகவும் இருக்கும் திருமதி விஜயலட்சுமி வேணுகோபால் நினைவு கூறும் சில சுவையான அனுபவங்கள்...

ஒன்... டூ... த்ரீ:

கதையல்ல அனுபவங்கள்!

● ஓர் இளம் வீணை வித்வானின் கச்சேரி நேரடியாக ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. திடீரென்று ஒரு தந்தி அறுந்து போய்விட்டது. அதுவும் மிக முக்கியமான பஞ்சம தந்தி. ஒலிப்பதிவுக் கூடத்திலிருந்து, மற்ற தந்திகளில் வாசித்து, சில நிமிடங்கள் சமாளிக்கும்படி சைகை காட்டிவிட்டு, கிடுகிடுவென்று, ஓடிப் போய், நிலைய வித்வான்களுக்குரிய வீணையை எடுத்துக் கொண்டு வந்தேன். அவருடைய இசைக்கேற்ப புதிய வீணையில் நானும் சுருதி சேர்த்துக் கொண்டே வந்து, ஒரு சில விநாடிகளில் தந்தி அறுந்த வீணையை வாங்கிக் கொண்டு, புதிய வீணையை அவரிடம் சேர்த்தேன். கச்சேரியைக் கேட்டுக் கொண்டிருந்த நேயர்கள் இந்தத் தடங்கலை உணராதபடி, சமயோசிதமாகச் செய்த செயலை இன்று நினை ..நாலும் திரில்லாக இருக்கும்.

● அப்போது எனக்குக் காலை பத்து மணி முதல் மாலை ஐந்து மணிவரை டியூட்டி. 9.50 மணிக்கு வானொலி நிலையத்துக்குள் நுழைந்தேன். நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஞானஸ்கந்தன் பதற்றத்துடன் நின்று கொண்டிருந்தார். "10.10 கச்சேரியில் பாட வேண்டிய வித்வான் வந்து சேரவில்லை. நேரே ஸ்டுடியோவுக்குப் போ. நீயே பாடிவிடு!" என்றார். என்னால் மறுக்க முடியாத இக்கட்டான சூழ்நிலை. நேரே ஒலிப்பதிவு அறைக்குச் சென்று விட்டேன். நான் பாடப் போவது பற்றிய அறிவிப்புச் செய்கிற நேரத்தில் முதல் பாட்டு பற்றிய விவரங்களை எழுதி, அறிவிப்பாளருக்குக் கொடுத்து விட்டு, என்னைத் தயார்படுத்திக் கொண்டேன். முதல் பாட்டு அறிவிப்பின்போது, அடுத்த பாட்டு பற்றிய விவரங்களை எழுதிக் கொடுத்து விட்டேன். இப்படியே செய்து, ஐம்பது நிமிடக் கச்சேரியை நிறைவு செய்தேன். இந்த திடீர் கச்சேரி கூட மிக நன்றாக அமைந்தது.



● ஒரு தடவை, பிரபல பெண் இரட்டையர்களின் கச்சேரியை ஒலிப்பதிவு செய்து கொண்டிருந்தேன். கச்

சேரியை அவர்கள் முடித்தபோது 58 நிமிடங்களே ஆகியிருந்தன. எனவே, இரண்டு நிமிடங்களுக்குச் சின்னதாய் ஏதாவது பாடி கச்சேரியை நிறைவு செய்யும்படி நான் கேட்டபோது, அவர்கள் சொன்ன பதில், "நாங்கள் பிரிப்பேர் பண்ணிக் கொண்டு வரவில்லை!"

● பாலமுரளி கிருஷ்ணாவின் ஒரு மணி நேர 'லைவ்' கச்சேரி. அவர் பாடி முடித்து விட்டு, நிறைவு செய்யும் விதமாக 'ஜாவளி' பாடத் துவங்கியபோது, இரண்டு நிமிடங்கள் பாக்கி. நான் இதைச் சைகையில் தெரிவிக்க 'ஓ.கே' என்று கண்ணசைப்பில் சொல்லிவிட்டு, வெகு கச்சிதமாய் இரண்டு நிமிடங்களில் ஜாவளியை முடித்து, பிரமிப்பை ஏற்படுத்தினார் பாலமுரளி!

● டெல்லி, மற்றும் சென்னை ஆர்க்கெஸ்டிரா பங்கேற்கும் 'வாத்ய விருந்து' நிகழ்ச்சி டெல்லியில். சுமார் எழுபது கலைஞர்கள். ஐம்பது மைக்குகள். முதல் வரிசையில் வீணைக் கலைஞர்கள், அடுத்து கோட்டுவாத்தியம், இன்னபிற. மூன்றாவது வரிசை நாற்காலிகளில் வயலின் கலைஞர்கள்.

புகழ் பெற்ற காமா சாஸ்திரிதான் நிகழ்ச்சியின் நடத்துனர். டெல்லியின் வி.ஐ.பி.கள் பலரும் அரங்கில் அமர்ந்திருந்தனர்.

காமா சாஸ்திரி 'ஒன்... டு... த்ரீ...' என்று சொல்ல, 'டமால்' என்று பெரிய ஓசை. வயலின் கலைஞர் ஒருவரின் நாற்காலி கீழே விழ, அவரும் வயலினுடன் தரையில் சரிந்தார். அரங்கில் திகைப்புடன் கூடிய அமைதி. அப்புறம் எல்லாம் சரிப்படுத்தப்பட்டு, நிகழ்ச்சி ஆரம்பித்தாலும், விழுந்த அந்த வயலின் கலைஞரின் முகத்தில் கடைசிவரை ஒரு தர்மசங்கட உணர்வு இருந்தது.

● எம்.ஜி.ஆர். மறைவையடுத்து துக்கம் அனுஷ்டிக்கப்பட்டபோது, எனக்குப் பாட வாய்ப்புத் தரப்பட்டது. மிருதங்கமும், வயலினும் மென்மையாய் இசைக்க, நான் 'பேதாஸ்' தொனிக்க, பாடல்களைப் பாடி முடித்தேன்.

சில நாட்கள் கழித்து, ஒரு நேயரிடமிருந்து கடிதம் வந்தது. என் கச்சேரியை மிகவும் ரசித்துப் பாராட்டிவிட்டு, "இது போன்ற கச்சேரிகளை ரேடியோவில் அடிக்கடி ஒலிபரப்ப வேண்டும்!" என்றும் கேட்டுக் கொண்டிருந்தார்!

● இன்னொரு பிரபல, இரட்டையரின் நேரடி ஒலிபரப்புக் கச்சேரி. கீர்த்தனைகளைத் தீர்மானித்துக் கொண்டு வந்தவர்கள், என்ன ராகம் என்று பேசிக் கொள்ளவில்லை போலும்! ஒரு கீர்த்தனையை ஒருவர் ஸ்ரீரஞ்சனி ராகத்தில் பாட, இன்னொருவரோ கமாஸில் பாட, எனக்கு ஒரே டென்ஷன். இரண்டு பேரில், ஒருவருக்குக் கொஞ்சம் காது மந்தம் என்பதால், அவர் இந்த தடுமாற்றத்தைச் சட்டென்று உணராதது டென்ஷனை அதிகப்படுத்தியது. ஒரு வழியாய் இரண்டு பேரும் ஒரே ராகத்துக்கு மாறி எனது டென்ஷனைக் குறைத்தார்கள்!

● ஒரு தடவை ஒரு நாதஸ்வரக் கச்சேரி. நாதஸ்வரம், மைக்கிலிருந்து சற்று விலகியிருக்கவே, அதைச் சற்று மேலே தூக்குங்கள் என்று கையைக் காட்ட, அதைத் தவறாகப் புரிந்து கொண்ட வித்வான், எழுந்து நின்று விட்டார். நான் பதறிப் போய், உட்காரும்படி கையைக் காட்ட, அவர் உட்கார்ந்து கொண்டார். மறுபடியும் மைக் அருகில் நாதஸ்வரம் இல்லை. எனவே, அதனை சற்று மேலே தூக்கி வாசிக்கும்படி சைகை தர, அவருக்குக் கோபம் வந்து விட்டது. நாதஸ்வரத்தைக் கீழே வைத்து விட்டு, "என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்? வாசிக்கவா, வேண்டாமா?" என்றாரே பார்க்கலாம்!


● இன்னொரு சமயம், ஒரு நாதஸ்வர குழுவுக்கு, பத்து நிமிடம் இருப்பதை பத்து விரல்களால் சைகையில் தெரிவித்தேன். அதை நான் போதும் என்று சொல்லுவதாகப் புரிந்து கொண்டு கச்சேரியை நிறுத்தி விட்டார்கள்!

தொகுப்பு : **கௌதம்**

"தலைவர் ரொம்ப கோபத்துல இருக்காராமே, ஏன்?"

"நான் பொது வாழ்விலிருந்து விலகப் போறேன்'னு அவர் அறிக்கை விட்டதும் தொண்டர்கள் அவருக்குப் பாராட்டு விழா நடத்தினாங்களாம்!"

— பா. ஜெயக்குமார்



பூலோக சப்பாகட்டி இவர்தான்!

ஆரம்பத்தில் சென்னைப்பட்டினம் பாடகர்களின் பட்டினமாகவே இருந்திருக்கிறது. வடக்கே இருந்து வந்த பலே வித்வான்கள் தஞ்சாவூருக்குப் போய் தங்கள் பெருமையைப் பீற்றிக் கொள்வதற்கு முன்னால் சென்னைப் பட்டினத்தில் சற்றே தங்கிச் சென்றிருக்கிறார்கள். அப்படி வந்த ஒரு பலேவித்வான் பொப்பிலி கேசவய்யா. அவருக்கு, "பூலோக சப்பா கட்டி" என்றும் ஒரு பெயர். அப்படீன்னா "உலகத்தையே பாயாகச் சுருட்டிக் கொள்ளும் படே இல்லாடி"ன்னு அர்த்தம்! மனுஷன் குதிரையிலேதான் போவாராம். எல்லா சமஸ்தானத்தையும் விசிட் பண்ணி சமஸ்தானத்து, ஆஸ்தான வித்வான்களுடன் சங்கீத கோதாவில் இறங்கி, அவர்களைத் தோற்கடித்து, அவர்களுடைய தம்பூரா, அவர்களுக்கு ராஜா கொடுத்த அரிய பரிசுகள் எலலாத்தையும் பந்தயத்தில் ஜெயித்து வாங்கிக் கொண்டு போவாராம். மனுஷன் குதிரையிலே போகும்போது, பின்னாலேயே ஒரு வண்டி போகும். வண்டி நிறைய தம்பூராக்கள், சால்வைகள் இத்யாதி... எல்லாம், தோற்ற வித்வான்கள் இவரிடம் கொடுத்தவை.

பூலோக சப்பாச்கட்டி என்ற பொப்பிலி கேசவய்யா பட்டினத்தில் சங்கீத சாதகம் செய்த இடம் எது தெரியுமா? மெரீனாவுக்கு அருகிலுள்ள பழைய நேப்பியர் பாலத்தின் அருகிலுள்ள மரத்தடி. அன்றைக்கு ஊருக்கு ஒதுக்குப் புறமாய், நிசப்தமாய் இருந்த இடம் அதுதானாம்!



பந்தர் ஸ்ட்ரீட்டில் தியாகைய்யர்

தியாகைய்யர் தஞ்சாவூரிலிருந்து, காஞ்சிபுரம், திருப்பதி என்று யாத்திரைக்குப் போனபோது, வழியில் இங்கே பந்தர் ஸ்ட்ரீட்டிலுள்ள கோவூர் சுந்தரேச முதலியாருக்குச் சொந்தமான பங்களாவில் தங்கி இருக்கிறார். தங்கி இருந்த நாளில் ஆறுநாள் தேவ காந்தாரி ராகம் பாடி இருக்கிறார்!

சங்கீத கோதா

பட்டினம் வருகின்ற அன்றைய வித்வான்களுக்கு தாஜ்கோரமண்டல் எது தெரியுமா? 89, ராமஸ்வாமி தெரு, ஜார்ஜ் டவுன்தான். ஜார்ஜ் டவுனில் 1880ல் ஒரு சங்கீத கோதா நடந்தது. கோதாவில் குதித்தவர்கள் மகா வைத்தியநாத ஐயரும், வேணு என்பவரும். இந்தக் கோதாவின் அம்பயர் போட்டோகிராபர் மாசிலாமணி முதலியார். வேணு தாள ஞானத்தில் வல்லவர். புதிய ராகத்தில் பல்லவி பாடி அசத்தலாம் என்றிருந்தார். மகா வைத்தியநாத ஐயரோ எல்லோருக்கும் தெரிந்த சங்கராபரணம் பாடுவதாயிருந்தார். மகா வைத்தியநாத ஐயரே முதலில் பாடட்டும் என்று சொல்லி விட்டார் வேணு. மகா வைத்தியநாத ஐயருடன் வயலின் வாசிக்க வந்த வெங்கோபராவ் இதில் ஏதோ விஷமம் இருக்கிறது என நினைத்து, "சங்கராபரணம் பாடாதேயும், நிறைய பேர் பாடாத ராகமான நாராயண கௌளையைப் பாடும்" என்று கேட்டுக் கொண்டார். மகா வைத்தியநாத ஐயரும் அமர்க்களமாய் அழகாய் நாராயண கௌளைப் பாடினார். வேணுவுக்கு மகா வைத்யநாத ஐயர் என்ன ராகம் பாடுகிறார் என்றே புரியவில்லை. பிறகென்ன? மகாவைத்தியநாத ஐயர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப் பட்டார்!

தொகுப்பு : சிந்தா ரவி

ஆதாரம் : The Madras Tercentenary Commemoration Volume



என்னைச் செதுக்கிய எண்ணங்கள்!

— எம்.எஸ். உதயமூர்த்தியின் அனுபவத் தொடர்

• • • • •

பத்மா ரவிசங்கரின்

இன்று வாழலாம் வா!

— துப்பாக்கியால் எழுதும் ஆக்ஷன் தொடர்!



பட்டுக்கோட்டை பிரபாகரின்

நான் உன்னை சுவாசிக்கிறேன்

— மயிலிறகால் எழுதும் காதல் தொடர்

எல்லாம் அடுத்த வார பொங்கல் சிறப்பிதழில்தான் அசத்தலாக ஆரம்பமாகின்றன!

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Annual Subscription : India Rs. 208/-; Overseas Rs. 1200/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 104/-; Overseas Rs. 600/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/ 97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka